REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk / ThinakaranLK

# தினகரன்
THINAKARAN தினகரன்

2022 ஜூலை 15 வெள்ளிக்கிழமை

வரு. 90 இல. 165 | Friday 15, July, 2022 | 12பக்கங்கள் | 40/-

### கடந்த ஆறுமாத காலப்பகுதியில்
## வீதி விபத்துகளில் சிக்கி 1,459 பேர் உயிரிழப்பு



வீதி விபத்துகள் காரணமாக இந்த ஆண்டின் முதல் 6 மாதங்களில் 1,459 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார். 04

# அரச ஊழியர்களது சம்பளம் வழங்குவதில் சிக்கல் இல்லை

### தகவல்கள் தவறு; அரச தரப்பு விளக்கம்




அரச ஊழியர்களுக்கான ஜூலை மாத சம்பளம் வழங்குவதில் சிக்கல் இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய பொருளாதார மற்றும் அரசியல் சூழ்நிலை காரணமாக அரச ஊழியர்களுக்கு ஜூலை மாதத்திற்கான சம்பளத்தை வழங்க முடியாது என தகவல்கள் வெளியாகியிருந்தன. எனினும், அவ்வாறானதொரு நிலைமை ஏற்படுவதற்கான சூழல் இல்லை என அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கு தேவையான பணம் பொதுவாக அந்தந்த நிறுவனங்களின் கணக்குகளில் வைப்பில் இருக்கும். 04

### பொதுச்சொத்துக்கள், கேந்திர நிலையங்கள், பொதுமக்கள் உட்பட
# நாட்டின் பாதுகாப்பு இராணுவத்தினரிடம்
### முப்படைகளும் மக்களை பாதுகாக்க தீவிரமாக செயற்படும்



**சட்டம், ஒழுங்கை பேண வன்முறையாளர்கள் மீது பலப்பிரயோகம் செய்ய பொலிஸாருக்கும் முப்படையினருக்கும் பூரண அதிகாரம்**

(லோரன்ஸ் செல்வநாயகம்)

பொதுச்சொத்து, அனைத்து கேந்திர நிலையங்கள் மற்றும் மக்களின் உயிர்களை பாதுகாக்கும் பொறுப்பு இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் இராணுவத்தினர் தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை பிரயோகப்படுத்துவதில் எவ்விதத்திலும் பின்நிற்கப் போவதில்லை எனவும் இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இராணுவத்தினருக்கோ அல்லது மக்கள் சொத்துக்களுக்கோ பாதிப்புகளை ஏற்படுத்துவது மற்றும் வன்முறையை அதிகரிப்பதற்கு செயற்படும் அனைவரும் உடனடியாக அந்த வன்முறை நடவடிக்கைகளிலிருந்து 04

# ஜனாதிபதி இராஜினாமா



### சிங்கப்பூரிலுள்ள இலங்கை தூதரகம் ஊடாக கடிதம் அனுப்பி வைப்பு

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது இராஜினாமா கடிதத்தை சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தனவுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

சிங்கப்பூரில் உள்ள இலங்கைத் தூதரகம் ஊடாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அனுப்பி வைத்த இராஜினாமா கடிதம் கிடைத்ததாக சபாநாயகரின் ஊடகப் பிரிவு நேற்று உறுதி செய்தது.

இராஜினாமாக் கடிதத்தின் சட்டபூர்வ தன்மை தொடர்பில் மீள ஆராயப்பட்டபின் இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பை இன்று மக்களுக்கு உத்தியோகபூர்வமாக அறிவிப்பதாக சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன மேலும் தெரிவித்தார். 04





கொழும்பு, கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகையிலிருந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் நேற்று அங்கிருந்து வெளியேறிய பின் இராணுவத்தினர் கடமையிலீடுபட்டனர். கடந்த 5 நாட்களாக ஆர்ப்பாட்டக்காரர்களால் ஜனாதிபதி மாளிகை முற்றுகையிடப்பட்டு பொதுமக்கள் பார்வைக்காக திறந்து விடப்பட்டிருந்தது. (படம்: சுலோச்சன கமகே)



### அத்தியாவசிய சேவைகளுக்கான
## எரிபொருள் விநியோக வேலைத்திட்டத்தை சமர்ப்பிக்குமாறு உச்ச நீதிமன்றம் உத்தரவு
03

## துப்பாக்கியை அபகரித்தவர்களால் வன்முறைகள் மோசமாக வாய்ப்பு
### அவதானமாக இருக்க மக்களிடம் இராணுவம் கோரிக்கை



பாராளுமன்ற வளாகத்தில் நேற்றுமுன்தினம் (13) புதன்கிழமை இரவு இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது பாதுகாப்பு தரப்பினர் இருவர் ஆர்ப்பாட்டக்காரர்களால் பாரதூரமாக தாக்கப்பட்டு, அவர்களிடமிருந்த ரி56 ரக துப்பாக்கி அபகரிக்கப்பட்டுள்ளது.

அந்த துப்பாக்கியைக் கைப்பற்றியவர்கள் அதனைக் கொண்டு வன்முறைகளை மேலும் அதிகரிக்கும் வகையில் செயற்படக் கூடும் என்பதால் பொது மக்கள் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் நிலாந்த பிரேமரத்ன தெரிவித்தார்.

இது தொடர்பில் விசேட 04

## வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ளப் போவதில்லை
### மஹிந்த, பசில் நீதிமன்றத்திற்கு அறிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்






வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ளப் போவதில்லை என முன்னாள் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ, முன்னாள் நிதியமைச்சர் பசில்ராஜபக்ஷ மற்றும் நிதியமைச்சின் முன்னாள் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல ஆகியோர் தமது சட்டத்தரணிகள் மூலம் உச்ச நீதிமன்றத்திற்கு நேற்று அறிவித்துள்ளனர்.

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு காரணமானவர்களுக்கு எதிராக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு இலங்கை 04

### முழுமையான கட்டணங்கள் செலுத்தப்பட்டது
## 40,000 மெ.தொன் டீசலுடன் கப்பல் இன்று நாட்டுக்கு வரும்
### மேலும் சில எரிபொருள் கப்பல்கள் அடுத்த வாரம்



40,000 மெற்றிக் தொன் டீசலை ஏற்றிய கப்பல் இன்று வெள்ளிக்கிழமை நாட்டை வந்தடையுமென இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (CPC) தெரிவித்துள்ளது.

எரிபொருளை ஏற்றி வரும் கப்பலுக்கு உரிய கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் தெரிவித்தார்.

பெற்றோல் மற்றும் டீசல் 04

## 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தவும்
### பதில் ஜனாதிபதியிடம் டக்ளஸ் வேண்டுகோள்



நாட்டை வழிநடத்துவதற்கான சந்தர்ப்பம் உருவாகும் பட்சத்தில் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை கவனத்தில் கொண்டு, அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எடுத்துரைத்துள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலைவரங்கள் மற்றும் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக பிரதமருக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கும் இடையில் நேற்று 04

### பாராளுமன்ற வளாக ஆர்ப்பாட்டம்:
## எமக்கும் அதற்கும் எந்த தொடர்புமே கிடையாது
### காலிமுகத்திடல் போராட்ட குழு தெரிவிப்பு



பாராளுமன்ற வளாகத்திலும், சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்ல வளாகத்திலும் வன்முறையான வகையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தரப்பினருக்கும் தமக்கும் எவ்வித தொடர்பும் 04

## தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்க்கமான முடிவெடுங்கள்
### யாழில் மதத்தலைவர்கள் வலியுறுத்து

பருத்தித்துறை விசேட நிருபர்



தற்போதைய நெருக்கடிநிலையில் தமிழ்மக்களின் பிரச்சினைக்கான தீர்வினை முன்வைப்பதற்கு அனைத்து பாராளுமன்றப் பிரதிநிதிகளும் ஒன்று கூடி தீர்க்கமான முடிவெடுக்க வாருங்கள் என யாழ்ப்பாணத்தில் மதத்தலைவர்கள் கூட்டாக வலியுறுத்தியுள்ளனர்.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விசேட ஊடக சந்திப்பிலேயே சமயத் 04

## தீர்வு தாமதித்தால் பதற்றம் உக்கிரமாகும்
### டளஸ் அழகப்பெரும கருத்து



கட்சித்தலைவர்களின் கூட்டத்தில் கடந்த 9 ஆம் திகதி ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இணக்கத்திற்கு அமைய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற 04

### ஜனாதிபதி மாளிகை, அலரி மாளிகைகளிலிருந்து
## போராட்டக்காரர்கள் வெளியேறி இராணுவத்திடம் கையளிப்பு


(லோரன்ஸ் செல்வநாயகம்)



கையகப்படுத்தப்பட்ட ஜனாதிபதி மாளிகை, அலரி மாளிகை மற்றும் பிரதமரின் செயலகம் ஆகியவற்றிலிருந்து வெளியேறி இராணுவத்திடம் கையளித்ததாக காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்கள் நேற்றுத் தெரிவித்தனர். போராட்டத்தை கைவிடாமல் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பப்போவதாக தெரிவித்துள்ள அவர்கள், இக் கட்டடங்கள் நாட்டு மக்களின் சொத்துக்கள் என்பதால் அக்கட்டடங்களிலிருந்து வெளியேற தீர்மானித்தாக அவர்கள் 04

### பிரதமர் அலுவலகம், பாராளுமன்ற பகுதியில்
## ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 84 பேர் ஆஸ்பத்திரியில்!

(லோரன்ஸ் செல்வநாயகம்)



கொழும்பில் பிரதமர் அலுவலகம் மற்றும் பத்தரமுல்லை பாராளுமன்றத் திற்கருகாமையில் நேற்று முன்தினம் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களில் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 84 ஆக அதிகரித்துள்ளதுடன் அவர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருவதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. 04

### நாட்டில் சட்டவாட்சியை உறுதிப்படுத்தவும்
## வன்முறை சம்பவங்களுக்கும் வன்மையான கண்டனங்கள்
### அமெரிக்க தூதுவர் ஜூலி டுவிட்டர் பதிவு



நாட்டில் சட்டவாட்சியை உறுதிப்படுத்துமாறு இலங்கைக்கான அமெரிக்க தூதரகம் வலியுறுத்தியுள்ளது.

அனைத்து வகையான வன்முறைகளையும் கண்டிப்பதாக இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங்(Julie Chung) டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

நீண்ட கால பொருளாதார மற்றும் அரசியல் 04

## கொழும்பில் இன்று அதிகாலை 5 மணிவரை ஊரடங்குச் சட்டம்



லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டில் அவசர காலச் சட்டம் நடைமுறையிலுள்ள நிலையில் நேற்று மதியம் 04

**90 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்**

## சர்வதேச செய்திகள்

# பாகிஸ்தானில் அதிகரித்துவரும் பொருளாதார நெருக்கடி

பாகிஸ்தானின் பொருளாதார நிலை மோசமடைந்து வருவதால் அது சமூக அமைதியை குலைக்கக் கூடுமெனவும் அரசின் முன்னுக்குப் பின் முரணான கொள்கைகள் காரணமாக முதலீட்டாளர்கள் அதை தமக்கு சாதகமற்றதாகக் கொள்ள முடியுமெனவும் வர்த்தக சமூகம் கருத்து தெரிவித்துள்ளது.



பாகிஸ்தானுக்கென தொடர்ச்சியான பொருளாதாரக் கொள்கைகள் கிடையாது. அரசிடம் அரசியலுக்கென தனியான கொள்கைகளும் பொருளாதாரத்துக்கென தனியான கொள்கைகளும் இருக்க வேண்டும். அவ்வாறு அமையாவிட்டால் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை அது பாதிக்கவே செய்யும் என்று பாகிஸ்தான் வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனத்தின் முன்னாள் உப தலைவர் சாதிக் ஃபையாஸ் மாகூன் தெரிவித்துள்ளார். பாகிஸ்தான் அரசு வங்கியின் வைப்புகளின் மீதான வட்டி 7.5 சதவீதமாக 2021இல் காணப்பட்டதாகவும் இது பத்து மாதங்களுக்கும் குறைவான காலப்பகுதியில் 15 சதவீதமான அதிகரிப்பைக் காட்டியிருப்பதாகவும் 'டோன்' பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் எப்போதுமே உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வட்டி மற்றும் நாணயமாற்று வீதங்களிலேயே கரிசனையாக இருப்பார்கள். கட்டுப்பாடின்றி அவை ஏற்ற இறக்கம் காணுமானால் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பாகிஸ்தானைத் தவிர்க்கவே செய்வார்கள் என மாகூன் குறிப்பிட்டிருப்பதாக அப்பத்திரிகை மேலும் சுட்டிக்காட்டியிருந்தது.

'முதலீட்டாளர்கள் டொலர்களில் முதலீடு செய்து பாக். ரூபா வழியாக வருமானம் ஈட்டுபவர்கள். ரூபா மதிப்பு இறக்கம் காணும் நிலையில் இங்கே முதலீடு செய்ய தயக்கம் காட்டவே செய்வார்கள்' என்று அவர் தெரிவித்துள்ளதோடு ஜூன் மாத பணவீக்கம் 21.32 சதவீதமாக அதிகரித்து இருப்பதாகவும் கடந்த 13 வருடங்களில் இதுவே உயர்பட்ச அதிகரிப்பு என்பதையும் கோடிட்டு காட்டியுள்ளார்.

# முன்னாள் ஜப்பானிய பிரதமரின் மறைவுக்கு மகிழ்ச்சி தெரிவிக்கும் சீனர்கள்



முன்னாள் ஜப்பானிய பிரதமர் ஷின்ஸோ அபே படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக சீன இணைய தளங்களில் மகிழ்ச்சி தெரிவிக்கப்பட்டிருப்பது சீனாவின் கௌரவத்துக்கு இழுக்காக அமைந்திருப்பதாக கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில தினங்களுக்கு முன்னர் முன்னாள் ஜப்பானிய பிரதமர் நாராவில் உரையாற்றிக் கொண்டிருந்தபோது சுட்டுக் கொல்லப்பட்டார். அவர் மறைவுக்கு உலகத் தலைவர்களும் ஏனையோரும் இரங்கல் தெரிவித்தனர். ஆனால் சில சீன இணைய தளங்களில் சிலர் மகிழ்ச்சி தெரிவித்து பதிவுகளை இட்டிருந்தனர். சீன சமூக ஊடகமான வெய்போவில் சிலர் பழைய சீன – ஜப்பானிய உறவுகளை நினைவுபடுத்தி சீனர்களைப் பொறுத்தவரை இம்மரணம் ஒன்றுமேயில்லை என்று குறிப்பிட்டிருந்தனர்.

சாதாரண சீன மக்களான நாம் அவர் மரணதுக்காக வருந்தவில்லை. சீனாவுக்கு விரோதமான யின்ஸோ அபே மற்றொரு ஜப்பானியரால் சுட்டுக் கொல்லப்பட்டது சாதாரண சீனர்களுக்கு மகிழ்ச்சியானதே என்று ஒரு சீனர் பதிவிட்டிருந்தார்.

### எரிபொருள், வரி அதிகரிப்பை அடுத்து

# பாக். கடன் திட்டத்தை மீள ஆரம்பிக்க சர்வதேச நாணய நிதியம் இணக்கம்

பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுக்கும் பாகிஸ்தானுக்கு 1.17 மில்லியன் டொலர்களை வழங்கும் இடைநிறுத்தப்பட்ட கடன் திட்டத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கு சர்வதேச நாணய நிதியம் நேற்று வியாழக்கிழமை இணங்கியுள்ளது.

நிர்வாக சபையின் ஒப்புதலை இன்னும் பெறவேண்டிய நிலையில் 'பணியாளர் மட்டத்திலான உடன்படிக்கை' ஒன்று எட்டப்பட்டதாக நாணய நிதியம் வெளியிட்ட அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது. இது நீடிக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் 4.2 பில்லியன் டொலர் கடனைப் பெற வழிவகை செய்கிறது.



இதன்மூலம் அடுத்த ஆண்டு ஜூன் மாதம் வரை நீடிக்கும் வகையில் கடன் தொகை 7 பில்லியன் டொலர்களாக அதிகரிக்கப்பட வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்திடம் 6 பில்லியன் டொலர் கடன் பெறுவதற்கான ஒப்பந்தம் 2019 இல் அப்போதை பிரதமர் இம்ரான் கானுடன் செய்துகொள்ளப்பட்டது. எனினும் மானிய ஒப்பந்தங்களை அவரது அரசு நிராகரித்தது மற்றும் வரி சேகரிப்பை குறிப்பிடத்தக்க வகையில் அதிகரிப்பதற்குத் தவறியதால் இந்த ஒப்பந்தம் பல முறை நிறுத்தப்பட்டது.

இந்நிலையில் கடந்த ஏப்ரல் மாதம் பதவி ஏற்ற பிரதமர் ஷெஹ்பாஸ் ஷரீப் அரசு மக்களிடம் பிரபலம் பெறாத தீவிர சிக்கன நடவடிக்கைகளை கடந்த பல மாதங்கள் மேற்கொண்ட நிலையிலேயே புதிய உடன்படிக்கை எட்டப்பட்டுள்ளது.

அந்த அரசு எரிபொருள் மானிங்களை நீக்கியதோடு வரி அமைப்பை விரிவுபடுத்த புதிய நடவடிக்கைகளை அறிமுகம் செய்தமை குறிப்பிடத்தக்கது.

"பாகிஸ்தான் ஒரு சவாலான பொருளாதாரக் கட்டத்தில் உள்ளது" என்று சர்வதேச நாணய நிதியக் குழுத் தலைவர் நதன் போர்டர் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார். இந்த நிலைக்கு வெளிக் காரணிகள் மற்றும் உள்நாட்டுக் கொள்கைகள் மீது அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

மோசமான வருவாய் மற்றும் குறைந்து வரும் அந்நியச் செலாவணி காரணமாக கடனை செலுத்துவதில் நெருக்கடியான சூழல் ஏற்பட்டிருப்பதால் பாகிஸ்தான் அதன் பொருளாதாரத்தில் சர்வதேச உதவியை நாடியுள்ளது.

இந்நிலையில் பாகிஸ்தானின் புதிய அரசு சர்வதேச நிதி நிறுவனத்தின் கோரிக்கைகளுக்கு ஏற்ப அதன் மானியங்களை நீக்கியுள்ளது. இது ஏற்கனவே இரட்டை இலக்கத்தில் உள்ள பணவீக்கத்திற்கு மத்தியில் போராடும் மக்களின் கோபத்துக்கு காரணமாகலாம் என்று அஞ்சப்படுகிறது.

இம்ரான் கான் அரசை நம்பிக்கையில்லாத் தீர்மானம் மூலம் பதவி கவிழ்த்து ஆட்சிக்கு வந்த புதிய அரசு, நாட்டின் பொருளாதாரத்தை திசை திருப்புவதற்கு கடிமான முடிவுகளை எடுக்கும் என்று தெரிவித்துள்ளது.

நாட்டின் பொருளாதாரம் மோசமடைவதற்கு முந்தையை ஆட்சி மீது தற்போதைய அரசு குற்றம்சுமத்துகிறது. பல தசாப்தங்கள் இடம்பெற்ற மோசமான முகாமைத்துவம் மற்றும் ஊழலை மற்றும் பரந்த அளவான வரித் தவிர்ப்புகளை கையாள்வதற்கு தவறியதே இந்த நிலைக்குக் காரணம் என்று பொருளாதார நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.

இந்நிலையில் சர்வதேச நாணய நிதியத்தில் கடனை பெறுவதற்காக பிரதமர் ஷரீப் எரிபொருள் விலையை மொத்தம் 50 வீதமாக மூன்று முறை அதிகரித்தார். தவிர, இம்ரான் கான் அறிமுகப்படுத்திய மானியங்களை திறம்பட முடிவுக்கு கொண்டுவருவதற்காக மின்சார செலவை உயர்த்தியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தின் மூலம் பாகிஸ்தான் ஏற்கனவே 3 பில்லியன் டொலர்களை பெற்றுள்ளது. எனினும் இந்த வசதி இந்த ஆண்டு இறுதியில் முடிவுக்கு வரவுள்ளது. இதனை 2023 ஜூன் வரை நீடிக்க நிர்வாகம் கோரியுள்ளது.

"கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் இருந்து பாது காப்பு பெறுவதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தை ஆரம்பிப்பது அத்தியாவசியமாக உள்ளது" என்று நிதி அமைச்சர் மிப்தா இஸ்மைல் அந்நாட்டு பாராளுமன்றத்தில் கடந்த மாதம் தெரிவித்திருந்தார்.

"எமது அரசியல் நற்பெயர் பாதிக்கப்படும் என்று எமக்குத் தெரியும், ஆனால் தொடர்ந்து இதனை நாம் செய்துள்ளோம்' என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

நாட்டின் 128 பில்லியன் டொலர் கடனை செலுத்துவதற்கான தற்போதைய வரவுசெலவுத்திட்டத்தில் 3.95 டிரில்லியன் ரூபாய்கள் (18.8 பில்லியன் டொலர்) ஒதுக்கப்பட்டுள்ளது.

"உடன்பட்டுள்ள கொள்கையில் வரவுசெலவுத் திட்டத்தை உறுதியாக செயற்படுத்துவதற்கு அளிக்கும் முன்னுரிமையும் உள்ளடக்கப்பட்டுள்ளது" என்று போர்டர அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

வலுசக்தித் துறையில் சீர்திருத்தங்கள், பணவீக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு செயல்திறன்மிக்க நிதிக் கொள்கை ஒன்றை அறிமுகம் செய்தல், நிர்வாகத்தை பலப்படுத்தல், ஊழலுக்கு எதிரான நடவடிக்கை மற்றும் சமூக பாதுகாப்பு அமைப்பை மேம்படுத்தை செயற்படுத்துவதற்கு பாகிஸ்தான் இணங்கியுள்ளது.

"பூகோள பொருளாதார மற்றும் நிதிச் சந்தைகளில் அதிகரித்துள்ள நிச்சயமற்ற தன்மையை கருத்தில் கொண்டு, திட்டத்தின் நோக்கங்களை மேற்கொள்வதற்கு அவசியமான எந்த ஒரு மேலதிக நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு நிர்வாகம் தயாராக இருக்க வேண்டம்" என்று அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

# முறையற்ற விதத்தில் எரிபொருள் பங்கீடு; விவசாயிகள் பாதிப்பு

வவுனியா விசேட நிருபர்

வவுனியா மாவட்டத்தில் 12 ஆயிரத்து 238 ஏக்கர் நிலப்பரப்பில் நெல் சிறுபோகத்தில் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யூலை முதல் கிழமையிலிருந்து ஓகஸ்ட் கடைசிக்கிழமை வரை இந்த அறுவடை இடம்பெறும். இதற்காக கிட்டத்தட்ட 3 இலட்சத்திற்கு மேலதிகமான டீசல் எரிபொருள் தேவைப்படுகிறது.

இதனை வாராந்தம் பகிர்ந்து வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக மாவட்ட செயலகத்தால் தெரிவிக்கப்பட்ட போதும், அறுவடைக்கு தேவையான போதியளவு டீசல் வழங்கப்படவில்லை.

இதுவரை 27,000 லீற்றர் டீசல் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் அறுவடைக்கு தேவையான டீசலை கறுப்பு சந்தையில் அதிக விலைக்கு பெற்றே அறுவடை செய்ய வேண்டி ஏற்பட்டுள்ளது. யூரியா உரம் 42000 ரூபாய்க்கு விற்கப்படுகின்றது. அதையும் பெற்று கிருமி மற்றும் களைநாசினிகளையும் பெற்று சிறுபோகத்தை மேற்கொண்ட போதும் மாவட்ட செயலகத்தின் சரியான பங்கீடு முறைமை இன்மையால் கறுப்பு சந்தையில் 1200 ரூபாய்க்கு டீசலை பெற்று அறுவடை செய்ய வேண்டியுள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மாவட்ட விவசாய சம்மேளனத் தலைவரிடம் வினவிய போது, மாவட்டத்தில் தற்போது எரிபொருள் நெருக்கடி உள்ளது.

சிறுபோக அறுவடை சீராக நடைபெறா விட்டால் சோற்றுக்கும் பஞ்சம் ஏற்படும். எனவே கனரக மற்றும் டிப்பர் வாகன சாரதிகள் சிறுபோக அறுவடைக்காக விவசாயிகளுக்கு டீசலை பெற்றுக்கொடுப்பதற்கு உதவுமாறு தெரிவித்துள்ளனர்.

## தினகரன் வடக்கின் உதயம் Vadakkin Uthayam

# அல்வாய் கிழக்கில் வெடிபொருட்கள் மீட்பு

(நாகர்கோவில் விஷேட நிருபர்)

நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அல்வாய் கிழக்கு பகுதியிலிருந்து வெடி பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன. தோட்டத்தில் குழி வெட்டிய போதே வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதனைத்தொடர்ந்து அப்பணி இடைநிறுத்தப்பட்டு நெல்லியடி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

நேற்று வியாழக்கிழமை (14) மதியம் தோட்ட வேலையில் ஈடுபட்டிருந்த ஒருவர் குழி வெட்டிய போது மோட்டார் குண்டு, மிதிவெடி மற்றும் கைக்குண்டுகள் , ஒரு தொகுதி வயர்கள் உட்பட சில வெடிபொருட்கள் மீட்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து தோட்டவேலை நிறுத்தப்பட்டு நெல்லியடி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழக மக்களின் நிவாரண பொதிகள் பகிர்ந்தளிப்பு

பரந்தன் குறூப் நிருபர்)

கிளிநொச்சி மாவட்டத்திற்கு 35,400 கிலோ கிராம் அரிசியும் 2000 கிலோ பால்மா என்பன தமிழக மக்களின் நன்கொடையின் கீழ் இரண்டாம் கட்டமாக கிடைக்கப்பெற்றுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்

கிளிநொச்சி மாவட்டத்திற்கான இந்திய மக்களின் இரண்டாம் கட்ட நிவாரண உதவி பொருட்கள் நேற்று (14.07.2022) கிளிநொச்சியை வந்தடைந்துடன் அவை நேற்று கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளை மற்றும் பூநகரி ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

நேற்று புகையிரத பெட்டிகளில் கொண்டுவரப்பட்ட மேற்படி பொருட்கள் மாவட்ட செயலகத்தின் ஊடாக பிரதேச செயலக பிரிவுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன.

இவ்வாறு உதவி திட்டங்கள் கிடைக்கப்பெற்றுள்ளமை தொடர்பில் கருத்து தெரிவித்த மாவட்ட அரசாங்க அதிபர் இந்திய அரசினுடைய இரண்டாம் கட்ட நிவாரண பொருட்கள் நேற்றைய தினம் கிளிநொச்சி மாவட்டத்திற்கு கிடைக்கப்பெற்றிருக்கின்றன.

அதில் 35,400 கிலோ கிராம் அரிசியும் 2000 கிலோ கிராம் பால் மாவும் கிடைக்கப்பெற்று இருக்கிறது அவற்றை கண்டாவளை மற்றும் பூநகரி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளுக்கு பகிர்ந்து அளிக்கப்பட்டிருக்கின்றதாகவும் நாளைய தினம் ஏனைய பிரதேச செயலகங்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ரயில் விபத்தில் ஒருவர் பலி

யாழ்.விசேட நிருபர்

யாழ்ப்பாணம் கந்தர்மடம் பகுதியில் இடம்பெற்ற புகையிரத விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். கந்தர்மட பகுதியிலிருந்த புகையிரத கடவையில் நேற்றைய தினம் வியாழக்கிழமை மதியம் இவ்விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# மன்னார் பேசாலையில் பிரதான வீதியை மறித்து போராட்டம்

(மன்னார் குறூப் நிருபர் )



மன்னார் பேசாலை கிராம மக்கள் நேற்று வியாழக்கிழமை பேசாலை பிரதான வீதியை மறித்து போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர். மன்னாரில் நேற்று (14)லிட்ரோ எரிவாயு விநியோகம் இடம் பெற்றது. மன்னார் பொதுவிளையாட்டு மைதானத்தில் வைத்து எரிவாயு விநியோகம் இடம்பெற்று வருகின்றது.

ஆனால் பேசாலை பகுதி மக்களுக்கு லிட்ரோ எரிவாயு வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படாத காரணத்தால் மக்கள் இப்போராட்டத்தை மேற்கொண்டனர். குறிப்பாக நீண்ட காலமாக அப்பகுதி மக்கள் எரிவாயு இன்றி பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்து வந்தனர். பிரதான வீதியை மறித்து போராட்டம் மேற்கொண்டமையினால் இவ்வீதியூடான போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இந்நிலையில் பேசாலை பொலிஸார் சம்பவ இடத்திற்கு வந்து போராட்டத்தில் ஈடுபட்ட மக்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இதன்போது பேசாலை கிராமத்திற்கு 100 லிட்ரோ எரிவாயு பெற்றுத்தருவதாக பொலிஸார் உறுதியளித்ததை தொடர்ந்து மக்களின் போராட்டம் கைவிடப்பட்டது.

# கைக்குண்டு மீட்பு

சாவகச்சேரி விஷேட நிருபர்

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சங்கத்தானை பகுதியிலுள்ள வீட்டு வளவொன்றில் நேற்று வியாழக்கிழமை வெடிக்காத நிலையில் கைக்குண்டு ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது. காணியை துப்புரவு செய்த போதே கைக்குண்டு அடையாளம் காணப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.இது தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

பொலிஸார் கைக்குண்டினை அப்புறப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# சட்டவிரோத மண் அகழ்வில் ஈடுபட்ட பட்டா ரக வாகனம் மீட்பு

(நாகர்கோவில் விஷேட நிருபர்)



சட்டவிரோதமான முறையில் மண் அகழ்வில் ஈடுபட்ட பட்டா ரக வாகனமொன்று நேற்று வியாழக்கிழமை (14) காலை விசேட அதிரடிப்படையினரினால் கைப்பற்றப்பட்டு பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வல்லிபுரம் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்டிருந்த பட்டா ரக வாகனத்தை விஷேட அதிரடிப்படையினர் துரத்திச்சென்ற போதும் மண் கடத்தல்காரர்கள் வாகனத்தை கைவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். மீட்கப்பட்ட வாகனம் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# குடும்பப் பெண் திடீர் மரணம்

(தலைமன்னார் விஷேட நிருபர் )

மன்னார் முருங்கன் பகுதியில் குடும்ப பெண்ணொருவர் தனது வீட்டில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக தெரியவருவதாவது,

மாவிலங்கேணி விளாரிக்குளத்தைச் சேர்ந்த பிரகாஸ் ஆரோக்கிய மேரி (வயது 27) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த செவ்வாய் கிழமை (12.07.2022) இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் அவரது கணவர் தெரிவிக்கையில், தான் கண்டி பகுதியைச் சேர்ந்தவர் என்றும் வருணம் தீட்டும் தொழிலுக்காக மன்னார் பகுதிக்கு வந்திருந்த பொழுதே இவரை திருமணம் செய்ததாகவும் தெரிவித்தார். குடும்ப தகராறே மரணத்துக்கு காரணமென சொல்லப்படுகின்றது.

சடலம் பிரேத பரிசோதனைக்காக மன்னார் பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. பிரேத பரிசோதனை முடிவுற்றதும் இறந்தவரின் சடலம் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

தினகரன் THINAKARAN
2022 ஜூலை 15 வெள்ளிக்கிழமை



**தொழுகை நேரம்**

| | |
|---|---|
| சுபஹ் | 04.39 |
| லுஹர் | 12.17 |
| அஸர் | 03.44 |
| மஃரிப் | 06.32 |
| இஷா | 07.48 |

**இன்றைய சுபதினம்**

சுபகிருது வருடம் ஆனி 31

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி

**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | செலவு |
| ரிஷபம் | பாராட்டு |
| மிதுனம் | தனம் |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | கோபம் |
| கன்னி | முயற்சி |
| துலாம் | நன்மை |
| விருச்சிகம் | நிறைவு |
| தனுசு | வெற்றி |
| மகரம் | பொறுமை |
| கும்பம் | மறதி |
| மீனம் | சுகம் |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

# மோதலுக்கான காரணங்களுக்கு தீர்வு காண்பதே அதிமுக்கியம்

### ஐ.நா செயலாளர் அன்டோனியோ டுவிட்டர் பதிவு



இலங்கையின் தற்போதய நிலைமையை மிகவும் உன்னிப்பாக அவதானித்து வருவதாக ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ் தெரிவித்துள்ளார்.

அவர் தனது ட்விட்டர் பதிவு ஒன்றில், மோதலின் அடிப்படைக் காரணங்கள் மற்றும் போராட்டக்காரர்களின் குறைகளை நிவர்த்தி செய்வது முக்கியம் என்று குறிப்பிட்டுள்ளார். இந்த நிலையில் அமைதியான மற்றும் ஜனநாயக மாற்றத்திற்கான சமரச உணர்வை ஏற்றுக்கொள்ளுமாறு அனைத்து கட்சித் தலைவர்களையும் தாம் கேட்டுக்கொள்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக் குழு விசேட அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளது.

இலங்கையில் வன்முறைகளைத் தவிர்த்து அமைதியான முறையில் அதிகாரத்தை ஒப்படைப்பதற்கு அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென

06

பதில் ஜனாதிபதி பதவியிலிருந்து

# பிரதமர் ரணில் உடனடியாக இராஜினாமா செய்ய வேண்டும்

### இடதுசாரி முன்னணி தெரிவிப்பு



பிரதமர் மற்றும் பதில் ஜனாதிபதி பதவியில் இருந்து ரணில் விக்கிரமசிங்க உடனடியாக இராஜினாமா செய்ய வேண்டும் என ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

மக்கள் ஆணை இல்லாத ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி கோட்டாபய தன்னிச்சையாக பிரதமராக நியமித்தமை பொது மக்களைப் போராட்டத்திற்கு அழைத்த மிக முக்கியமான காரணியாக அமைந்தது. இதனூடாக இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்கான உடன்பாட்டையும் அவர் நிராகரித்துள்ளார். ஜனாதிபதி கோட்டாபய மற்றும் பிரதமர் ரணில் ஆகிய இருவருமே இராஜினாமா செய்து சர்வகட்சி அரசாங்கத்திற்கு அதிகாரம் வழங்குவது அவசியமானது.

மதத் தலைவர்கள், சட்டத்தரணிகள் சங்கம், தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புக்கள் மற்றும் ஆர்வலர்கள் தொடர்ந்து இதே கோரிக்கைகளை முன் வைத்துள்ளனர். அதனைப் பொருட்படுத்தாமல், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது இராஜதந்திர சலுகைகளைப் பயன்படுத்தி, நாட்டை விட்டுத் தப்பிச் சென்றது மாத்திரமன்றி, மக்கள் ஆணை இல்லாத ரணில் விக்கிரமசிங்கவை, சட்டப்பூர்வ இராஜினாமா

06

# இலங்கைக்கு இந்தியா தொடர்ந்தும் பொருளாதார ரீதியாக உதவும்

### அது குறித்தே இந்திய அரசு அதிக கவனம்



இலங்கையில் நிலவரம் மிகவும் உணர்வுபூர்வமானதாக காணப்படுகின்றது. தேவையான இந்த தருணத்தில் இந்தியா இலங்கைக்கு பொருளாதார ரீதியில் உதவுவது குறித்து கவனம் செலுத்துகின்றது என இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

கேரளாவில் செய்தியாளர் மாநாட்டில் இதனை குறிப்பிட்டுள்ள அவர், இலங்கையில் நிலவரம் மிகவும் உணர்வுபூர்வமானதும் குழப்பகரமானதுமாக காணப்படுகின்றது. நாங்கள் இங்கு பேசிக்கொண்டிருக்கும்போதே நிலைமை மாறியவண்ணமுள்ளது, என குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மக்கள் எங்கள் அயலவர்கள் என்பதால் நாங்கள் அவர்களுக்கு உதவுவதற்கான அர்ப்பணிப்புடன் இருக்கின்றோம், அவர்கள் மிகவும் நட்புணர்வு மிக்கவர்கள். அவர்கள் மிகவும் கடினமான நிலையில் உள்ளதால் நாங்கள் அவர்களுக்கு உதவ விரும்புகின்றோம். கடந்த சில மாதங்களாக அந்த நாட்டுக்கு நாங்கள் மிகுந்த ஆதரவாக இருந்துள்ளோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எங்கள் கவனம் இலங்கையின் பொருளாதார நிலை குறித்தும் எவ்வாறு உதவலாம் என்பது குறித்துமே காணப்படுகின்றது. நாங்கள் ஏனைய விடயங்களில் ஈடுபடவில்லை. நாங்கள் பொருளாதார விடயங்கள் குறித்து மாத்திரமே கவனம் செலுத்துகின்றோம். ஏனைய விடயங்கள் குறித்து கரிசனை கொள்ளவில்லை. சமூக ஊடகங்களில் வெளியாகும் அனைத்திற்கும் நாங்கள் பதிலளிக்க முடியாது எனவும் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

அத்தியாவசிய சேவைகளுக்கான எரிபொருள் விநியோகம்:

# வேலைத்திட்டத்தை சமர்ப்பிக்குமாறு சட்டமா அதிபருக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படும் எரிபொருளை அத்தியாவசிய சேவைகளுக்கு பகிர்ந்தளிப்பதற்கான விசேட வேலைத் திட்டம் ஒன்றை தயாரித்து நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்குமாறு உச்ச நீதிமன்றம் நேற்று சட்டமா அதிபருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

எரிபொருள் உணவுப் பொருட்கள், மின்சாரம், மருந்து பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகளுக்கு தொடர்ச்சியாக எரிபொருளை வழங்குவதற்காக நீண்ட கால மற்றும் குறுகிய கால வேலைத் திட்டம் ஒன்றை தயாரிப்பதற்கு அரசாங்கத்திற்கு உத்தரவிடுமாறு கோரி இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தாக்கல் செய்துள்ள அடிப்படை உரிமை மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட போதே நேற்று நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது. (ஸ)

கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட

# முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னை காவேரி மருத்துவமனையில் அனுமதி

**திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது**



கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முதல்வர் மு.க ஸ்டாலினுக்கு செவ்வாய்க்கிழமை கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. இதனால் ஆழ்வார்பேட்டையில் உள்ள இல்லத்தில் அவர் தனிமைப்படுத்திக் கொண்டார். இந்த நிலையில் நேற்று வியாழக்கிழமை முதலமைச்சர் ஸ்டாலின் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். சென்னை, காவேரி மருத்துவமனைக்கு சி.டி.ஸ்கேன் மருத்துவ பரிசோதனைக்கு சென்ற அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

கொரோனா தொடர்பான அறிகுறிகள் குறித்து முதல்வர் ஸ்டாலினுக்கு மருத்துவ பரிசோதனை நடைபெற்று வருகிறது என காவேரி மருத்துவமனை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 34 கோடி ரூபா பெறுமதியான களவாடப்பட்ட நகைகளுடன் சந்தேக நபர் நேற்று கைது

**லோரன்ஸ் செல்வநாயகம்**

களவாடப்பட்ட 34 கோடி ரூபா பெறுமதியான தங்க நகைகளுடன் சந்தேக நபர் ஒருவர் நேற்று காலியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

காலி கோட்டையில் உள்ள தங்க நகை மற்றும் மாணிக்கக் கற்கள் விற்பனை நிலையத்தை உடைத்து அங்கிருந்த 34 கோடி பெறுமதியான தங்க நகைகள் இரு வாரங்களுக்கு முன் கொள்ளையடிக்கப்பட்டிருந்தன. அது தொடர்பில் சந்தேக நபர் ஒருவரை கைது செய்துள்ளதாக காலி பொலிசார் தெரிவித்துள்ளனர்.

14 நாட்களுக்கு பின்னர் சந்தேக நபர் நேற்று கைது செய்யப்பட்டதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

உடுகம பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவரிடமிருந்து களவாடப்பட்ட தங்க நகைகள் மற்றும் மாணிக்கக் கற்களை மீட்டுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

காலி மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் உபுல் செனவிரத்ன வழங்கிய தகவல்களுக்கிணங்கவே சந்தேக நபர் தடல்ல பிரதேசத்திலிருந்து நேற்று கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# பிரதமர் பதவிக்கான பெயர் இன்று சபாநாயகரிடம் முன்மொழிவு

### ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஐக்கிய மக்கள் சக்தி நாட்டின் புதிய பிரதமர் பதவிக்கான பெயரொன்றை இன்றைய தினம் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தனவிடம் முன்மொழிவதற்கு தீர்மானித்துள்ளதாக அந்த கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் அனைத்து எதிர்க் கட்சிகளினதும் ஏகோபித்த கருத்துக்களைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் அனைத்துக் கட்சிகள் மற்றும் குழுக்களுடன் பேச்சு வார்த்தைகளை நடத்தி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அந்த வகையில் பிரதமர் பதவிக்கான பெயரை இன்றைய தினம் முற்பகல் 10 மணியளவில் சபாநாயகரிடம் முன்மொழிய உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று அது தொடர்பில் டுவிட்டர் பதிவு ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

பிரதமர் பதவிக்காக ஏகோபித்த கருத்தை முன்மொழிமாறு பதில் ஜனாதிபதியும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தனவிடம் வேண்டுகோள் விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பத்தரமுல்ல ஆர்ப்பாட்டத்தில்

# இராணுவ வீரரின் துப்பாக்கி தோட்டக்கள் அபகரிப்பு

### T.56 ரக துப்பாக்கி, 120 தோட்டாக்கள் மாயம்

பாராளுமன்றத்திற்கு அருகில் நேற்று முன்தினம் (13) நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது, இராணுவவீரர் இருவரின் இரு ரி56 ரக துப்பாக்கிகள் ஆர்ப்பாட்டக்காரர்களால் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்த இராணுவ இரு வீரர்களிடமிருந்து ரி 56 ரக துப்பாக்கிகள் 02 மற்றும் 60 தோட்டாக்களைக் கொண்ட 2 மெகசின்கள் ஆகியன அபகரித்துச் செல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் படையினருக்கும் இடையில் நேற்றுமுன்தினம் புதன் கிழமை ஏற்பட்ட மோதல்களில் 80 இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் பொரளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் பொல்துவ பிரதேசத்தில் இடம்பெற்ற மோதலில் சுமார் 40 பேர் வரையில் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# பாராளுமன்ற அமர்வு இன்று நடைபெறாது

**லோரன்ஸ் செல்வநாயகம்**

இன்று நடைபெறவிருந்த பாராளுமன்ற அமர்வு இடம்பெற மாட்டாது என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் இராஜினாமா கடிதம் கிடைத்த மூன்று தினங்களுக்குள் பாராளுமன்ற அமர்வு நடைபெறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் இராஜினாமாவை உத்தியோகபூர்வமாக அறிவிப்பதற்காக இன்று பாராளுமன்றத்தைக் கூட்டுவதற்கு கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இதுவரை ஜனாதிபதியின் இராஜினாமா கடிதம் தமக்கு கிடைக்கவில்லை என சபாநாயகர் தெரிவித்துள்ள நிலையில் இன்று பாராளுமன்ற அமர்வு நடைபெறாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# "பிரதமர் உடன் பதவி விலகி நாட்டை சபாநாயகரிடம் ஒப்படைப்பது அவசியம்"

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

உடனடியாக பதவியிலிருந்து விலகி சர்வகட்சி அரசாங்கமொன்றை உருவாக்குவதற்கு வழிவிடும் வகையில் சபாநாயகரிடம் நாட்டை ஒப்படைக்குமாறு பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் குழுக்களின் ஒன்றியம் பதில் ஜனாதிபதியான பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைக் கேட்டுக்கொண்டுள்ளது.

பொருளாதார நெருக்கடியானது மனித அனர்த்தமாக மாறியுள்ள நிலையில் சர்வதேச படையினர் நாட்டுக்குள் பிரவேசிப்பதற்கு கதவு திறக்கப்படலாம் எனத் தெரிவித்துள்ள அந்த குழுவினர், இலங்கையானது தெற்காசியாவின் லிபியாவாக உருவாவதற்கு இடமளிக்கமுடியாதென்றும் நாட்டுக்காக கைகோர்க்கவேண்டுமென தாம் நாட்டு மக்கள் அனைவருக்கும் அழைப்பு விடுப்பதாகவும் அந்த ஒன்றியம் தெரிவித்துள்ளது.

பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் குழுக்கள் இணைந்து கூட்டு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளதுடன் அந்த அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

விரைவாக பாராளுமன்றத்தை கூட்டி

# அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவது அவசியதேவை

### அரசியல் தலைமைகளிடம் உலமா சபை கோரிக்கை

நெருக்கடியான தற்போதைய சூழலில் அரசியல் தலைமைகள் விரைவாக பாராளுமன்றத்தை கூட்டி, அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என அகில இலங்கை ஜம்மியத்தில் உலமா கோரி உள்ளது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோர், எப்போதும் அமைதியான முறையிலும் ஜனநாயக விழுமியங்களைப் பேணி செயற்படவேண்டும் எனவும் அந்த அமைப்பு கேட்டுக்கொண்டுள்ளது.அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் பொதுச்செயலாளர் அஷ்ஷைக் எம். அர்கம் நூராமித் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோர், எப்போதும் அமைதியான முறையிலும் ஜனநாயக விழுமியங்களைப் பேணியும் நாட்டு சட்டத்தை மதித்தும் பொது மற்றும் தனியார் சொத்துக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படுத்தாத வகையிலும் வன்முறையில் ஈடுபடாமலும் தம் போராட்டங்களையும், ஆர்ப்பாட்டங்களையும் அமைத்துக் கொள்ள வேண்டும்.

எதிர்வரும் நாட்கள் மிக முக்கியமான நாட்களாக காணப்படுவதால் நாட்டில் அரசியல் ரீதியான ஸ்திரத்தன்மை ஏற்படும் வரையில் மிகவும் அமைதியாகவும் நிதானமாகவும் தத்தமது மத விழுமியங்களைப் பேணியும் வன்முறையைத் தவிர்ந்தும் செயற்படுமாறு அனைவரிடமும் அன்பாக கேட்டுக் கொள்கின்றோம்.

பௌத்த உயர்பீடங்கள் கோரி இருப்பது போன்று, அரசியல் தலைவர்கள் கால தாமதமின்றி விரைவாக பாராளுமன்றத்தை கூட்டி, மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு தீர்வை வழங்குவதன் ஊடாக அரசியல் ரீதியான ஸ்திரத்தன்மையை நாட்டில் ஏற்படுத்துமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம்.

அத்துடன் இக்கட்டான இச்சந்தர்ப்பத்தில் அரசியல் தலைமைகள் கட்சி முரண்பாடுகளையும் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளையும் கலைந்து, நாட்டின் எதிர்காலத்தையும் சுபிட்சத்தையும் கவனத்தில் கொண்டு செயல்பட வேண்டும் எனவும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 238.26 | 249.70 |
| கனடியன் டொலர் | 272.87 | 285.03 |
| யூரோ | 356.13 | 370.70 |
| ஜப்பான் யென் | 2.5880 | 2.6672 |
| சிங்கப்பூர் டொலர் | 252.47 | 263.04 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 422.05 | 439.09 |
| சுவிஸ் பிராங்க் | 361.49 | 377.54 |
| அமெரிக்க டொலர் | 356.95 | 368.30 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 957.26 | கட்டார் ரியால் | 98.28 |
| குவைத் டினார் | 1,172.49 | சவூதி ரியால் | 96.13 |
| ஓமான் ரியால் | 937.40 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 98.25 |

## நாட்டின் பாதுகாப்பு...

விலக வேண்டும் என்றும் அவ்வாறின்றேல் நாட்டின் நிலைமைகளுக்கிணங்க பாதுகாப்புப் படையினருக்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களையும் முழுமையாக உபயோகிக்க வேண்டிவரும் என்றும் இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

பொதுமக்களின் சொத்துக்கள் உள்ளிட்ட அனைத்து கேந்திர நிலையங்கள் மற்றும் மக்களின் உயிர்களைப் பாதுகாப்பதற்குமான பொறுப்பு இராணுவத்தினருக்கு வழங்கப்பட்டுள்ள நிலையில் அதற்காக இராணுவத்தினர் தமக்குள்ள அதிகாரங்களை முழுமையாக பிரயோகிக்க வேண்டிவரும். அதற்கான பொறுப்பை போராட்டக்காரர்களே ஏற்க நேரிடும் என்றும் இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இராணுவத்தினர் நேற்று அது தொடர்பில் விசேட அறிக்கையொன்றை

வெளியிட்டுள்ளதுடன் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டின் நடைமுறையிலுள்ள அரசியலமைப்பின் படி இராணுவத்தினருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள், நாட்டில் சட்டம் மற்றும் அமைதியை நிலைநாட்டுவதற்கும் பொதுச் சொத்துக்கள் மற்றும் மக்களின் உயிர்களைப் பாதுகாப்பதற்குமான பொறுப்பை நிறைவேற்றுவதற்கும் வழங்கப்பட்டுள்ளன. அதற்காக பொலிஸாரும் இராணுவத்தினரும் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றனர்.

மக்களின் இறைமையைப் பாதுகாத்தல், அவர்களுக்கான சுதந்திரத்தை உறுதிப்படுத்தல் உள்ளிட்ட நடவடிக்கைகளை பாதுகாப்புப் படையினர் நிறைவேற்றி வருகின்றனர்.

இத்தகைய சூழ்நிலையில் கடந்த மே மாதம் ஆரம்பமான மக்களுக்கு

எதிரான அனைத்து நடவடிக்கைகளிலும் இராணுவத்தினர் சட்டத்திற்கிணங்க செயற்பட்டுள்ளனர்.

கடந்த 9ஆம் திகதி கொழும்பு கோட்டையில் நடத்தப்பட்ட மக்கள் எதிர்ப்பு நடவடிக்கைகள் உட்பட இடம்பெற்றுள்ள அனைத்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களின் போதும் இராணுவத்தினருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையில் சிறு ஆத்திரமூட்டல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. எனினும் சட்ட ஆதிபத்தியத்தை சீர்குலைத்தல் அல்லது மோசமான செயற்பாடுகள் எதுவும் இடம்பெறவில்லை.

இருதரப்பினர் மத்தியிலும் அமைதியின்மை இடம்பெற்றுள்ளது.

இத்தகைய நிலையில்அமைதியாக செயற்படுமாறும் அரச கட்டிடங்கள் மற்றும் பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கவேண்டாம் என்றும் பாதுகாப்புப் படை பிரதானி, முப்படைத் தளபதிகள் மற்றும் பொலிஸ் மா அதிபரும் பலதடவைகள் ஆர்ப்பாட்டக்காரர்களிடம் பகிரங்கமாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பதில் ஜனாதிபதியான பிரதமர், சபாநாயகர் மற்றும் கட்சித் தலைவர்களுக்கிடையில் இடம்பெற்றுள்ள கூட்டங்களில் பாதுகாப்புப் படைகளின் பிரதானி முப்படைகளின் தளபதிகள், பொலிஸ் மா அதிபர் ஆகியோர் நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமைகள் மற்றும் பொருளாதார நெருக்கடிகளுக்கு விரைவாக தீர்வுகாணுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர். கடந்த 13ஆம் திகதி சபாநாயகரின் உத்தியோகப்பூர்வ வாசஸ்தலம், பாராளுமன்ற கட்டிடத்தையும் கையகப்படுத்துவதற்கு ஆர்ப்பாட்டக்காரர்கள் முயற்சித்துள்ளனர். பாரஊர்திகளைப் பயன்படுத்தி வீதித் தடைகளை தகர்த்து ஜனநாயகப் பெறுமதியை செயற்படுத்தும் பாராளுமன்றத்தை கையகப்படுத்துவதே அவர்களின் நோக்கமாக இருந்தது.

பாதுகாப்புப் படையினரின் வேண்டுகோளுக்கு செவிமடுக்காத அவர்கள் பாராளுமன்ற கட்டிடத்திற்குள் பிரவேசிப்பதற்கு முயற்சித்ததுடன் தம்வசம் வைத்திருந்த தடிகள், தலைக்கவசம் உள்ளிட்டவற்றால் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரைத் தாக்கியுள்ளனர்.

இராணுவ வீரர்கள் இருவரிடமிருந்த ட56 ரக துப்பாக்கிகளையும் அவர்கள் அபகரித்துள்ளனர். குறித்த இராணுவ வீரர்கள் இருவரும் மயக்கமடையும்வரை அவர்களைத் தாக்கியுள்ளனர்.

காயமடைந்த அவர்களுடன் மேலும் சில படை வீரர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையிலும் இராணுவத்தினரின் வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## துப்பாக்கியை அபகரித்தவர்களால்...

அறிவித்தலொன்றை வெளியிட்டு இதனைத் தெரிவித்த பிரிகேடியர் நிலாந்த பிரேமரத்ன மேலும் குறிப்பிடுகையில்,

புதன்கிழமை பத்தரமுல்ல , பாராளுமன்ற சுற்றுவட்டாரம் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் வன்முறையாக செயற்பட்ட தரப்பினரால் பாதுகாப்பு தரப்பினருடன் மோதல்களை ஏற்படுத்திக் கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதனைக் கட்டுப்படுத்துவதற்கு முன்னோக்கிச் சென்ற பாதுகாப்பு தரப்பினர் இருவர் மீது மிகவும் பாரதூரமாகவும், மனிதாபிமானமற்ற முறையிலும் இரும்பு கம்பிகளாலும், பொல்லாலும் முகம் மற்றும் தலைப்பகுதியில் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அத்துடன் தாக்குதல்களை மேற்கொண்டதன் பின்னர் அவர்களிடமிருந்த ரி 56 ரக இரு துப்பாக்கிகளையும், அவற்றுக்கு பயன்படுத்தப்படும் துப்பாக்கி ரவைகளையும் அபகரித்துள்ளனர்.

இவ்வாறு முகம் மற்றும் தலைப் பகுதியில் கடுமையாக தாக்கப்பட்ட பாதுகாப்பு தரப்பினர் கவலைக்கிடமான முறையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட துப்பாக்கிகளைக் கொண்டு அந்த தரப்பினர் வன்முறையை மேலும் பரப்பும் வகையில் செயற்படக் கூடும்.

எனவே பொது மக்களை இது தொடர்பில் விழிப்புணர்வுடன் செயற்படுமாறு கேட்டுக் கொள்கின்றோம் என்றார்.

## தமிழ் மக்களின் பிரச்சினைக்கு...

தலைவர்கள் கூட்டாக வலியுறுத்தினர். இதுதொடர்பில் அவர்கள் மேலும் அறிக்கையில், சகல தமிழ்க் கட்சிகளும் குறிப்பாக தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் விரைவில் ஒன்று கூடி இன்றைய இலங்கை அரசியல் சூழலில் எடுக்கவேண்டிய தீர்மானம் என்ன என்பதை சீராகத் தீர்மானிப்பதற்கு முன் வரவேண்டும்.

வடக்கு கிழக்கு, மலையகம், தெற்கு என்ற பேதமின்றி தமிழ் பாராளுமன்ற அங்கத்தவர்கள், கட்சித் தலைவர்கள் வேறுபாடுகளைக் கடந்து மக்களுக்காக ஒன்று கூட வேண்டிய தருணம் இது. எனவே அறிவுபூர்வமாக தீர்க்க தரிசனத்தோடு ஒன்றுகூடி ஆராயுங்கள்.இது காலத்தின் கட்டாயம்.இவ்வேளை நீங்கள் ஒன்றுகூடி ஆராய மறுப்பீர்களானால் அது மாபெரும் வரலாற்றுத் தவறாகும் என தெரிவித்தனர்.

இவ் ஊடக சந்திப்பில் நல்லை ஆதீன குரு முதல்வர் சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள், யாழ் மறை மாவட்ட ஆயர் ஜஸ்டின் பேனாட் ஞானப்பிரகாசம், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன், ரிஷி தொண்டுநாத சுவாமிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட...

காயமடைந்தவர்களில் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களும் ஒரு இராணுவ படைவீரரும் இரண்டு ஊடகவியலாளர்கள் மற்றும் ஐந்து பெண்களும் உள்ளடங்குவதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று முன்தினம் முற்பகல் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கு எதிராக கொழும்பு பிளவர் வீதியிலுள்ள பிரதமர் அலுவலக பகுதியில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களில் 40க்கும் மேற்பட்டோர் காயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

அதேவேளை, அன்று பிற்பகல் பாராளுமன்றத்திற்கு செல்லும் வழியில் பத்தரமுல்லை பொல்துவ வீதியில் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது மேலும் 40 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

அவர்களில் 84 பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

## அரச ஊழியர்களது சம்பளம்...

ஏதாவது ஒரு நிறுவனத்தில் பணம் கையிருப்பில் இல்லை எனின் உரிய நிறுவனங்கள் முன்கூட்டியே தெரிவிக்க வேண்டும். ஆனால், அது போன்ற எந்த அறிவிப்பும் இதுவரை வெளியிடப்படவில்லை.

ஆக அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதில் தற்போது எந்த பிரச்சினையும் இல்லை. எனவே, அரசு ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க முடியாத நிலை ஏற்படாது என நிதியமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி நிலை காரணமாக அரச ஊழியர்களுக்கு இம்மாத சம்பளம் வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அண்மையில் தெரிவிக்கப்பட்டது.

பணத்தை அச்சிடாமல், சம்பளம் வழங்குவதற்குத் தேவையான பணத்தைப் பெற முடியாது என்று அறிக்கைகள் தெரிவித்தன. பணம் அச்சிடுவதற்கு அமைச்சரவையின் அங்கிகாரம் தேவை என்றும், ஆனால் தற்போதைய அரசியல் நெருக்கடியை கருத்தில் கொண்டு அத்தகைய அனுமதியை பெற முடியுமா என்பது நிச்சயமற்றது என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## கொழும்பில் இன்று அதிகாலை...

12 மணி முதல் இன்று அதிகாலை 5 மணி வரை கொழும்பு நிர்வாக மாவட்டத்திற்கு மாத்திரம் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

மக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்திற்கிணங்க பதில் ஜனாதிபதியான பிரதமர் ரனில் விக்ரமசிங்கவினால் நேற்றைய தினம் கொழும்பு மாவட்டத்திற்கு மாத்திரம் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதுடன் அது தொடர்பான வர்த்தமானியும் நேற்று வெளியிடப்பட்டது.

நாட்டில் கடந்த சில தினங்களாக இடம்பெற்று வரும் சம்பவங்களையடுத்து நிலைமைகளை கட்டுப்படுவதற்கு வசதியாக நேற்று முன்தினம் நண்பகல் முழு நாட்டிற்குமான அவசர காலச் சட்டமும் மேல் மாகாணத்திற்கான ஊரடங்குச் சட்டமும் பிறப்பிக்கப்பட்டது.

அதனையடுத்து அதில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டு நேற்று முன்தினம் இரவு 10 மணி முதல் நேற்று அதிகாலை 5 மணி முழு நாட்டிற்குமான ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

அதனையடுத்து மீண்டும் நேற்று நண்பகல் கொழும்பு மாவட்டத்திற்கு மாத்திரம் நடைமுறைக்கு வரும் வகையில் இன்று அதிகாலை 5 மணி வரையான ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ஸ)

## போராட்டக்காரர்கள் வெளியேறி...

தெரிவித்தனர். அதுதொடர்பில் ஊடக சந்திப்பொன்றை நடத்திய அவர்கள், ஜனாதிபதி மாளிகை உட்பட மேற்படி கட்டடங்களை தாம் கையகப்படுத்துவதற்கான காரணம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியிலிருந்து விலக வேண்டும் என்பதற்காகவே என்றும் தெரிவித்துள்ளனர்.

அதற்கிணங்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டைவிட்டு வெளியேறியுள்ள நிலையில் கையகப்படுத்தப்பட்ட மேற்படி கட்டடங்களிலிருந்து வெளியேறுவதற்கு தீர்மானித்துள்ளதாக தெரிவித்தனர். ஆர்ப்பாட்டக்காரர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் முக்கியஸ்தர்களான லஹிரு வீரசேகர மற்றும் ராஜ்குமார் ரஜீவ் காந்த் ஆகியோர் போராட்டத்தை கைவிடாமல் தொடர்ந்தும் முன்னெடுக்கப்போவதாகவும் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி மாளிகை உள்ளிட்ட கட்டடங்கள் கடந்த ஜூன் 9ஆம் திகதி போராட்டக்காரர்களினால் கையகப்படுத்தப்பட்டன. அதனையடுத்து நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட மற்றும் ஒரு போராட்டத்தின் போது பிரதமரின் அலுவலகமும் ஆர்ப்பாட்டக்காரர்களால் கையகப்படுத்தப்பட்டது.

சட்டத்தரணிகள் சங்கமும் அது தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்கியுள்ள நிலையில் சட்டத்தரணிகள் சங்கத்துடனும் செஞ்சிலுவைச் சங்கத்துடனும் கலந்துரையாடி பாதுகாப்பு தரப்பினரிடம் மேற்படி கட்டிடங்களை கையளிப்பதற்கு தீர்மானித்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தற்போது எந்தவொரு சர்வதேச நாடும் பொறுப்பேற்காத ஜனாதிபதி என்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி கனவிற்காக எதையும் செய்யக்கூடிய தலைவர் என்றும் அவர் இந்த நாட்டிற்காக எதையும் செய்யாத தலைவரென வரலாற்றில் எழுதப்படுவாரென்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## எமக்கும் அதற்கும்...

இல்லை என காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்கள் அறிவித்துள்ளனர்.

காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்களின் இலக்கு கட்டடங்களை கைப்பற்றுவதல்ல என்பதால், அரசியலமைப்பு ரீதியாக முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளுக்கு இடமளிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர்.

இது தொடர்பில் காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டத்தின் பிரதான ஏற்பாட்டாளர்களில் ஒருவரான அநுருத்த பண்டார அவரது முகநூலில் வெளியிட்டுள்ள காணொளி பதிவில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது :

சில தரப்பினர் பாராளுமன்ற வளாகத்திற்கும், சபாநாயகரின் உத்தியோகஇல்ல வளாகத்திற்கும் சென்றுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன. பெருந்திரளானோர் காலி முகத்திடலுக்கு வருகை தருகின்ற அதே சந்தர்ப்பத்தில் , ஏனைய சிலர் அவர்களை வேறு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

இதுவரையில் ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம், அலரி மாளிகை மற்றும் பிரதமர் அலுவலகம் என்பவை ஆர்ப்பாட்டக்காரர்களினால் அல்லது பொது மக்களால் கைப்பற்றப்பட்டுள்ளன. எனினும் தொடர்ந்தும் கட்டடங்களைக் கைப்பற்றுவது ஆர்ப்பாட்டங்களின் இலக்கு அல்ல.

அமைதியான முறையில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும் உரிமை நிச்சயம் காணப்படுகிறது. ஆனால் பலவந்தமாக கட்டடங்கள் அல்லது தனியார் நிறுவனங்களுக்குள் பிரவேசித்தல் போன்றவற்றை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இவ்வாறான செயற்பாடுகளை தவிர்த்துக் கொள்ளுமாறு அனைவரிடமும் கேட்டுக் கொள்கின்றோம்.

நாம் அவ்வாறானவர்களை விட அறிவுபூர்வமாக சிந்தித்து , திட்டமிடலுடன் செயற்பட வேண்டும். அவ்வாறில்லை என்றால் நாம் அவர்களின் செயற்பாடுகளுக்குள் சிக்கிக் கொள்ள நேரிடும். இவ்வாறான செயற்பாடுகளை இடை நிறுத்துமாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கமும் கோரிக்கை விடுத்துள்ளது. எனவே மேற்குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளில் ஈடுபட்டால் சட்டத்தரணிகளின் ஆதரவையும் இழக்க நேரிடும்.

எனவே ஜனாதிபதி பதவி விலகிய பின்னர் அரசியலமைப்பின் பிரகாரம் 6 நாட்கள் என்ற குறுகிய காலத்திற்கு சபாநாயகர் பதில் ஜனாதிபதியாக வேண்டும் என்பதே காலி முகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்களின் உத்தியோகபூர்வ குழுவின் இலக்காகவுள்ளது. இந்நிலையில் சபாநாயகரின் இல்லத்தையும் முற்றுகையிட நடவடிக்கை எடுத்தால் அது பொறுத்தமற்ற செயற்பாடாகும்.

அத்தோடு ஜனாதிபதி பதவி விலகாமல் இருப்பதற்காக சபாநாயகருக்கு அழுத்தம் பிரயோகிப்பது நியாயமற்றதாகும். எனவே வன்முறை கும்பலுடன் இணைந்து எவரும் அவரவர் பாதுகாப்பினை கேள்விக்குள்ளாக்கிக் கொள்ள வேண்டாம் என்று மீண்டும் மீண்டும் வலியுறுத்தி கேட்டுக் கொள்கின்றோம் என்றார்.

## ஜனாதிபதி இராஜினாமா

கடந்த 9 ஆம் திகதி இடம்பெற்ற போராட்டத்தினைத் தொடர்ந்து கோட்டாப யராஜபக்ஷ தனது ஜனாதிபதி பதவியில் இருந்து 13 ஆம் திகதி விலகுவதாக அறிவித்திருந்தார்.

எனினும் கடந்த 12 ஆம் திகதி அவர் நாட்டில் இருந்து விமானப் படைக்குச் சொந்தமான விமானம் ஒன்றின் மூலம் மாலைதீவுக்கு சென்றார்.

இதனையடுத்து நேற்றுக் காலை அவர் சிங்கப்பூர் விமான சேவைக்கு சொந்தமான விமானத்தில், சிங்கப்பூர் செல்லவிருந்த போதிலும், பாதுகாப்பு நிலைமை காரணமாக பயணிக்கவில்லை.

பின்னர் சவுதி அரேபிய விமான சேவைக்குச் சொந்தமான விமானம் ஒன்றின் மூலம் அவர் நேற்று மாலை சிங்கப்பூர் வந்ததாக அந்நாட்டு வெளிவிவகார அமைச்சு உறுதி செய்தது. கோட்டாபய ராஜபக்ஷவுக்கு தனிப்பட்ட விஜயம் ஒன்றிற்காக நாட்டிற்கு வருவதற்கு அனுமதி வழங்கப்பட்டதாக சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சு அறிவித்திருந்தது.

இதேவேளை, ஜனாதிபதி சிங்கப்பூர் சென்ற பின்னர் பதவி விலகல் கடிதம் தரப்படும் என ஜனாதிபதி தொலைபேசியில் அறிவித்ததாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்திருந்தார்.


இந்நிலையில் அவர் தனது இராஜினாமாக் கடிதத்தை நேற்று சபாநாயகருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

சபாநாயகர் தலைமையில்

# பாராளுமன்ற விவகாரங்கள் தொடர்பான குழு கூட்டம்

## இன்று காலை 10 மணிக்கு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டில் நிலவும் நெருக்கடியான நிலைமைகள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக பாராளுமன்ற விவகாரங்கள் தொடர்பான குழு கூட்டம் இன்று சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தனவின் தலைமையில் நடைபெற உள்ளது. இந்த கூட்டம் இன்றைய தினம் பாராளுமன்ற கட்டிடத்தில் சபாநாயகரின் தலைமையில் காலை 10 மணிக்கு நடைபெற உள்ளதாகவும் பாராளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பில் இந்த வாரத்தில் நடத்தப்படும் மூன்றாவது பாராளுமன்ற நடவடிக்கை குழு கூட்டம் இதுவென்றும் தெரிவிக்கப்படுகிறது. பாராளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான குழு கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. அந்த கூட்டத்திற்கு பாதுகாப்பு படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, முப்படைத் தளபதிகள், பொலிஸ் மா அதிபரும் அழைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மாலைதீவிலிருந்து சிங்கப்பூர் சென்றடைந்த ஜனாதிபதி

## சவூதி விமானமொன்றில் பயணமானதாக தகவல்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



ஜனாதிபதி கோட்டாபயராஜபக்ஷ உள்ளிட்ட தரப்பினர் நேற்று மாலைதீவிலிருந்து சிங்கப்பூருக்கு விமான மூலம் பயணித்துள்ளதாக வெளிநாட்டு செய்தி சேவையொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி உள்ளிட்ட தரப்பினர் சவூதி விமான சேவைக்குச் சொந்தமான எஸ்.வி. 788 ஆம் இலக்க விமானத்தில் நேற்று நண்பகல் சிங்கப்பூருக்கு பயணித்துள்ளதாகவும் அந்தச் செய்திச்சேவை தெரிவித்துள்ளது.

மேற்படி விமானம் நேற்றைய தினம் மாலை சிங்கப்பூரை சென்றடைந்ததாகவும் அந்த செய்திச் சேவை தெரிவித்துள்ளது. அதேவேளை, மாலைதீவில் வெலேனா சர்வதேச விமான நிலையம் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்கள் நேற்று பலத்த பாதுகாப்புக்கு உட்படுத்தப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுவதுடன் ஜனாதிபதி சிங்கப்பூரைச் சென்றடைந்ததும் தமது பதவி விலகலுக்கான கடிதத்தை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு அனுப்பி வைப்பதாக குறிப்பிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மோதலுக்கான.. (03ஆம் பக்கத் தொடர்)

ஆணைக்குழு அலுவலகம் கோரியுள்ளது. இராணுவம் உள்ளிட்ட அனைத்து பாதுகாப்பு தரப்பினரும் மனித உரிமைகளை மதித்துச் செயற்பட வேண்டுமென்றும் அது கோரியுள்ளது.

## பிரதமர் ரணில் உடனடியாக... (03ஆம் பக்கத் தொடர்)

ஆவணங்களைச் சமர்ப்பிக்காமல், பதில் ஜனாதிபதியாக நியமித்திருப்பது பாரதூரமான செயலாகும். இதனால் மக்கள் மீண்டும் ஆத்திரமடைந்து போராட்டக்காரர்களுடன் சேர்ந்து போராட்டத்தை தீவிரப்படுத்தி உள்ளனர். மேலும், ரணிலின் நலனுக்கு துணைபோகும் வகையில் பல்வேறு சதிகார சக்திகளால் பாராளுமன்றத்தை தாக்கி, ஜனநாயகத்தின் ஒரே உச்ச நிறுவனத்தை குழிதோண்டிப் புதைத்து, சர்வாதிகாரத்தை நிலைநாட்டுவதற்கான பின்னணியை உருவாக்கும் முனைப்பு உள்ளதாக சந்தேகம் எழுந்துள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## வெளிநாட்டுப் பயணங்களை...

வணிக சபையின் முன்னாள் தலைவர் சந்ரா ஜயரத்ன உள்ளிட்ட தரப்பினர் தாக்கல் செய்திருந்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. அந்த சந்தர்ப்பத்திலேயே சட்டத்தரணிகள் இவ்வாறு நீதிமன்றத்திற்கு தெரிவித்துள்ளனர். அதேவேளை, மேற்படி மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ள முன்னாள் மத்திய வங்கியின் ஆளுநர் டபிள்யூ. டி. லக்ஷ்மன் சார்பில் சட்டத்தரணிகள் எவரும் நேற்று நீதிமன்றத்தில் ஆஜராகி இருக்கவில்லை.

அதனால் நாளை வரை அவருக்கும் வெளிநாட்டுப் பயணத்தை தடை செய்து உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. அத்துடன் தமக்கு வெளிநாட்டு பயணங்களை மேற்கொள்வதற்கான எந்த தேவையும் கிடையாது என தெரிவித்துள்ள முன்னாள் மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் அவ்வாறு வெளிநாட்டு பயணத்தை மேற்கொள்வதானால் உச்ச நீதிமன்றத்தின் அனுமதியை பெற்றுக் கொள்வதாகவும் அவர் நேற்று உச்ச நீதிமன்றத்திடம் உறுதியளித்துள்ளார்.

## வன்முறை சம்பவங்களுக்கும்...

ஸ்திரத்தன்மைக்காக அனைத்து தரப்பினரும் விரைந்து செயற்பட வேண்டும் என அமெரிக்க தூதுவர் வலியுறுத்தியுள்ளார்.

பொறுப்புக்கூறல், வெளிப்படைத்தன்மை, ஜனநாயக நிர்வாகம் மற்றும் சிறந்த எதிர்காலத்திற்கான மக்களின் கோரிக்கைகளை ஜனநாயக மற்றும் அரசியலமைப்பு கட்டமைப்பிற்குள் அமைதியான அதிகாரப் பரிமாற்றத்தின் மூலம் மாத்திரமே அடைய முடியும் என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வீதி விபத்துகளில் சிக்கி...

ஜனவரி முதலாம் திகதி முதல் ஜூலை முதலாம் திகதி வரையான காலப்பகுதியில் இந்த விபத்துக்கள் பதிவாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். மேலும், 1,387 பாரிய வீதி விபத்துக்களில் 1,459 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த விபத்துகளில் 3,326 பேர் படுகாயமடைந்துள்ளனர். இந்த காலகட்டத்தில் 4,309 சிறு விபத்துகளும், 2,229 விபத்துக்களில் சொத்துக்களுக்கான சேதங்களும் ஏற்பட்டுள்ளன. எவ்வாறாயினும், இந்த நாட்களில் திடீரென வீதிகளில் வாகனங்களின் எண்ணிக்கை குறைந்ததினால் ஒப்பீட்டளவில் விபத்துக்கள் மிகக் குறைவாகவே காணப்படுவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## 13 ஆவது திருத்தச் சட்டத்தை...

இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே, இந்த விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அமைச்சரின் கருத்தை ஏற்றுக் கொண்ட பிரதமர், அரசியலமைப்பின் அடிப்படையில் விடயங்களை முன்நகர்த்தி நாட்டிற்கு வளமான எதிர்காலத்தை உருவாக்குவதே தன்னுடைய எதிர்பார்ப்பாகவும் இருப்பதாக தெரிவித்துள்ளார்.

13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதை ஆரம்பமாக கொண்டு முன்னோக்கி நகர்வதே தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை அடைந்துகொள்வதற்கான நடைமுறை சாத்தியமான வழிமுறை என்பதை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## தீர்வு தாமதித்தால்...

உறுப்பினர் டளஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

அவ்வாறில்லையெனில் நாட்டில் தொடர்ந்தும் பதற்றம் நீடிக்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். கட்சித்தலைவர்களின் கூட்டத்தில் புதிய ஜனாதிபதி மற்றும் பிரதமரை நியமிப்பது தொடர்பில் இணக்கம் ஏற்பட்டது. இதனடிப்படையில், புதிய ஜனாதிபதி மற்றும் பிரதமரை கூடிய விரைவில் நியமிக்க வேண்டும். பிரச்சினைக்கு தீர்வு வழங்க தாமதிக்கும் அளவுக்கு நாட்டில் நிலவும் பதற்றமான சூழ்நிலை மேலும் உக்கிரமடையும்.அப்போது இலங்கை சட்டம் இல்லாத நாடாக மாறிபோகும் என்பதுடன் அதனை எவராலும் தடுத்து நிறுத்த முடியாமல் போகும் எனவும் டளஸ் அழகப்பெரும எச்சரித்துள்ளார்.

## 40,000 மெ.தொன் டீசலுடன்...

ஏற்றி வரும் மேலும் சில கப்பல்கள் அடுத்த வாரம் நாட்டிற்கு வரவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். இதேவேளை, எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மக்கள் நாளாந்தம் கடும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். நாடு முழுவதும் உள்ள பெரும்பாலான மக்கள் எரிபொருள் பெற வரிசையில் காத்திருக்கின்றனர்.

எரிபொருள் தாமதம் காரணமாக பல எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மோதல்கள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

# நான் யார்? மனிதன் புரிந்து கொள்ள வேண்டிய உண்மை

பிரபஞ்சம் உள்ளிட்ட அத்தனை படைப்புக்களும் நோக்கமும் இலக்கும் கொண்டவையாகவே படைக்கப்பட்டுள்ளன. இதனை படைப்பாளனான அல்லாஹுதஆலா தம் அருள் மறையாம் அல் குர்ஆனில் தெளிவாகக் குறிப்பிட்டு வைத்திருக்கின்றான்.

அந்த வகையில் மனிதனும் இலக்கும் நோக்கும் பொறுப்பும் கொண்ட படைப்பாகவே படைக்கப்பட்டிருக்கின்றான். அவனுக்கு இவ்வுலகில் வரையறுக்கப்பட்ட வாழ்வு காலம் வழங்கப்பட்டுள்ள போதிலும் அது மிகப் பெறுமதியானதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமான வாழ்வுக் காலமாகும். குறிப்பாக ஈருலக வாழ்வின் விமோசனத்தையும் சுபீட்சத்தையும் அடிப்படையாகக் கொண்டிருக்கிறது இவ்வாழ்வுக் காலம். அதனால் இவ்வாழ்வுக் காலத்தை உரிய முறையில் முழுமையாகப் பயன்கொள்ள வேண்டும். அது மனிதனுக்கு முன்பாக இருக்கும் பாரிய பொறுப்பாகும்.

இருந்த போதிலும் மனிதர்களில் பெரும்பாலானவர்கள் தம் வாழ்வின் நோக்கம், இலக்கு, எதிர்பார்ப்பு குறித்து அறியாதவர்களாகவே இருக்கின்றனர். தான் ஏன் படைக்கப்பட்டு இருக்கின்றேன்? தனது இலக்கு, நோக்கம் என்ன? தன்னிடம் எதிர்பார்க்கப்படுவதென்ன? இப்பூமியில் தமது பணிகள் யாது? தாம் செல்ல வேண்டிய இடம், தமது பெறுமதி, பெறுமானம், உள்ளிட்ட அனைத்தையும் அறிந்து செயற்படத் தவறியவர்களாக இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். பூமியில் பிறந்து விட்டோம், வாழ்கிறோம், மடிகிறோம் என்றபடிதான் பலர் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

ஆனால் அல்லாஹுதஆலாவின் படைப்புகளான மனிதன் உள்ளிட்ட அனைத்தும் பொறுப்புகளையும் பணிகளையும் கொண்டனவாகவே இருந்து கொண்டிருக்கின்றன. பொறுப்புகள் வழங்கப்படாத படைப்பு எதுவும் கிடையாது.

அந்த வகையில் அல்லாஹுதஆலா வானவர்களிடம் குறிப்பிட்டதை அல் குர்ஆன் இவ்வாறு குறிப்பிட்டிருக்கின்றது. **'(நபியே) உங்களது இறைவன் மலக்குகளை நோக்கி, 'நான் பூமியில் என்னுடைய பிரதிநிதியை (ஆதமை) நிச்சயமாக ஏற்படுத்தப் போகிறேன்' எனக்கூறிய சமயத்தில் (அதற்கு) அவர்கள் 'பூமியில் விஷமம் செய்து இரத்தம் சிந்தக்கூடிய (சந்ததிகளைப் பெறும்) அவரை அதில் (உன்னுடைய பிரதிநிதியாக) ஆக்குகிறாயா? நாங்களோ உன்னுடைய பரிசுத்த தன்மையைக் கூறி உன்னுடைய புகழைக் கொண்டு உன்னைப் புகழ்ந்து கொண்டிருக்கின்றோம்' என்று கூறினார்கள்'.** (02:30)

இந்த வசனத்தின் ஊடாக மாபெரும் உண்மை உலகிற்கு வழங்கப்பட்டுள்ளது. அதுதான் மனிதன் படைக்கப்பட முன்னரே பூமி உள்ளிட்ட முழுப் பிரபஞ்சமும் படைக்கப்பட்டு இருந்துள்ளது என்பதாகும். இதன்படி பூமிக்கான புதிய படைப்பாக மனிதனைப் படைத்து அதற்கான பிரதிநிதித்துவப் பொறுப்பையும் அவனிடம் ஒப்படைக்க அல்லாஹ் நாடியுள்ளான் என்பது தெளிவாகிறது. இப் பின்புலத்தில் மனித வர்க்கத்தின் ஆரம்பமாக விளங்கும் ஆதம் (அலை) அவர்களை அல்லாஹ் படைத்துள்ளான். அத்தோடு ஆதம் (அலை) அவர்களுக்கு எல்லாவற்றின் பெயர்களைக் கற்றுக்கொடுத்து, சதாவும் தன்னை வணங்கி துதித்து புகழ்ந்து கொண்டிருக்கும் வானவர்களை அப்படைப்புக்கு சிரம் பணியும் படி கூறிய போது இப்லீஸை தவிர அனைவரும் அவனது கட்டளைப்படி சிரம் பணிந்தார்கள். தம் கட்டளைக்கு கட்டுப்பட்டு செயற்படத் தவறியதற்காக இப்லீஸை அவன் சபித்து வெளியேற்றி விட்டான்.

இவற்றின் ஊடாக மனிதன் பூமிக்கான புதிய படைப்பாக இருந்த போதிலும் அல்லாஹ் அவனை எவ்வளவு தூரம் கண்ணியப்படுத்தியுள்ளான் என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது. அத்தோடு நில்லாது பூமிக்கான பிரதிநிதி என்ற அந்தஸ்தையும் பொறுப்பையும் அவன் மனிதனுக்கு வழங்கியும் கௌரப்படுத்தி இருக்கின்றான். இது மாபெரும் பொறுப்பும் அந்தஸ்தும் கௌரவமும் ஆகும். இவ்வாறான உயரிய பொறுப்பையும் அந்தஸ்தையும் மனிதனைத் தவிர உலகில் வேறு எந்தப் படைப்புக்கும் அவன் வழங்கவில்லை.

அத்தோடு தாம் அளித்துள்ள பிரதிநிதித்துவ பொறுப்பை மனிதன் நிறைவேற்றுவதற்காக அவனுக்கு உழைக்கும் படி அனைத்து படைப்புகளுக்கும் அவன் கட்டளையிடப்பட்டு வசப்படுத்திக் கொடுத்துள்ளான். (அல் குர்ஆன்) அதற்கேற்ப அவை விரும்பியோ விரும்பாமலோ பணியாற்றிக் கொண்டிருக்கின்றன. (அல் குர்ஆன்)

மேலும் பூமியிலுள்ள அனைத்தும் மனிதனுக்காகவே படைக்கப்பட்டுள்ளன. இதனை அல் குர்ஆன் **'அவன் தான் (பூமியையும்) பூமியிலுள்ள அனைத்தையும் உங்களுக்காக படைத்தான்'** (02:29) என்று குறிப்பிட்டிருக்கின்றது.

இதன்படி, இந்த உலகிலுள்ள அனைத்தும் மனிதனுக்காக அவனது இருப்பை நிலைநிறுத்துவதற்காக படைக்கப்பட்டுள்ளனவே அன்றி வேறில்லை.

பூமியின் பிரதிநிதி என்ற பொறுப்பை மனிதனிடம் அளித்துள்ள அல்லாஹ் அவனுக்கு வரையறுக்கப்பட்ட செயற்பாட்டு சுதந்திரத்தையும் வழங்கியுள்ளான்.

இப்பிரபஞ்சம் படைக்கப்பட்டிருப்பதன் நோக்கம், அது எவ்வாறு முன்மாதிரி இன்றி படைக்கப்பட்டிருக்கின்றது, அதில் ஏற்படும் மாற்றங்கள், வளர்ச்சிகள், முன்னேற்றங்கள் என்பவற்றை வெளிப்படுத்தும் பொறுப்பையும், பூமி கொண்டுள்ள பலத்தையும் சக்தியையும், அது கொண்டுள்ள பொக்கிஷங்கள், கருவூலங்கள் என்பவற்றை வெளிப்படுத்தும் பொறுப்பையும் மனிதனிடம் ஒப்படைக்க வேண்டும் என்று அல்லாஹ் நாடியுள்ளான். அதன் நிமித்தம் மனிதனுக்கு மறைமுக ஆற்றல்களையும் திறமைகளையும் அவன் வழங்கியுள்ளான். குறிப்பாக அல்லாஹ்வின் நாட்டத்தை நிலைநிறுத்தும் அளவுக்கு மறைமுக ஆற்றல்களும் திறமைகளும் பெற்றவனாக மனிதன் உள்ளான்.

அதேநேரம் இப்பூமி அமைந்திருக்கும் பிரபஞ்சமும் பூமியின் புதிய படைப்பான மனிதனும் நிர்வகிக்கப்படும் விதிகளுக்கு இடையில் ஒத்த தன்மை காணப்படுவதை அவதானிக்கலாம். மனிதனுக்கும் பூமி உள்ளிட்ட பிரபஞ்சத்திற்கும் இடையில் முரண்பாட்டு நிலையோ மோதல் நிலையோ ஏற்பட இடமளிக்கப்பட்டும் இல்லை. பூமி உள்ளிட்ட பிரபஞ்சத்தின் பாரிய சக்தியின் மூலம் மனிதனின் ஆற்றல்களும் சக்தியும் நசுக்கப்படவும் மாட்டாது.

இப்பூமியிலுள்ள எல்லாவற்றையும் விட மனிதன் மதிப்பு வாய்ந்தவன். கண்ணியம் மிக்கவன். இதிலுள்ள ஏதேனும் ஒன்றைப் பெறுவதற்காக அவனை அடிமையாக்கிவிடவோ அவனது மதிப்பைக் குறைத்து மதிப்பிடவோ கூடாது. மனிதனின் மனிதத்தன்மையின் எந்த அடிப்படை அம்சங்களுக்கு எதிராகவும் வரம்பு மீறலாகாது.

மேலும் 'பூமிக்கான என்னுடைய பிரதிநிதியை ஏற்படுத்தப் போகிறேன்' என்றதும் 'இரத்தம் சிந்தக்கூடியவர்களையா படைக்கப் போகிறாய்' என வானவர்கள் வினவிய போது, 'நீங்கள் அறியாதவற்றை எல்லாம் நான் அறிவேன்' என்று குறிப்பிட்டுள்ளான். இதன் ஊடாக மனிதர்களாகிய எம்மைப் படைத்து பூமிக்கான பிரதிநிதியாக நியமிப்பதில் அல்லாஹ் எடுத்துக் கொண்டுள்ள அக்கறையும் சிரத்தையும் எடுத்தியம்பப்பட்டு இருக்கின்றது,

இவ்வாறெல்லாம் அந்தஸ்துகளை வழங்கி அல்லாஹ் மனிதனைக் கௌரவப்படுத்தியுள்ள போதிலும் அவை தொடர்பில் பாராமுகமாகவும் கவனயீனமாகவும் நடந்து கொள்பவர்களாகவே அவன் இருந்து கொண்டிருக்கின்றான். இது மனிதன் தம்மைப் பற்றி அறியாத தன் வெளிப்பாடே அன்றி வேறில்லை.

ஆனால் அல்லாஹ் அளித்துள்ள பிரதிநிதித்துவப் பொறுப்பை ஒவ்வொரு மனிதனும் நிறைவேற்ற வேண்டும். அதிலிருந்து எவரும் விலகிக் கொள்ள முடியாது. ஏனெனில் 'ஆலமுல் அர்வா'வில் அதற்கான வாக்குறுதியை மனிதர்களாகிய நாம் அளித்திருக்கிறோம். அதனால் பூமியின் பிரதிநிதித்துவ பொறுப்பை நிறைவேற்றாமை தொடர்பில் ஒவ்வொரு மனிதனும் மறுமையில் விசாரணைக்கு உட்படுத்தப்படவே செய்வார். அவ்விசாரணைக்கு பதிலளிப்பதை தவிர்த்துக் கொள்ள முடியாது.

ஆகவே மனிதர்களாகிய நாம் படைக்கப்பட்டிருப்பதன் நோக்கத்தை அறிந்து அதற்கேற்ப செயற்படவும் வாழ்வை அமைத்துக் கொள்ளவும் முயற்சிப்போம். அதுவே ஈருலக வாழ்வின் விமோசனத்திற்கு அடித்தளமாகும்.

மர்லின் மரிக்கார்...

# நற்பண்புகளின் முக்கியத்துவம்

ஒழுக்கம் என்பது இஸ்லாமிய கலாச்சாரத்தோடு பின்னிப் பிணைந்ததொரு விடயமாகும். இவ்வுலகத்தில் தான் செய்யும் ஒவ்வொரு செயல்களுக்கும் மறுமை நாளில் நன்மை, தீமை கணக்கிடப்பட்டு தீர்ப்பு வழங்கப்படும் என நம்பக்கூடிய ஒரு முஸ்லிமைப் பொறுத்தவரை அவன் கண்டிப்பாக பேணி நடக்க வேண்டிய விடயங்களில் இதுவும் ஒன்று. ஏனெனில், **'(மக்களை) அதிகமாக சொர்க்கத்தில் பிரவேசிக்கச் செய்வது இறையச்சமும் நற்குணமும் தாம்' என்று நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.** (ஆதாரம்: திர்மிதி).

அதேநேரம் இறையச்சமும் நற்குணமும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்த, பிரிக்க இயலாத, இணைபிரியாத தண்டவாளங்களை போன்றவையாகும். ஏனென்றால் இறையச்சம் இருக்கின்ற மனிதனிடம் ஒழுக்கக்கேடுகள் இராது. ஒழுக்கக்கேட்டில் திளைத்திருக்கும் மனிதன் உண்மையான இறைநம்பிக்கையாளனாக இருக்க மாட்டான்.

இதையே நபி(ஸல்) அவர்கள், **'உலோபித்தனமும், தீயகுணமும் ஓர் இறைநம்பிக்கையாளனிடம் ஒன்று சேராது'** என்று கூறுகிறார்கள். (ஆதாரம்: திர்மிதி).

எனவே மறுமையில் தனக்கு சுவனம் கிடைக்க வேண்டும் என விரும்பும் ஒவ்வொரு முஸ்லிமும் தான் செய்யும் செயல்கள் அனைத்தையும் அது நற்செயலா அல்லது தீயசெயலா என அச்செயலை செய்யத் தொடங்குவதற்கு முன்னர் கவனம் செலுத்தி செய்வது மிகவும் முக்கியமாகும்.

பொதுவாக செயல்களைப் பொறுத்தவரை அது எத்தகையது என்பதை நிச்சயிப்பதில் உள்ள கண்ணோட்டம் ஒவ்வொருவருக்கும் வேறுபடுகிறது. ஒருவர் பார்வையில் தீயதாகத் தெரியும் ஒரு செயல் இன்னொருவர் பார்வையில் தீயதற்றதாகவோ அல்லது நன்மை பயப்பதாகவோ கருத வாய்ப்புள்ளது.

உதாரணமாக மது அருந்துவதை, சிலர் தங்களின் சமூக அந்தஸ்தைக் காட்டுவதாகவும் புகைபிடிப்பதை சிலர் தங்களுக்குப் புத்துணர்ச்சி அளிப்பதாகவும் கருதலாம். இது போன்ற பல தீய செயல்களை சரி காண்பவர்கள் இருக்கலாம். ஆனால் இதே செயல்களை தவறாகவும் பிழையாகவும் கருதுபவர்களும் இருக்கின்றனர். என்றாலும் நல்லதையும் தீயதையும் பிரித்தறிவதற்கு தேவையான அழகிய வழிகாட்டலை இஸ்லாம் வழங்கியுள்ளது.

**ஒரு தடவை நவாஸ் இப்னு ஸம் ஆன்(ரலி) அவர்கள் நபி(ஸல்) அவர்களிடம், நல்லவை மற்றும் பாவம் குறித்து கேட்ட பொழுது, 'நற்குணமும், நற்செயலும் நன்மையாகும். எது உன் உள்ளத்தில் நெருடலை ஏற்படுத்துமோ, எதை மக்கள் அறிந்து கொள்வதை நீ விரும்ப மாட்டாயோ, அதுவே பாவமாகும்'** என்றார்கள். (ஆதாரம்: முஸ்லிம்)

குறிப்பாக சிலர் மற்றவர் முன்னிலையில் சர்வ சாதாரணமாக புகைபிடித்தல் போன்ற தவறானதும் பிழையானதுமான செயற்பாடுகளில் ஈடுபடுவர். இவ்விதமான செயற்பாடுகளின் தீங்குகளையும் பாதிப்புக்களையும் அவர்களிடம் எடுத்துக்கூறினாலும் கூட அவற்றைப் பொருட்படுத்த மாட்டார்கள். அவ்வாறானவர்கள் கூட அவர்களுக்கு நெருக்கமான சிலரை காணும் பொழுது ஒளிந்து கொள்வர். சிலருக்கு அல்லது அவர்கள் விரும்பக்கூடியவர்களுக்கு தாம் செய்யக்கூடிய இக்காரியம் தெரிந்து விடக் கூடாது என நினைக்கின்றனர். அதைத்தான் நபி (ஸல்) அவர்கள் தீயச் செயல்களை பிரித்தறியும் அளவுகோலாக மிக அழகாக அறிவுறுத்தி இருக்கின்றார்கள்.

தன்னை கவனிக்கும் சிலரைக் கண்டு, தான் செய்யும் சில தவறான செயல்களை சிலர் மறைக்க முனைகின்றனர். ஆனால் இவை அனைத்தையும் அல்லாஹ் எந்நேரமும் கவனித்துக் கொண்டு இருக்கிறான் என்பதை மறந்து விடலாகாது.

அந்த வகையில் நற்குணத்தை தங்களது தலையாய கடமையாக இறைவிசுவாசிகள் கருத வேண்டும் என்று இஸ்லாம் போதிக்கின்றது. நற்குணத்தினை பேணும் பண்பு, முஸ்லிமை ஓர் இஸ்லாமியன் என அடையாளப்படுத்துவதோடு மறுமையில் சுவர்க்கத்தினை எளிதில் பெறக் கூடிய வழியாகவும் அமைகிறது.

எனவே ஒழுக்கத்துடன் நற்குணத்தினை பேணி நடந்து சுவனத்துக்குரியவர்களாக இறைவனை மறுமையில் சந்திப்பதற்கு ஒவ்வொருவரும் முயற்சி செய்வது இன்றியமையாததாகும்.

மின்ஸார் இப்றாஹிம்...

# நேர காலத்தை குறைகூறலாமா?

உலகம் படைக்கப்பட்ட நாள் முதல் இரவும் பகலும் தொடராக மாறி மாறி நிகழ்வதைபோன்று, இவ்வுலகில் மனிதன் தொடர்ந்து பல நிகழ்வுகளையும் சந்தித்து வருகிறான். அது சில வேளைகளில் அவனுக்கு சாதகமாகவும், மகிழ்ச்சியளிப்பதாகவும், இலாபகரமானதாகவும் இன்னும் சில நேரங்களில் அவனுக்குப் பாதகமாகவும், உடல் ரீதியாகவும் பொருள் ரீதியாகவும் இழப்பும், பல்வேறு பிரச்சினைகள் தரக்கூடியதாகவும் இருக்கலாம்.

ஒரு தடவை முஹம்மத்(ஸல்) அவர்கள், **'அல்லாஹ் கூறினான், 'ஆதமின் மகன் (மனிதன்) காலத்தை ஏசுகிறான். நானே காலம் (படைத்தவன்), என் கையில்தான் இரவு, பகல் (இயக்கம்) உள்ளது.'** என்றுள்ளார்கள். (ஆதாரம்: புகாரி)

மனித சமுதாயம், மக்கள்தொகையின் வளர்ச்சியின் அடிப்படையில் மட்டுமின்றி வாழ்வியல் வளர்ச்சியிலும், சகல துறைகளிலும் மிகுந்த முன்னேற்றமான நிலையில் இருக்கும் ஒரு காலகட்டத்தை எட்டிப்பிடித்துள்ளது. உலகம் என்பது ஒரு குடும்பம் எனும் சொல்லாடல் உண்மையாகும் விதத்தில், உலகமே ஒரு கிராமம் போன்று தொலைதொடர்பு சாதனங்களின் மூலம் ஒரு கைப்பிடிக்குள் அடங்கிவிட்டது.

இந்நிலையிலும் மனிதன் இயல்பாகவே தனது விருப்பத்திற்கு மாற்றமான நிகழ்வுகளைக் காணும்போதும், அவை அவனுக்கு சிறியதொரு பாதிப்போ இழப்போ ஏற்படுத்தும் போதும் அதை ஏற்றுக்கொண்டு பொறுமையுடன் செயற்படாமல், அவன் இறைவனிடமிருந்து இதுவரை பெற்ற, பெற்றுள்ள, பெற்று வரும் வாழ்வுக்கான நல்ல உணவு , உடை, வீடு, வசதி சாதனங்கள் போன்ற அன்றாட தேவைகள் முதல் ஆரோக்கியம், அந்தஸ்து, செல்வம், சொத்துக்கள், ஓய்வு இதர போன்ற எல்லா அருட்செல்வங்களையும் மறந்தவனாக காலத்தைக் குறை கூற முனைகின்றான்.

எனக்கு காலம் சரியில்லை, நேரம் சரியில்லை போன்ற காரணங்கள் கூறி நொந்துகொள்வதும், வேதனை படுவதும் காலத்தை மாற்றி மாற்றி ஏற்படுத்தி, கண்காணித்து வரும் இறைவனைக் குறை கூறுவது போன்றதாகும். இறைவன் தன்னையே காலம் எனக் கூறியதால் காலத்தைப் குறைகூறுவது தம்மைப் படைத்த இறைவனைக் குறைகூறுவதற்கு ஒப்பானதாக அமையலாம் என்பதை மனிதர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

மனிதன் தனக்கு ஏற்படும் எந்தவொரு பிரச்சினையாக இருப்பினும் அது ஒரு சிறிய முள் காலில் குத்துவது முதல் தனக்கு ஏற்படும் சிறிய பெரிய நோய்கள், இழப்புக்கள், நஷ்டங்கள், கஷ்டங்கள் எல்லாம் இறைவன் புறத்திலிருந்து ஏற்படுகின்றது. அவனே இதை அகற்றுவான் என்ற நம்பிக்கையுடன் இறைவனைக் குறை கூறாமல், தனக்கு அவ்விதமான பிரச்சினைகள், இழப்புகள் நிகழ தன் புறத்தில் என்ன தவறு நிகழ்ந்தது என்பது குறித்து சிந்தித்து தமது செயல்களை சீராக்கி செயற்பட முயல வேண்டும்.

பிரச்சினைகளும் துன்பங்களும் நிகழும் பொழுது அவை தனக்கு வைக்கப்படும் மற்றொரு சோதனை என்ற எண்ணத்தில் அவற்றைப் பொறுமையுடன் எதிர்கொள்ளவேண்டும். அதில் தான் மன நிம்மதி பெறமுடியும். அதற்கு மாறாகப் பிரச்சினைகள் ஏற்படும் பொழுது, 'நமக்கு நேர காலம் சரியில்லை' எனக் கூறி சலித்துக் கொண்டால் அதனால் எவ்வித பயனும் ஏற்படப்போவதில்லை. பிரச்சினைகள் ஏற்படும் பொழுது அதனை இன்முகத்துடன் எதிர்கொள்பவன் தான் புத்திசாலியே அன்றி சலித்துக் கொள்பவனல்லன்.

குறிப்பிட்ட ஒரு நேரத்தை நல்லதாகவோ கெட்டதாகவோ கருதும் கண்ணோட்டம் தவறானது என்பதையும் இந்நபிமொழி எடுத்தியம்புகிறது. ஏனெனில் ஒருவருக்கு ஏதாவது ஒரு பிரச்சினை நிகழும் ஒரு குறிப்பிட்ட அதே நேரத்தில் மற்றொருவருக்கு ஏதாவது நன்மையான காரியம் நிகழும். உலகில் நிகழும் பிறப்பும் இறப்புமே இதற்கு நல்லதொரு எடுத்துக்காட்டாகும். குறிப்பிட்ட நேரத்தில் உலகின் ஒரு பகுதியில் ஓர் இறப்பு நிகழ்ந்தால் அதேநேரம் உலகின் ஏதாவது ஒரு இடத்தில் ஒரு உயிரின் பிறப்பும் நிகழ்கிறது. மரணம் நிகழ்ந்த இடத்தில் உள்ளவர்கள் அந்நேரத்தை பழித்து அது கெட்ட நேரம் எனக் கூறினால், ஜனனம் நிகழ்ந்த இடத்தில் உள்ளவர்கள் அதனை நல்ல நேரம் எனக் கூறுகின்றார்கள். இப்பொழுது அக்குறிப்பிட்ட நேரம் உலகிற்கு நல்ல நேரமா? கெட்ட நேரமா? என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இதனைத் தான் இந்நபிமொழி அழகாக விளக்கிக் கூறுகின்றது. ஒவ்வொருவரின் செயல்களுக்கேற்ப காலமாக இருக்கும். இறைவன் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் நல்லதையும் நடக்க வைக்கின்றான். கெட்டதும் இடம்பெறச் செய்கின்றான். இது மனிதர்கள் ஒவ்வொருவரின் அவரவருக்கான செயல்பாடுகளுக்கான எதிர்விளைவுகளாகும். அவ்வாறு இருக்கும் பொழுது அக்குறிப்பிட்ட காலத்தை ஏசுவதாலோ அல்லது புகழ்வதாலோ எவ்வித பிரதிபலனும் இல்லை.

இந்நபிமொழி மிகவும் பயனுள்ளது. உளவியல் ரீதியான ஓர் உண்மையை எடுத்துக்காட்டுகிறது. அதாவது நிகழ்வது ஏதும் தற்செயலும் இல்லை. காலத்தின் தன்மையைச் சார்ந்ததும் இல்லை. அவை அனைத்தும் இறைவன் புறத்திலிருந்து மனிதர்களின் செயல்பாடுகளுக்கேற்ற பிரதிபலனாகவோ அல்லது மனிதன் தன் அறிவினால் அறிந்து கொள்ள இயலாத வேறொரு நன்மை கருதியோ இறைவனின் நாட்டப்படியே ஏற்படுகிறது என்பதே உண்மையாகும். இந்த எண்ணம் மனிதனின் மனதில் சக்தியுடனும் தெம்புடனும் ஓர் ஆக்கபூர்வமான கண்ணோட்டத்தை வழங்கி அவனது வாழ்க்கை பயணம் மேலும் நம்பிக்கையாகவும் உறுதியாகவும் சீராக தொடர வழிவகுக்கும்.

இப்னு ஹனீஃப்...

# குர்ஆனை அணுகும் முறை

இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் தனது 'இஹ்யா உலுமுத்தீன்' என்ற நூலில் இறைநேசர் ஒருவரின் சம்பவமொன்றை குறிப்பிட்டுள்ளார்கள்.

அதாவது குறித்த இறைநேசர், 'எல்லோரையும் போன்று நானும் முதலில் குர்ஆனைப் படித்தேன். அதில் எனக்கு ஓரளவு இன்பமும் சுவையும் கிடைக்கப்பெற்றது. பிறகு இக்குர்ஆனை நபி (ஸல்) அவர்களே 'எனக்கு முன் அமர்ந்து வாசிக்க நான் அதை செவியேற்கிறேன்' என்ற உணர்வோடு வாசித்தேன். அப்போது நான் பெற்ற இன்பம் இரட்டிப்பானது. அதன் பின்னர் வானவர் தலைவர் ஜிப்ரீல் (அலை) அவர்கள், 'எனக்கு முன்னால் அருள்மறையை வாசிக்கிறார்' என்ற உணர்வோடு குர்ஆனை ஓதினேன். அச்சமயம் நான் பெற்ற இன்பம் மேலும் பன்மடங்காகியது. அதற்கடுத்தபடியாக, 'அல்லாஹ் என்னுடன் உரையாடுகிறான்' என்ற உணர்வோடு குர்ஆனை ஓதினேன். அப்போது மாபெரும் அற்புதம் நிறைந்த குர்ஆனை ஓதுகின்ற சுவை பன்மடங்கு அதிகரித்து மெய்சிலிர்த்து பூரித்துப்போனேன்' என்றுள்ளார். அல்லாஹ் நமக்காகத்தான் அல் குர்ஆனை அருளியுள்ளதாகத் திரும்பத்திரும்ப கூறுகிறான். அவன் நம்மை அழைக்கிறான். நம்மோடு அளவளாவுகிறான். அதனால் அவனது பேச்சை, அவனது சொற்களை கேட்டுணர்வதற்காக தினமும் சில நிமிடங்களாவது குர்ஆனை ஓத வேண்டும். அப்போது அல்லாஹ் நாடினால் நம் வாழ்வில் பெரும் மாற்றம் ஏற்பட்டுவிடும்.

நாளுக்கு மூன்று வசனங்கள், ஐந்து வசனங்கள் என்றபடி தொடர்ந்து ஓதி குர்ஆனை விளங்கினால் முழு குர்ஆனையும் ஓதி விளங்கிடலாம். நமது வாழ்வில் பொழிகின்ற அருள் வளமும் மாற்றமும் அளவிற்கரியதாகவும் இருக்கும்.

மேலும் எமது சுயமதிப்பீட்டுக்காக இரவிலோ அதிகாலையிலோ சில நிமிடங்களை நாம் ஒதுக்கிக் கொள்ளவும் வேண்டும். அதன் ஊடாக திறந்த மனதுடன் எமது அன்றாட வாழ்வின் நிகழ்வுகள் குறித்து கவனம் செலுத்த வேண்டும். அல்லாஹ்வின் கோபத்திற்கும் அதிருப்திக்கும் ஆளாகக்கூடிய எதையாவது செய்தேனா என தினமும் நாம் நம்மையே கேட்டுக் கொள்ளவேண்டும். இக்கேள்விக்கான பதில் எந்தளவுக்கு இதயத்தை குடைந்தெடுக்கும் எனில் எம் வாழ்வில் மாற்றம் ஏற்பட்டிடவும் வழிவகுக்கும். குறிப்பாக அல்லாஹ்வின் அதிருப்திக்கு ஆளாகக்கூடிய எந்தச் செயலைச் செய்தேன்? என்னை நரகத்தில் தள்ளக்கூடிய எக்காரியத்தில் ஈடுபட்டேன் போன்ற கேள்விகளை தினமும் கேட்டுக்கொண்டே இருந்தாலேயே சீர்திருந்தி காலப்போக்கில் எம்மை சுவனத்தை நோக்கி பயணிக்க அது வழிசெய்யும்.

ஆகவே குர்ஆனின் மீது நம்பிக்கை வைத்து அதனைப் புரிந்துகொண்டு அதன்படி செயற்பட்டு அதன்பால் ஏனையவர்களையும் அழைத்து மறுமை வாழ்வில் வெற்றிபெற முயற்சிப்போம்.

தொகுப்பு:
அபூ முஜாஹித்...

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் ஆனி மாதம் 31ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 துல்ஹிஜ்ஜஹ் பிறை 15



**குறள் தரும் சிந்தனை**

எய்தற் கரியது இயைந்தக்கால் அந்நிலையே
செய்தற் கரிய செயல்

கிடைப்பதற்கு அரிய காலம் வாய்க்கும் போது அதைப் பயன்படுத்திக் கொண்டு, அப்போதே செயற்கரிய செய்து முடிக்க வேண்டும்.

# தொல்பொருள் சின்னங்களுக்கு பாதிப்பு ஏற்பட இடமளிக்கலாகாது!

அந்நிய செலாவணி பற்றாக்குறையை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெற்றுள்ள பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு பெற்றுத் தருமாறு கோரி ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்துள்ள ஆர்ப்பாட்டக்காரர்கள், கடந்த 09 ஆம் திகதி ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம் மற்றும் அலரி மாளிகை ஆகிய கட்டடங்களுக்குள் பலவந்தமாகப் பிரவேசித்தனர்.

இக்கட்டடங்களுக்குள் இவர்கள் பலவந்தமாகப் பிரவேசித்து அங்கு தங்கி இருப்பதைத் தொடர்ந்து, அக்கட்டங்களுக்குள் எவருமே செல்லக் கூடிய நிலைமை உருவாகியது. அதனால் இக்கட்டடங்களைப் பார்வையிடுவதற்காக நாட்டின் பல பிரதேசங்களில் இருந்தும் கடந்த சில நாட்களாக மக்கள் வருகை தருகின்றனர்.

ஆனால் இக்கட்டடங்கள் தொல்பொருள் பெறுமானங்கள் வாய்ந்தவையும், முக்கியத்துவம் மிக்கவையும் ஆகும். இருந்தும் தற்போது இக்கட்டடங்களைப் பார்வையிட வருபவர்களின் செயற்பாடுகளை நோக்கும் போது, அவர்கள் தொல்பொருள் பெறுமானங்களையும் கட்டடங்களின் முக்கியத்துவத்தையும் பெரும்பாலும் உணராதிருப்பதை அவதானிக்க முடிகின்றது. இக்கட்டடங்களைப் பார்வையிட வருகின்றவர்களில் சிலரின் செயற்பாடுகள் இக்கட்டடங்களின் முக்கியத்துவத்தை சிதைத்து தொல்பொருள் பெறுமானங்களை சேதப்படுத்தும் வகையில் அமைந்து விடுகின்றன.

இதேவேளை இக்கட்டடங்களில் இருந்த முக்கியத்துவம் வாய்ந்த சில பொருட்கள் காணாமல் போயுள்ளதாகவும் மேலும் சில பொருட்கள் திருடிச் செல்லப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பார்வையாளர்கள் போன்று இக்கட்டடங்களுக்குள் பிரவேசித்த ஓரிருவர் சில பொருட்களைத் திருடிச் செல்லும் போது கையும் மெய்யுமாகப் பிடிபட்டும் உள்ளனர். இரண்டொருவர் இக்கட்டடங்களின் பாதுகாப்பின் நிமித்தம் அமைக்கப்பட்டுள்ள வேலிகளுக்குப் பொருத்தப்பட்டிருக்கும் இரும்புக் கம்பிகளை திருடிச் செல்லும் காணொளிகள் சமூக வலைத்தளங்களிலும் வைரலாகியுள்ளன.

இந்த நிலையில் பதில் ஜனாதிபதியும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க, இக்கட்டடங்களில் இருந்த பல ஆவணங்கள் காணாமல் போயுள்ளதாகவும் இன்னும் பல ஆவணங்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் அத்துமீறிப் பிரவேசித்து தங்கியிருக்கும் இக்கட்டடங்களின் முக்கியத்துவம் மற்றும் தொல்பொருள் பெறுமானங்கள் குறித்தும் அவற்றிலுள்ள ஆவணங்கள் தொடர்பிலும் வெளியாகி வரும் தகவல்கள் பல மட்டத்தினரதும் அவதானத்தைப் பெற்றுள்ளன.

இந்த நிலையில் சர்வமதத் தலைவர்கள், ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம் மற்றும் அலரி மாளிகை ஆகியவற்றின் முக்கியத்துவம், தொல்பொருள் பெறுமானங்கள் என்பவற்றைக் கருத்தில் கொண்டு அவற்றை உரிய தரப்பினரிடம் ஒப்படைக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தினரும் விஷேட அறிக்கையொன்றை விடுத்து, 'தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த பல ஆவணங்கள் மற்றும் பொதுச்சொத்துக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும் இக்கட்டடங்களின் முக்கியத்துவத்துக்கு மதிப்பளித்தும் அவற்றை உரியவர்களிடம் கையளிப்பதை உறுதி செய்யுமாறு கேட்டுள்ளனர்.

இவை முற்றிலும் வரவேற்கப்பட வேண்டிய வேண்டுகோள்களாகும். ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம் மற்றும் அலரி மாளிகை என்பவற்றின் முக்கியத்துவமும் தொல்பொருள் பெறுமானங்களும் உணரப்பட வேண்டும். அவற்றின் முக்கியத்துவமும் தொல்பொருள் பெறுமானங்களும் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும். அதனால் இக்கட்டடங்களை உரியவர்களிடம் ஒப்படைப்பது இன்றியமையாததாகும்.

இல்லாவிடிவில் இக்கட்டங்களுக்குள் பார்வையாளர்கள் என்ற போர்வையில் பிரவேசிக்கும் ஓரிருவர் மேற்கொள்ளும் செயற்பாடுகள் இக்கட்டடங்களின் முக்கியத்துவதற்கும் தொல்பொருள் பெறுமானங்களுக்கும் பங்கம் விளைவிக்கவே வழிவகுக்கும். அத்தோடு பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு தேடிப் போய் பொதுச் சொத்துகளுக்கும் தொல்பொருள் பெறுமானங்களுக்கும் அரச ஆவணங்களுக்கும் சேதங்களும் பாதிப்புகளும் ஏற்படுத்திய கதையாக அமைந்து விடும். அதற்கு ஒருபோதுமே இடமளிக்கலாகாது.

அதன் காரணத்தினால் இக்கட்டடங்களின் முக்கியத்துவம் மற்றும் தொல்பொருள் பெறுமானங்கள் என்பவற்றைக் கருத்தில் கொண்டு விடுக்கப்பட்டுள்ள கோரிக்கைகளின் அடிப்படையில் போராட்டக்காரர்கள் இக்கட்டடங்களில் இருந்து உடனடியாக வெளியேற முன்வர வேண்டும். அதுவே மக்களின் எதிர்பார்ப்பும் ஆகும்.

அவ்வாறு வெளியேறுவதானது இக்கட்டடங்களின் முக்கியத்துவத்தையும் தொல்பொருள் பெறுமானங்களையும் பாதுகாப்பதற்கு அளிக்கும் பங்களிப்பாகவும் கூட அமையும். ஆகவே இவை தொடர்பில் கருத்தில் கொண்டு செயற்படுவது இக்கட்டங்களில் தங்கி இருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களின் பொறுப்பாகும்.

editor.tkn@lakehouse.lk

# இந்திய பாராளுமன்றத்தில் எம்.பிக்கள் பயன்படுத்த முடியாத வார்த்தைகள்!

இந்திய நாடாளுமன்றத்தில் உள்ள இருஅவைகளிலும் பயன்படுத்தக் கூடாத வார்த்தைகளின் புதிய பட்டியல் அடங்கிய கையேடு வெளியிடப்பட்டுள்ளது. இதில் ஊழல், துஷ்பிரயோகம், துரோகம், சர்வாதிகாரம் உள்பட பல வார்த்தைகள் இடம்பெற்றுள்ளன. இந்த வார்த்தைகள் எம்பிக்கள் பேசினால் அது அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்பட உள்ளது.



இந்திய நாடாளுமன்றத்தில் மக்களவை, மாநிலங்களவை என்ற 2 அவைகள் உள்ளன. மக்களவை எம்பிக்களை மக்கள் நேரடியாக வாக்களித்த தெரிவு செய்வர்.

மாநிலங்களவை எம்.பி.க்கள் கட்சி எம்.எல்.ஏக்களால் வாக்களித்து நியமிக்கப்படுவார்கள். மேலும் குறிப்பிட்ட துறையில் சாதனை படைத்தவர்களுக்கு கெளரவம் கொடுக்கும் வகையில் ஜனாதிபதி சார்பிலும் எம்.பிக்கள் நியமனம் செய்யப்படுவர்.

இந்த இருஅவைகளிலும் மக்கள் பிரச்சினைகள், புதிய மசோதா, சட்டங்கள் குறித்து எம்.பிக்கள் விவாதங்கள் நடத்துவார்கள். இந்த விவாதத்தின் போது நாடாளுமன்ற மரபுப்படிதான் எம்.பிக்கள் பேச வேண்டும். குறிப்பாக அவர்கள் பேசும் வார்த்தைகள் எல்லை மீறி இருக்கக் கூடாது. இவ்வாறு இருந்தால் அந்த வார்த்தைகள் அவைக்குறிப்புகளில் இருந்து நீக்கம் செய்யப்படும்.

இந்நிலையில் நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் ஜூலை 18 இல் நடைபெற உள்ளது. இதையொட்டி மக்களவை, மாநிலங்களவையில் பயன்படுத்தக் கூடாத வார்த்தைகளின் பட்டியலை லோக்சபா செயலகம் வெளியிட்டுள்ளது. ஆங்கிலம், இந்தி மொழியில் உள்ள வார்த்தைகள் இதில் இடம்பெற்றுள்ளன.

இது தொடர்பாக லோக்சபா செயலகம் வெளியிட்டுள்ள கையேட்டின்படி ஊழல், துரோகம், அவமானம், வெட்கக்கேடு, துஷ்பிரயோகம், துரோகம், ஊழல், அராஜகம், சர்வாதிகாரம், சகுனி, ரத்தக்களரி, கொரோனா பரப்புவர், துரோகம், அவமானம், குழந்தைத் தனம், ஏமாற்றுதல், திட்டினார், துரோகம் செய்தார், நாடகம், கபடநாடகம், திறமையற்றவர், அராஜகம் செய்பவர், அழிவு சக்தி, காலிஸ்தானி உள்ளிட்ட வார்த்தைகளை எம்.பிக்கள் பேச தடை விதிக்கப்பட்டுள்ளது.

பொய், உண்மையல்ல, கிரிமினல் மேலும் மோசடிக்காரர், லொலிபொப், பொப்கட், வாக்குகேட்பு, வாய்ஜாலம் காட்டுபவர், இரட்டை வேடம், பயனற்றது, கொடூரமானவர், ஏமாற்றினார், கோழை, கிரிமினல், ரவுடித் தனம், பொய், உண்மையல்ல, அவமானம், கண்துடைப்பு, கழுதை, முதலைக் கண்ணீர், முட்டாள்தனம், பாலியல் தொல்லை, குண்டர்கள் உள்ளிட்ட வார்த்தைகளையும் எம்.பிக்கள் பயன்படுத்தக் கூடாது.

இந்த வார்த்தைகள் தவிர ஏற்கனவே நடைமுறையில் உள்ள வார்த்தைகளும் இவற்றில் அடங்கும். இத்தகைய பயன்படுத்தக்கூடாத வார்த்தைகளை எம்.பி ஒருவர் பேசும் போது மக்களவை, மாநிலங்களவையின் தலைவர்கள் அவைக் குறிப்பில் இருந்து அவற்றை நீக்குவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# இளந்தலைமுறையினருக்கு முன்னுதாரணமாக வாழ்ந்தவர் மர்ஹூம் ஏ.எல்.இப்றாலெப்பை

மனிதனுக்குரிய உயர் பண்புகளுடன், எளிமையாக வாழ்ந்து மரணித்த ஓய்வுநிலை இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர் மர்ஹூம் ஏ.எல்.இப்றாலெப்பை அவர்கள் இளந்தலைமுறையினருக்கு சிறந்த முன்னுதாரணமாக விளங்கினார் என்று மட்டக்களப்பு மேல்நீதிமன்ற நீதிபதி அல்ஹாபிழ் என்.எம்.அப்துல்லாஹ் கூறினார்.

அட்டாளைச்சேனையைச் சேர்ந்த, ஓய்வு பெற்ற இலங்கை நிர்வாகசேவை சிரேஷ்ட உத்தியோகத்தர் ஏ.எல்.இப்றாலெப்பை அவர்களின் ஞாபகார்த்தம் மற்றும் பிரார்த்தனை நிகழ்வுகள் அட்டாளைச்சேனை பெரிய ஜும்மா பள்ளிவாயல் கலாசார மண்டபத்தில் நடைபெற்றன.

கிழக்கு மாகாண முதலமைச்சின் முன்னாள் செயலாளர் தேசமான்ய யூ.எல்.ஏ.அஸீஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மட்டக்களப்பு மேல்நீதிமன்ற நீதிபதி என்.எம்.அப்துல்லாஹ் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றினார்.

அவர் மேலும் கூறுகையில், “எளிமை, நேர்மை, நேர முகாமைத்துவம் உள்ளிட்ட உயர் பண்புகளுடன் மிளிர்ந்த மர்ஹூம் இப்றாலெப்பை இவ்வுலகில் 90 வருடங்கள் வாழ்ந்தார். சொந்த வாழ்க்கை, சமூக வாழ்க்கை, உத்தியோகபூர்வ வாழ்க்கை என மூன்றுவகையாகப் பிரித்துப் பார்த்தால் அவரது வாழ்வு மெச்சத்தக்கதாக அமைந்துள்ளதை தெரிந்து கொள்ளலாம். அன்னாரை இவ்வாறான நிகழ்வின் மூலம் ஞாபகப்படுத்தக் கிடைத்தமை பாராட்டுக்குரியதாகும்” என்றார்.



தேசமான்ய யூ.எல்.ஏ.அஸீஸ் பேசுகையில், “மர்ஹூம் இப்றாலெப்பை நடமாடும் பல்கலைக்கழகமாக விளங்கினார். ஏனையவர்களின் நலனில் அதிக அக்கறை கொண்டவராகத் தொழிற்பட்டார். அவரால் நான் உட்பட அதிகமானவர்கள் நன்மையடைந்தனர். பொதுப்பணிகளில் அவரது ஈடுபாடு, அக்கறை அதிகரித்திருந்தது. தனக்கென அவர் எதனையும் சேர்த்து வைக்கவில்லை” எனக் குறிப்பிட்டார்.

வெளிநாட்டமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர் அஷ்ஷெய்க் எம்.ஐ.எம்.அமீர் பேசுகையில், “ஒருவருக்கு நன்மை செய்ய வேண்டுமென்பதில் அவர் ஒரு போதும் தயங்கியதில்லை. பதவிஉயர், நல்ல நிகழ்வுகளின் போது அவர்களை வாழ்த்துவதிலும், நோய் அல்லது துக்க நிகழ்வுகளில் ஆறுதல் சொல்வதிலும் அன்னார் முதன்மையானவராக விளங்கினார். நான் இலங்கை நிர்வாக சேவைக்குத் தெரிவு செய்யப்பட்டபோது கொழும்புக்குத் தேடிவந்து வாழ்த்துத் தெரிவித்துடன், தேவையான ஆலோசனைகளையும் வழங்கினார். அன்னாரது நினைவாக 'இப்றாலெப்பை பவுண்டேஷன்' அமைப்பினை அங்குரார்ப்பணம் செய்து, தர்மங்களை தொடர வேண்டும்” என்றார்.

## அட்டாளைச்சேனையில் நடைபெற்ற ஞாபகார்த்த நிகழ்வில் புகழாரம்



“மர்ஹூம் இப்றாலெப்பை போன்றதொரு சமூக சேவகனை சமூகம் மிக நீண்டகால இடைவெளிக்குப் பின்னரும் பெற முடியாது என்பதை காலம் உணர்த்தும். அன்னார் வாழ்ந்ததை விடவும், அவரது தேவையையும், முக்கியத்துவத்தையும் அவரது மரணம் பன்மடங்காக்கியுள்ளது” என சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம். ஹனிபா தெரிவித்தார்.

மர்ஹூம் இப்றாலெவ்வையின் குடும்பம் சார்பில் உரையாற்றிய ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் யூ.எம். வாஹிட் பேசுகையில், “அட்டாளைச்சேனை பிரதேசத்திலுள்ள அனைத்து நிறுவனங்களினதும் உயர்வு, வளர்ச்சியில் மர்ஹூம் இப்றாலெவ்வை அவர்களின் பங்களிப்பு உள்ளது. அவர் நல்லதொரு அரச உத்தியோகத்தராகவும், குடும்பங்களை அனுசரிக்கும் நல்லதொரு மனிதப் பண்பாளராகவும் விளங்கினார்” என்றார்.

'ஆள்வினை கொண்டதோர் கல்விமான் நீள் துயில் கொண்ட நிலை கண்டீர்' எனும் தலைப்பில் கவிஞர் ஈழமதி ஜப்பார் கவிதை பாடினார். ஆசிரிய ஆலோசகர் மௌலவி என்.ரி.நஸீரின் பிரார்த்தனையுடன் நிகழ்வுகள் நிறைவு பெற்றன.

முகம்மட் றிஸான்...
(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

# பெண்களின் குரலாக ஒலித்தவர் எழுத்தாளர் பத்மா சோமகாந்தன்



பாடசாலைப் பருவத்தில் 1954 இல் மாணவியாக சுதந்திரனில் எழுதத் தொடங்கிய பத்மா, வீரகேசரி, ஈழகேசரி, தினபதி, தினக்குரல், உதயன், முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் புதுமை இலக்கியம், சிற்பியின் கலைச்செல்வி மற்றும் மல்லிகை, ஞானம், இலங்கை விகடன், தமிழகத்தில் வெளியான தாமரை, கல்கி, கலைக்கதிர் முதலானவற்றிலும், அமைப்புகளின் ஆண்டுமலர்கள், சிறப்புமலர்கள், நினைவு மலர்கள், மாநாட்டு, கருத்தரங்கு மலர்களிலும் எழுதியிருக்கிறார்.

பின்னாளில் ஈழத்து இலக்கிய உலகில் பத்மா சோமகாந்தன் எனப் பிரபல்யம் பெற்றவர்.

ஏழாம் வகுப்பு மாணவியாக இருந்த காலத்தில் எழுதத் தொடங்கியவர், உயர்வகுப்புக்குச் சென்றும் எழுதினார். திருமணமானதன் பின்னரும் எழுதினார். பிள்ளைகள் பெற்று குடும்பத் தலைவியானதன் பிறகும் எழுதினார். பேரப்பிள்ளைகளுடன் கொஞ்சி விளையாடும் காலப்பகுதியிலும் எழுதினார் இந்த ஆளுமை.

சுதந்திரன் பத்திரிகை 1954 இல் நடத்திய அகில இலங்கை சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு பெற்றார். இவருடன் போட்டியிட்ட, இரண்டு முக்கிய படைப்பாளிகள் இரண்டாம், மூன்றாம் பரிசுகளைப் பெற்றார்கள்.

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில், பிரம்மஸ்ரீ ஏரம்பக்குருக்கள், ஸ்ரீமதி அமிர்தம்மாள் தம்பதியரின் புதல்வியாக பிறந்த பத்மா பொதுப்பணிகளில், கலை, இலக்கியம் மற்றும் மகளிர் விவகாரங்களில் தொடர்ந்தும் உற்சாகமாக இயங்கினார். பயணங்கள் மேற்கொண்டார். பயிலரங்குகளில் உரையாற்றினார். இவரது 'பாரா முகங்கள்_ சில பார்வைகள்' நூலுக்கு தமிழக எழுத்தாளர் திலகவதி (ஐ.பி.எஸ்) முன்னுரை தந்துள்ளார்.

"இந்த நூல் வெறும் கேள்வி பதில் கூறும் நூல் அல்ல. பல்வேறு சமூக, பொருளாதார, அரசியல் சார்ந்த பிரச்சினைகளையும் அலசும் நூல். ஆசிரியர் பத்மா சோமகாந்தன் அவர்களின் பல்துறை அறிவையும் அனுபவங்களையும் விவேகத்தையும் அறிவிக்கும் நூல்" என்கிறார் இதற்கு அணிந்துரை எழுதியிருக்கும் செ. கணேசலிங்கன்.


## இன்று நினைவு தினம் (1934–2020)


நெஞ்சுக்கு நிம்மதி என்ற நூல் இளம் பெண்களது பிரச்சினைகளின் தீர்வுக்கான ஆலோசனைகளைக் கூறுகிறது. இதற்கு அன்னலட்சுமி இராஜதுரை முன்னுரை தந்திருக்கிறார்.

பத்மா சோமகாந்தன், தினக்குரல் ஞாயிறு இதழில் நூறுக்கும் மேற்பட்ட சாதனைப் பெண்கள் பற்றியும், கலைக்கேசரியில் 75 இற்கும் மேற்பட்ட இசை வல்லுனர்கள் பற்றியும் எழுதியிருப்பவர்.

இவை தவிர, பெண்ணின் குரல், சொல், அகவழி, சங்கத்தமிழ், பிரவாகினி ஆகிய இதழ்களில் ஆசிரியராகவும் இயங்கியவர்.

'ஈழத்துச் சிறுகதை வளர்ச்சியில் பத்திரிகைகளின் பங்கு' என்ற தலைப்பில் பத்மா சோமகாந்தன் எழுதிய கட்டுரை, முற்போக்கு எழுத்தாளர் சங்கம் 1996 இல் கொழும்பில் நடத்திய இலக்கியப் பேரரங்கு விழாவில் வெளியிட்ட 'புதுமை இலக்கியம்' மலரில் வெளிவந்துள்ளது.







கடவுளின் பூக்கள், வேள்வி மலர்கள், புதிய வார்ப்புகள், கரும்பலகைக் காப்பியங்கள், இற்றைத்திங்கள் முதலான சில சிறுகதைத்தொகுப்புகளை வரவாக்கியிருக்கும் அவர், இந்நூல்களுக்காக தமிழ்நாடு லில்லி தேவசிகாமணி பரிசு, சென்னை இந்து நாளிதழின் பாராட்டு, சார்க் மகளிர் சங்கத்தின் பரிசு, வடக்கு_ கிழக்கு மாகாண அமைச்சின் சாகித்திய பரிசு பெற்றிருக்கிறார்.

சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியில் தொடங்கி, சாந்தி சச்சிதானந்தம் வரையில் 23 பெண் ஆளுமைகள் குறித்து பத்மா சோமகாந்தன் எழுதியிருக்கும் மற்றும் ஒரு நூல் 'ஈழத்து மாண்புறு மகளிர்'. இது தவிர 'ஈழத்து தமிழ்ப்பெண் ஆளுமைகள்' என்ற நூலையும் வரவாக்கியிருக்கிறார்.

"நமது வரலாற்றை எழுதும்பொழுது, இனிமேலும் நாங்கள் மகளிர் வகிபாகத்தை மறத்தல் கூடாது என்பதை பத்மா எழுதிய ஈழத்து மாண்புறு மகளிர் நூல் அழுத்தமாகச் சொல்கிறது" என்று இந்த நூலுக்கு முன்வாசகக்குறிப்பு எழுதியிருக்கிறார் பேராசிரியர் கா. சிவத்தம்பி.

இன்றும் எம் மத்தியில் திருமதி பத்மா சோமகாந்தன் நினைவுகளாக வாழ்கிறார்.

லெ.முருகபூபதி...
அவுஸ்திரேலியா.



# புலமைக் கதிர்

## தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான





திருமதி.பத்மா சந்திரமோகன்
புனித அந்தோனியார் கல்லூரி
கொழும்பு - 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் – II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

**I. பின்வரும் பந்தியை வாசித்து அதன் கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.**

புத்தரின் தந்தத்தைக் கொண்ட தங்கப் பேழையைச் சுமந்த வண்ணம் கொம்பன் யானை வலம் வரும். யானைப்படை புடைசூழ, பட்டுக்குடை நிழல் தர, பல வண்ண மின் விளக்குகள் ஒளிதர பளபளவென மின்னும் தங்கப்பேழை ஒரு தனியழகுதான். இவ்வளவு சிறப்புக்களைக் கொண்ட கண்டி எசல ஊர்வலத்தினை நாமும் கண்டுகளிப்போம்.

1. தங்கப் பேழையினுள் இருப்பது என்ன?

.....................................................................................................

2. இப்பந்தியிலுள்ள இரட்டைக்கிளவியை எழுதுக.

.....................................................................................................

3. தன்மை, பன்மை வினைச்சொல்லினை பந்தியிலிருந்து தெரிக.

.....................................................................................................

4. தங்கப்பேழை எனும் சொல்லினை பிரித்தெழுதுக.

.....................................................................................................

5. 'நாமும் கண்டுகளிப்போம்' என்பதனை ஒருமையில் எழுதுக.

.....................................................................................................

6. யானையின் ஆண், பெண் மரபுப் பெயர்களைக் குறிப்பிடுக.

ஆண் ................................ பெண் ......................................

**II. கீழே அடைப்பிற்குள் இருந்து சொற்களை தெரிந்தெடுத்து வாக்கியங்களைப் பூர்த்தி செய்க.**

**(தெளிவான, கலகல, மடமட, சரியாக)**

7. அவன் இளநீரை ........................... என்று குடித்தான்.

8. நாம் எப்போதும் சொற்களை ........................ உச்சரிக்க வேண்டும்.

9. தருஜன் .............................. எழுத்துக்களில் கடிதத்தை எழுதினான்

10. சுமதி ......................... என சிரித்தாள்.

**III. கீழே கொடுக்கப்பட்ட சொற்களை தன்மை, முன்னிலை, படர்க்கை என வேறுபடுத்துக.**

(அவர்கள், நாம், அவன், நான், நீங்கள், வந்தாயா? சென்றது, படித்தோம், நீ)

| | தன்மை | முன்னிலை | படர்க்கை |
|---|---|---|---|
| 11. | ........................ | ...................... | ......................... |
| 12. | ........................ | ...................... | ......................... |
| 13. | ........................ | ...................... | ......................... |

**IV. வேறுபட்ட சொல்லின் கீழ்க் கோடிடுக.**

14. திங்கள், வெள்ளி, நிலா, சந்திரன்

15. உறக்கம், துயில், நித்திரை, மயக்கம்

16. அகம், வீடு, உள்ளம், இல்லம்

**V. ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.**

17. do / live / Where / you

.....................................................................................................

18. very / am / hungry / I

.....................................................................................................

19. கீழே கொடுக்கப்பட்டுள்ள படங்களின் சிங்கள சொற்களை தமிழ் எழுத்தில் எழுதுக.






i. ..................................  ii. ................................

**VI.**

20. ஒரு முச்சக்கர வண்டியில் மூன்று பேர் பயணிக்க முடியுமாயின் 303 பேர் பயணிக்க எத்தனை முச்சக்கர வண்டிகள் தேவை?

.....................................................................................................

21. 


இவ்வுருவிலுள்ள செங்கோணங்களின் எண்ணிக்கை யாது?

..................................................................

22. வருடமொன்றில் 30 நாட்களைக் கொண்ட மாதங்கள் எத்தனை?

.....................................................................................................

23. இங்குள்ள பொருட்தொகையில் 4/6 பங்கு எத்தனை?



......................................

24. இடைவெளி நிரப்புக

| x | 5 | 8 | 6 |
|---|---|---|---|
| 4 | 20 | ...... | ...... |
| 2 | ..... | ...... | 12 |
| 7 | 35 | ...... | ..... |

25. 6333 இவ்வெண்ணை சொற்களில் எழுதினால்

.....................................................................................................

26. ஐந்து ரூபாவிலுள்ள 25 சதங்களின் எண்ணிக்கை யாது?

.....................................................................................................

**கீழே கொடுக்கப்பட்ட விலைப்பட்டியலைக் கொண்டு 27ம், 28ம், 29ம் வினாக்களுக்கு விடையளிக்குக.**

1kg சீனி ரூபாய் 280.00
ஒரு சவர்க்காரம் ரூபாய் 65.00
2 kg தேயிலை ரூபாய் 640.00

27. 2kg சீனியும் 5 சவர்க்காரங்களும் வாங்க தேவையான பணம் எவ்வளவு?

.....................................................................................................

28. 1 1/2kg தேயிலையும் 500g சீனியும் எவ்வளவு ரூபாய்?

.....................................................................................................

29. மூன்று சவர்க்காரங்களும் 2kg சீனியும் வாங்கி கடைக்காரரிடம் ரூபாய் 1000.00 கொடுத்தால் கிடைக்கும் மிகுதிப்பணம் எவ்வளவு?

.....................................................................................................

**சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

30. மனதை ஒரு நிலைப்படுத்தும் செயற்பாடுகளில் நான்காவது படி
i. பிரார்த்தனை  ii. திடசித்தம்  iii. மலர்வு

31. இலைக்கஞ்சி தயாரிக்கப் பயன்படும் இலைகளில் ஒன்று
i. ஆமணக்கு  ii. முடக்கொத்தான்  iii. வேம்பு

32. மரத்தின் இலைகளை இணைத்துக் கூடு அமைக்கும் பிராணி
i. செவ்வெறும்பு  ii. கறையான்  iii. தேனீ

33. உணவுக்கு பயன்படாத பூ வகை
i. அகத்தி  ii. வாழை  iii. முள்முருங்கை

34. தென்மாகாணத்தில் அமைந்துள்ள ஓர் மாவட்டம்
i. கொழும்பு  ii. மாத்தறை  iii. கண்டி

35. போமலின் சேர்க்கப்பட்ட மீன்களை உண்பதால் ஏற்படும் விளைவு
i. வயிற்றுளைவு  ii. மயக்கம்  iii. உதடுகள் வீங்குதல்

36. இலவச பாடநூலை வழங்கும் அரச நிறுவனமானது
i. சுகாதார அமைச்சு  ii. கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
iii. கல்வி உயர்கல்வி அமைச்சு

37. இலங்கை தேசப்படமொன்றிலே சிறு வீதிகளை குறிக்கும் நிறமானது
i. சிவப்பு  ii. பச்சை  iii. மஞ்சள்

38. காந்தமொன்றில் ஒன்றையொன்று கவராத முனைகள்
i. ஒத்தமுனைகள்  ii. ஒவ்வாதமுனைகள்  iii. தென்முனை

39. கோள் மண்டலத்தில் மிகப்பெரிய கோளானது
i. புதன்  ii. வியாழன்  iii. வெள்ளி

40. சூரிய ஒளி இல்லாத வேளையில் இலைகள் சுருங்கும் தாவரம் அல்லாதது
i. நெல்லி  ii. அகத்தி  iii. கீழ்க்காய் நெல்லி

41. காற்றின் மூலம் இயங்கும் இசைக்கருவியாக அமையாதது
i. புல்லாங்குழல்  ii. நாதஸ்வரம்  iii. மத்தளம்

42. நேர அட்டவணைப்படி பயணிக்கும் போக்குவரத்து சாதனம்
i. புகைவண்டி  ii. கார்  iii. பேருந்து

43. இலங்கையில் அமைக்கப்பட்ட முதலாவது அதிவேக பாதை
i. வடக்கு அதிவேக பாதை  ii. தெற்கு அதிவேக பாதை
iii. கொழும்பு – கண்டி அதிவேக பாதை

44. பின்வருவனவற்றுள் விசேட இயல்புடைய பிராணியாக அமைவது
i. மண்புழு  ii. நுளம்பு  iii. பல்லி

45. பின்வருவனவற்றுள் புரதம் அதிகம் அடங்கிய உணவு
i. கரட்  ii. பருப்பு  iii. கீரை

46. ஆடையில் படிந்த தார்க்கறையை போக்க மிகவும் உகந்த பொருள்
i. மண்ணெண்ணெய்  ii. வினாகிரி  iii. எலுமிச்சை சாறு

47. சமாதானத்தின் சின்னமாக பயன்படுத்தப்படுவது
i. கொக்கு  ii. கிளி  iii. வெண்புறா

48. ஒருவரின் பாதத்தில் துருப்பிடித்த ஆணி குத்தினால் அவருக்குத் தாமதமின்றிக் குடிக்கக் கொடுப்பதற்கு உகந்த மருந்து
i. மரமஞ்சள்  ii. வில்வம்பூ  iii. கொத்தமல்லி

(08ஆம் பக்கம் பார்க்க)

07 ஆம் பக்கத் தொடர்

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் – II

49.  உருவில் காணப்படும் பறவையானது
i. மரங்கொத்தி
ii. நீர்க்காகம்
iii. மீன்கொத்தி

50. நீரிழிவு நோயுள்ள ஒருவர் காலை ஆகாரமாக உட்கொள்ள உகந்த உணவு
i. நூடில்ஸ் ii. கௌபி iii. இடியப்பம்

51. நான்கு இதழ்களைக் கொண்ட மலரானது
i. வெட்சி ii. மல்லிகை iii. செம்பருத்தி

52. பின்வருவனவற்றுள் குழு விளையாட்டாக அமைவது
i. ஈட்டி எறிதல் ii. உயரம் பாய்தல் iii. கரப்பந்து

53. பின்வருவனவற்றுள் மிக விரைவாக ஆவியாவது
i. நீர் ii. பெற்றோல் iii. மண்ணெண்ணெய்

54. காற்றின் மூலம் பரம்பலடையாத தாவரம்
i. எருக்கலை ii. பருத்தி iii. மரமுந்திரிகை

55. இலங்கைக்கேயுரிய பறவையானது
i. மயில் ii. குயில் iii. நீலப்புள்

56. தேவநம்பியதீச மன்னனால் கட்டுவிக்கப்பட்டது
i. திசாவாவி ii. யோதவாவி iii. கந்தளாய்க்குளம்

57. பின்வரும் எந்த மலரின் மூலம் ஒரு பானத்தை தயாரிக்கலாம்
i. எலுமிச்சை ii. வில்வம்பூ iii. தோடை

58. நெற்றுக்களை உண்டாக்கும் தாவரமானது
i. சோளம் ii. வெண்டி iii. கத்தரி

59. மண்ணரிப்பினை உடனடியாக தடுக்க எடுக்கும் வழிமுறை
i. முடுபயிர் வளர்த்தல் ii. மரங்களை வளர்த்தல்
iii. கல்வேலி அமைத்தல்

60. 'வீட்டுத்தோட்டத்தின் பயன்கள்' என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் அமைக்குக. ஒவ்வொரு வாக்கியமும் கருத்துப் பிழையின்றி எழுவாய், பயனிலை, தொடர்பு சரியானதாக அமைவதோடு ஒரு வாக்கியத்தில் ஐந்து சொற்களுக்கு குறையாமல் இருக்க வேண்டும்.

.............................................................................................................

### கடந்த வார (08.07.2022) வினாத்தாள் 1 இற்கான விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | 3 | 09 | 1 | 17 | 3 | 25 | 1 | 33 | 2 |
| 02 | 2 | 10 | 3 | 18 | 1 | 26 | 2 | 34 | 2 |
| 03 | 1 | 11 | 1 | 19 | 2 | 27 | 2 | 35 | 1 |
| 04 | 2 | 12 | 3 | 20 | 1 | 28 | 1 | 36 | 3 |
| 05 | 3 | 13 | 2 | 21 | 3 | 29 | 3 | 37 | 2 |
| 06 | 1 | 14 | 1 | 22 | 2 | 30 | 2 | 38 | 1 |
| 07 | 2 | 15 | 2 | 23 | 1 | 31 | 3 | 39 | 3 |
| 08 | 2 | 16 | 3 | 24 | 3 | 32 | 1 | 40 | 2 |

# சுயநலமே கருதாமல் மக்களுக்காகவே வாழ்வை அர்ப்பணித்தவர் காமராஜர்

**தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சரும், அகில இந்திய தேசிய காங்கிரஸின் முன்னாள் தலைவருமான கர்மவீரர் மறைந்த கே. காமராஜரின் 99 ஆவது பிறந்த தினம் இன்றாகும்(15.07.2022).**

அண்ணல் மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு போன்ற தலைவர்களுடன் இணைந்து இந்திய விடுதலைக்கு உழைத்தவர்களில் கே. காமராஜரும் ஒருவராவார். இந்தியாவின் தேசிய முன்னேற்றத்திற்கும் குறிப்பாக தமிழ்நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கும் அளப்பரிய பங்களிப்பை நல்கியுள்ள காமராஜர் தன்னலமற்ற ஒரு தலைவராக இன்றும் போற்றப்படுகின்றார்.

தமிழ்நாடு குமாரசாமி நாடார் மற்றும் சிவகாமி அம்பாள் தம்பதியினருக்கு மகனாக 1903 ஜுலை 15 ஆம் திகதி விருதுநகரில் அவர் பிறந்தார். காமராஜர், தமது ஆரம்பக் கல்வியை சத்ரிய வித்யா சாலா பாடசாலையில் தொடர்ந்தார்.


இளம் வயதில் தந்தையை இழந்ததன் விளைவாகப் பொருளாதார கஷ்டத்திற்கு முகம் கொடுத்த இவர், கல்வியை இடைநடுவில் கைவிட்டதோடு தாய்மாமாவின் கடையில் வேலைக்குச் சேர்ந்தார். சிறு பராயத்திலேயே வேலைக்குச் சேர்ந்த போதிலும், பத்திரிகைகளைப் படிப்பதிலும் அரசியல் தலைவர்களின் உரை களை செவியேற்பதிலும் இவர் அதிக ஆர்வம் கொண்டவராக இருந்தார்.

இந்நிலையில் அவர் தமது 16 ஆவது வயதில் இந்திய காங்கிரஸ் கட்சியில் தொண்டனாக இணைந்து கொண்டார். மகாத்மா காந்தியின் சுதந்திரப் போராட்டத்தினால் கவரப்பட்ட இந்திய இளைஞர்களில் ஒருவராக கமராஜரும் விளங்கினார். அதனால் மகாத்மா காந்தி முன்னேடுத்த 'ஒத்துழையாமை' இயக்கத்தில் 18 வயதாகும் போதே இவர் பங்கெடுத்தார். 1930 இல் உப்பு சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டதால் இவர் கைது செய்யப்பட்டு கொல்கத்தா சிறையில் அடைக்கப்பட்டு, சொற்ப காலத்தில் விடுதலை செய்யப்பட்டார்.

இந்நிலையில், இவரிடம் அரசியல் தொடர்பில் காணப்பட்ட ஆர்வமும் நாட்டுப்பற்றும் அவரை 1940 இல் காங்கிரஸ் கமிட்டி தேர்தல் தலைவராக பொறுப்பேற்க வைத்தன. 1942 இல் நடைபெற்ற ஓகஸ்ட் புரட்சிப் போராட்டத்திலும் கலந்து கொண்டார்.

இந்திய சுதந்திரப் போராட்டத்தின் பொருட்டு முன்னெடுக்கப்பட்ட பல்வேறு போராட்டங்களிலும் பங்குபற்றிய காமராஜர், ஆறு தடவை சிறையில் அடைக்கப்பட்டு 09 ஆண்டுகள் சிறைத்தண்டனையும் அனுபவித்துள்ளார். இருந்த போதிலும், அவர் தாய்நாட்டுக்கான சுதந்திரப் போராட்ட நடவடிக்கைகளிலும் அரசியல் செயற்பாடுகளிலும் இருந்து ஒதுங்கி விடவில்லை.

1954 இல் தமிழ்நாட்டு மாநிலத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டிய காமராஜர், தமிழகத்தின் முதலமைச்சரானார். இவர் இப்பதவியை மூன்று தடவைகள் (1954–57, 1957–62, 1962–63) 09 ஆண்டுகள் வகித்துள்ளார்.



இக்காலப்பகுதியில் தமிழகத்தின் முன்னேற்றத்திற்காக அயராது உழைத்தார். குறிப்பாக கல்விக்கு முன்னுரிமை அளித்தார்.

ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் 7 வீதமாகக் காணப்பட்ட தமிழகத்தின் கல்வி வளர்ச்சி இவரது ஆட்சிக் காலத்தில் 37 வீதம் வரை வளர்ச்சி கண்டது. இவர் முதலமைச்சரானதும், சாதி, மத வேறுபாடின்றி அனைத்துக் குழந்தைகளுக்கும் ஆரம்பக்கல்வி இலவசமாக்கப்பட்டது. ஆறாயிரம் கிராமங்களில் பாடசாலைகளே இல்லை என்பதை அறிந்து, அந்தந்த ஊர்களில் 'ஒரேயொரு ஆசிரியர் கடமையாற்றும் பாடசாலைகளைத்' திறந்தார்.

'ஏழைக் குழந்தைகள் கல்வி பெறுவதற்கு கையேந்தி பிச்சையெடுக்கவும் நான் தயார்' என்றார் அவர். தான் படிக்கா விட்டாலும், இந்த தேசம் படிக்க வேண்டும் என்று நினைத்தவர் அவர். எந்த சொத்தும் இல்லாதவர்களுக்கு கல்வி ஒரு சொத்து. கல்வி என்ற சொத்தை பெற்றுவிட்டாலே வறுமை தானாகவே ஒழிந்து விடும் என்பதே காமராஜரின் நிலைப்பாடாக இருந்தது. மாணவர்களுக்கு இலவச மதிய உணவுத் திட்டத்தையும் இவரே அறிமுகப்படுத்தினார்.

இவர் முதலமைச்சரான முதல் வருடத்திலேயே அனைத்து ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களுக்கும் ஓய்வூதியம் வழங்க ஆணையிட்டார். அதன் பின்னர் உயர்நிலைப் பாடசாலை ஆசிரியர்களுக்கும், தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கும் ஓய்வூதியம் வழங்கும்படி ஓய்வூதியத் திட்டத்தை விரிவுபடுத்தினார்.

இவரது தாயார் ஒரு தடவை இவரை சந்திப்பதற்காக கிராமத்திலிருந்து முதலமைச்சர் அலுவலகத்திற்கு வருகை தந்திருந்தார். அங்கு முதலமைச்சரைச் சந்திப்பதற்காகப் பொதுமக்கள் வரிசையில் காத்து நின்று கொண்டிருந்தனர். இச்சமயம் தாயார் காமராஜரை சந்திக்க வந்திருப்பதை முதலமைச்சரின் உத்தியோகத்தர்கள் அவருக்கு எடுத்துக் கூறினர். அதற்கு முதலமைச்சர் காமராஜர், "பரவாயில்லை, அவரும் வரிசையில் வரட்டும்" என்று கூறி மக்கள் சேவையின் போது எல்லோரையும் சரிநிகராக நோக்கினார்.

மற்றொரு தடவை காமராஜரின் தாயார் தம் மகனுக்கு கடிதமொன்றை எழுதி, மாத செலவுக்காக அனுப்பி வைக்கும் பணம் போதியதாக இல்லை. அப்பணத்தை சற்று அதிகமாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொண்டார்.

அவர் முதலமைச்சராகப் பதவி வகித்த காலங்களில் நாட்டின் முன்னேற்றம், மக்களின் வாழ்க்கை மேம்பாடு, கல்வி, வேலைவாய்ப்பு என்பவற்றுக்கு முன்னுரிமையளித்து பல திட்டங்களை முன்னெடுத்தார். ஜவஹர்லால் நேருவின் அழைப்பை ஏற்று தேசிய அரசியிலில் பிரவேசித்த இவர், 1964 இல் அகில இந்திய காங்கிரஸ் தலைவரானார். 1967 வரை இப்பதவியை வகித்த இவர், இந்தியாவின் மூன்று பிரதமர்களைச் தெரிவு செய்வதற்கும் பங்களித்துள்ளார். இவ்வாறு நாட்டுக்கும் தமிழக மேம்பாட்டுக்கும் அளப்பரிய சேவையாற்றிய காமராஜர், 1975 ஒக்டோபர் 02 ஆம் திகதி (காந்தியின் பிறந்த தினம்) காலமானார்.

அவர் இறந்த போது பையில் இருந்த சிறிதளவு பணத்தைத் தவிர, அவரது வங்கிக் கணக்கிலோ பணம் எதுவும் இருக்கவில்லை, அத்தோடு அவருக்கு சொந்தமாக வீடோ, வேறு ஏதாவது சொத்துகளோ இருக்கவில்லை. தன் வாழ்நாள் முழுவதும் வாடகை வீட்டிலேயே வசித்தார் கர்மவீரர் காமராஜர். இவர் மரணமடைந்த சமயம் தமிழகத்தின் முதலமைச்சராக மு. கருணாநிதி பதவி வகித்தார். அதனால் முழு அரச மரியாதையுடன் காமராஜருக்கு இறுதி மரியாதை நடத்தப்பட கருணாநிதி ஏற்பாடுகளை மேற்கொண்டார்.

காமராஜர் மறைந்த மறுவருடம், அதாவது 1976 இல் இந்தியாவில் குடிமக்களுக்கு வழங்கப்படும் உயரிய விருதாகக் கருதப்படும் 'பாரத ரத்னா' விருது அவருக்கு வழங்கப்பட்டது. அத்தோடு மதுரை பல்கலைக்கழகத்திற்கு, மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் என்றும், சென்னை சர்வதேச விமான நிலையத்தின் உள்நாட்டு முனையத்திற்கு காமராஜர் பெயரும் சூட்டப்பட்டது.

கர்மவீரர் காமராஜர் சமூக மேம்பாட்டுக்கு உழைத்த முன்னுதாரணம் மிக்க ஒரு அரசியல் தலைவராக விளங்கினார். அதனால் அவர் மறைந்து பல தசாப்தங்களாகியும் (47 வருடங்கள்) இன்றும் நினைவு கூரப்படுகிறார்.

**மா. இளவழுதி...**
திண்டுக்கல்

## தினகரன் ஊடகவியலாளர் மர்லின் மரிக்காருக்கு தமிழகத்திலிருந்து 'தேசத்தின் மாமணி' விருது

**காமராஜர் பிறந்த தினத்தை முன்னிட்டு தமிழ்நாட்டின் நான்கு அமைப்புகள் இணைந்து ஏற்பாடு செய்துள்ள விருது வழங்கும் திட்டத்தில், இலங்கையில் இருந்து ஒரேயொருவருக்கு கிடைத்துள்ள சிறப்பு கௌரவம்**

அகில இந்திய தேசிய காங்கிரஸின் முன்னாள் தலைவரும், தமிழக முன்னாள் முதலமைச்சரும், 'தென்னாட்டு காந்தி' என அழைக்கப்பட்டவருமான மறைந்த கே. காமராஜரின் 109 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட விருது வழங்கும் திட்டத்தின் கீழ், தினகரன்_ வாரமஞ்சரி இணையாசிரியர் மர்லின் மரிக்கார் 'தேசத்தின் மாமணி விருது' வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

தமிழ்நாட்டின் திண்டுக்கல் பசுமைவாசல் பவுண்டேசன், குமரி மாவட்டத்தின் தமிழ்நாடு பனைமரம் காக்கும் பாதுகாப்பு இயக்கம், கன்னியாகுமரி மாவட்டத்தின் காமராஜர் இளைஞர் வளர்ச்சி பேரவை, சேலம் மாவட்டத்தின் ஸ்ரீ சக்சஸ் அகாடமி அன்ட் பவுண்டேசன் ஆகிய அமைப்புகள் இணைந்து சமூக மேம்பாட்டுக்காக பங்களித்து வரும் பல்துறைச் சாதனையாளர்களுக்கு இணையவழி ஊடாக விருது வழங்கி கௌரவிக்கும் திட்டத்தின் கீழேயே ஊடகவியலாளர் மர்லின் மரிக்காருக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.



'பெருந்தலைவர் காமராசரின் மாமணி விருதுகள்_ 2022' என்ற தொனிப்பொருளின் கீழ் நடத்தப்பட்ட இவ்விருது வழங்குதலில் 'தேசத்தின் மாமணி' விருது பெற்றுக் கொண்ட ஒரே இலங்கை பத்திரிகையாளர் மர்லின் மரிக்கார் ஆவார். இவ்விருதை மொத்தம் ஏழு பத்திரிகையாளர்கள் பெற்றுக் கொண்டுள்ள போதிலும், ஏனைய அனைவரும் தமிழ்நாட்டின் வெவ்வேறு மாவட்டங்களைச் சேர்ந்தவர்களாவர் என்று ஏற்பாட்டாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இவ்விருது வழங்கும் திட்டத்தின் கீழ் ஆசிரியர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள், சமூகசேவகர்கள், பத்திரிகையாளர்கள், கலைஞர்கள், இளம் படைப்பாளர்கள், மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள் ஆகிய 09 பிரிவுகளைச் சார்ந்த சாதனையாளர்கள் தெரிவு செய்யப்பட்டு, வெவ்வேறு பெயர் கொண்ட விருது வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளனர். இந்த விருதுகளுக்கென 1112 பேர் விண்ணப்பித்துள்ளனர். பத்திரிகைத்துறை ஊடாக சமூக மேம்பாட்டுக்காக அளித்துவரும் பங்களிப்பில் பெற்றுக் கொண்டுள்ள சாதனைகள் மற்றும் கௌரவிப்புக்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு மர்லின் மரிக்கார் இவ்விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆதரவற்ற பிள்ளைகளுக்கு அடைக்கலம் தந்து பராமரித்து வரும் 'SOS குழந்தைகள் கிராமம்'

பெற்றோரின் பராமரிப்பை இழந்த அல்லது நீதிமன்றத் தீர்ப்புகளால் நன்னடத்தையின் கீழ் இருக்கும் குழந்தைகளுக்குப் பராமரிப்பை வழங்கும் ஒரு நிறுவனம் 'SOS குழந்தைகள் கிராமம்' ஆகும். SOS என்பதன் நீண்ட பெயர் Save Our Soule என்பதாகும். இங்குள்ள குழந்தைகள் தூய்மையான மனப்பான்மையுடன் நல்ல குழந்தைகளாக வளர்க்கப்படுகின்றனர்.அத்துடன் நல்ல குடிமக்களாக சமூகமயமாக்கப்பட்டும் வருகின்றனர்.

இதனை ஏற்படுத்தியவர் ஆஸ்திரியாவைச் சேர்ந்த டொக்டர் ஹெர்மன் மெய்னர். 1949 ஆம் ஆண்டு ஏற்பட்ட போரின் போது ஆதரவற்ற குழந்தைகளுக்காக எஸ்.ஓ.எஸ் குழந்தைகள் கிராமத்தை இவர் நிறுவினார். போரினால் பெற்றோரின் பராமரிப்பை இழந்த பிள்ளைகளுக்கு ஒரு குடும்பத்தின் பாதுகாப்பை வழங்குவதே அவரது நோக்கமாக இருந்தது.

பின்னர், மேலும் இதை விரிவுபடுத்தி, 135 நாடுகளில் இதுபோன்ற குழந்தைகள் கிராமங்கள் நிறுவப்பட்டுள்ளது. SOS குழந்தைகள் கிராமங்களின் தலைமையகம் ஆஸ்திரியாவில் உள்ளது. இலங்கையின் முதலாவது SOS சிறுவர் கிராமம் 1985 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இது தற்போது, இலங்கையில் பிலியந்தலை, காலி, நுவரெலியா, அநுராதபுரம், மொனராகலை, யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களில் செயற்படுகின்றது. இக்கிராமங்களில் அநாதரவான பெருமளவிலான சிறுவர்களுக்கு பாதுகாப்பான தங்குமிடத்தை வழங்கி வருகின்றது.



அநுராதபுரம் மாவட்ட செயலாளர் ஜனக ஜயசுந்தர அண்மையில் அநுராதபுரம் சிறுவர் கிராமத்திற்குச் சென்று அதன் செயற்பாடுகள் குறித்து கேட்டறிந்து கொண்டார். அந்த கிராமத்தின் குழந்தைகள் மிகவும் மகிழ்ச்சியாகவும், நன்கு பராமரிக்கப்பட்டும் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுவதையும் இவரால் பார்க்க முடிந்தது.

அநுராதபுரம் மாவட்டத்தில் SOS சிறுவர் கிராமம் 1994 இல் நிறுவப்பட்டது. இதன் முதல் இயக்குனர் அஜித் விஜேமான்ன. தற்போதைய இயக்குனர் அதுல கமல்சிறி. இங்கு சுமார் 400 குழந்தைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். அவர்களில் 8 பேர் பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்கள். இவர்களில் 47 பேருக்கு திருமணமும் ஆகிவிட்டது.

குழந்தைகளுக்கு உணவு, தண்ணீர், உடைகள், சுகாதார வசதிகள், கல்வி, பராமரிப்பு மற்றும் பெற்றோரின் பராமரிப்பு போன்ற அடிப்படைத் தேவைகளைப் பெறும் இடமாக 'SOS குழந்தைகள் கிராமம்' காணப்படுகின்றது. SOS சிறுவர் கிராமத்தின் ஊடாக இலங்கையில் 41000 இற்கும் மேற்பட்ட சிறுவர்கள் அடைக்கலம் பெற்று ,தமது வாழ்வில் வெற்றியீட்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

SOS சிறுவர் கிராமத்திற்கு தேவையான உதவிகள் இலங்கை மற்றும் வெளிநாடுகளில் உள்ள பணக்காரர்களிடம் இருந்து வருகின்றன. இது அரசாங்க ஆதரவையும் பெற்றுள்ளதோடு, நன்னடத்தை மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு ஆணையம், குழந்தைகள் மற்றும் பெண்கள் பணியகம், தேசிய குழந்தை காப்பீட்டு ஆணையம் ஆகியவற்றுடன் இணைந்து செயல்படும் ஒரு நிறுவனமாக உள்ளது.

எதிர்காலத்தை வலுப்படுத்த உதவும் இந்த நிறுவனங்களை நடத்துவதற்கு ஆதரவளிக்கத் தயாராக இருக்கும் நன்கொடையாளர்கள், அவர்களின் ஆதரவு இது போன்ற நேரத்தில் மிகவும் மதிப்புமிக்க உதவியாக இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஏ.ஆர்.எம்.ரபியூதீன்...**
(திறப்பனை தினகரன் நிருபர்)

## ஹப்புத்தளையில் இரு யுவதிகளின் தங்கச் சங்கிலிகள் அபகரிப்பு

ஹப்புத்தளை காகொல்ல வைஜன்சன் பகுதியில் பஸ்ஸுக்காக காத்திருந்த இரண்டு யுவதிகளின் தங்க சங்கிலியை திருடர்கள் இருவர் பறித்துச் சென்ற சம்பவம் நேற்று முன்தினம் (13) காலை இடம்பெற்றுள்ளது.

பண்டாரவளைக்கு செல்வதற்காக பஸ்ஸுக்காக காத்திருந்த போதே, யுவதிகள் தங்கச் சங்கிலியை பறிகொடுத்துள்ளனர்.

இதன்போது சங்கிலியை பறிகொடுத்த யுவதிகள் இருவரும் பதறி நின்ற போது, அவ்வழியாக சென்ற ஹப்புத்தளை பிரதேச தவிசாளர் என்னவென்று வினவியுள்ளார்.

இதனையடுத்து சம்பவத்தை கூறிய யுவதிகள், அவர் உடனடியாக தனது தொலைபேசி மூலம் அயலிலுள்ள தோட்ட தவிசாளருக்கு தெரிவித்துள்ளார்.இதனையடுத்து, திருடர்கள் இருவரையும் மடக்கி பிடித்த பொது மக்கள், அவர்களை நையப்புடைத்துள்ளதுடன், ஹப்புத்தளை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

# லிட்டில்வெளி தோட்டத்தில் 110 பேருக்கு காணி உறுதிகள் வழங்கல்

**கம்பளை நிருபர்**

லிட்டில்வெளி தோட்ட மக்கள் 110 பேருக்கு ஒப்பனையுடன் காணிகள் வழங்கி வைக்கப்பட்டன.

கண்டி மாவட்டத்தில் லிட்டில்வெளி தோட்டத்தில் 2016 ஆம் ஆண்டு காலப் பகுதியில் தோட்டத்தில் ஒரு பகுதியை தனியார் ஒருவருக்கு கூறு போட்டு விற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.



அதன் போது லிட்டில் வெளி தோட்ட இளைஞர்கள். சிலரின் சிறந்த வழிகாட்டல்களுடன் அதற்கு எதிராக தமது எதிர்ப்புக்களையும் போராட்டங்களையும் நடத்தி வந்தார்கள்.

பல கட்ட பேச்சு வார்த்தைகள் போராட்டங்கள் என்பவற்றின் பயனாக லிட்டில் வெளி தோட்டத்தில் வசிக்கும் 110 குடும்பங்களுக்கு 8 பேர்ச்சஸ் காணி துண்டுகள் ஒப்பனையுடன் நேற்று முன்தினம் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வு நலன் புரி சங்கத்தின் செயற்பாட்டாளர்களான தஇராமசாமி,ஸ்ரீசத்திய சீலன், ரவிக்கண்ணன், கலாநிதி பிரபாகரன் போன்றவர்களினால் ஏற்பாது செய்யப்பட்டிருந்தது.

நிகழ்வில் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலு குமார்,மத்திய மாகாண சபையின் முன்னாள் தவிசாளர் மதியுகராஜா, முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர் காமிணி விஜய பண்டார ஆகியோர் கலந்து கொண்டனர்.

## பொலிஸ் சீருடையில் எரிபொருள் மோசடி; விசாரணைகள் ஆரம்பம்

நபர் ஒருவரிடமிருந்து மோட்டார் சைக்கிள் ஒன்றைப் பெற்றுக்கொண்டு, பொலிஸ் சீருடையுடன் சென்று, குறித்த மோட்டார் சைக்கிளுக்கு எரிபொருளைப் பெற்றுக்கொண்ட பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவருக்கு எதிராக பொலிஸ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த சந்தேகநபர் அலதெனிய பிரதேசத்திலுள்ள ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு பல தடவைகள் சென்று, எரிபொருளைப் பெற்றுக் கொண்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இவ்வாறு எரிபொருள் நிரப்புவதற்கு மோட்டார் சைக்கிளில் சென்ற சந்தேகநபரின் செயற்பாட்டை அறிந்துக் கொண்ட வரிசையில் நின்ற பொதுமக்கள், அவரை சுற்றிவளைத்து தாக்கிய போது, அவர் மோட்டார் சைக்கிளையும் போட்டு விட்டு ஒடியுள்ளார்.

குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தின் பாதுகாப்பு கெமெரா காணொளிகன் உதவியுடன் சந்தேக நபரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.



டுபாய் சாஜாவில் இயங்கும் லக்சிரி காகோ நிறுவனத்தின் இயக்குனர் எம்.எஸ்.எம். ரவுஸ்டீனினால் இலங்கையிலுள்ள மக்கள் தங்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களை மிக இலகுவான முறையில் பெற்றுக் கொள்வதற்கான முகவர் நிலையம் ஒன்றை டுபாயில் திறந்து வைக்கும் நிகழ்வு இலங்கைக்கான டுபாய் வடக்கு எமிரெட்டிக்கான பிரதான கவுன்சிலர் நிலந்த விஜயரட்ன பிரதம அதிதியாக கலந்து கொண்டு திறந்து வைத்தார். இதன்போது லக்சிரி காகோ நிறுவனத்தின் இயக்குனர் தொழிலதிபர் எம்.எஸ்.எம். ரவுஸ்டீன், கண்டி மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர் சிவபாலன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டதைப் படங்களில் காணலாம். படம்: மாவத்தகம தினகரன் நிருபர்

**1990ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிக்கடன் அறவீடுகள் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 9ஆம் பிரிவின் கீழான**

SINCE 1892

**பிரதேச அபிவிருத்தி வங்கி**

**பெறுமதிமிக்க சொத்து**

## ஏல விற்பனை

RDB

வடமத்திய மாகாணம், பொலன்னறுவை மாவட்டம், சிங்கள பற்று கோரளே, மெதிரிகிரிய பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட, 68/B கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள, கவுடுலாவெவ படிமுறை 01 கிராமத்தில் அமைந்துள்ள, "கஹம்பிலியாவ" என அழைக்கப்படும், அனுமதிப்பத்திரம் பெற்ற நில அளவையாளர் எச்.எம்.ஆர்.ரீ.கே. ஹேரத் அவர்களால் வரையப்பட்ட, 2007 ஜூலை 20 ஆம் திகதியிடப்பட்ட 4721 ஆம் இலக்க வரைபடத்தில், துண்டு 01 எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும், வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு, எல்லைகளாவன-

**வடக்கே** - தியசென்புர, கஹம்பிலியாவ வீதியில், துண்டு 204, வரைபட இல. අ.ජී.පො. 107 **கிழக்கே** - மெதிரிகிரிய, கஹம்பிலியாவ வீதியில், துண்டு 286, வரைபட இல. අ.ජී.පො. 107 **தெற்கே** - துண்டு 285, வரைபட இல.) අ.ජී.පො. 107 **மேற்கே** - இந்த நிலத்தின் எஞ்சிய பகுதி

**காணியின் விஸ்தீரணம்: ஏக்கர்** 01 : றூட் - 00 : பர்ச்சஸ் - 25.19

அதில் அமைந்துள்ள கட்டிடம், மரம், செடி, பழங்கள் ஆகிய அனைத்தும் உட்பட பிரதேச அபிவிருத்தி வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி

**2022ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 02ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 மணிக்கு**

**பிரதேச அபிவிருத்தி வங்கியின் கல்அமுன கிளை வளாகத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.**

**சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள கடுமையான பணிப்புரைகளுக்கு அமைய COVID 19 நெறிமுறைகளைப் பின்பற்றிய வகையில் ஏலவிற்பனை நடைபெறும்**

**தீர்மான அறிவித்தல்:**

தயவு செய்து 2018 மார்ச் 02 ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் 2018 மே 03 ஆம் திகதிய தினமின, டெய்லி நியூஸ் மற்றும் தினகரன் ஆகிய பத்திரிகைகளையும் பார்வையிடவும்.

**ஆதனத்தைச் சென்றடைதல்**

மெதிரிகிரிய நகரில் அமைந்துள்ள மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு அருகில் காணப்படும் நாற் சந்தியில் வலது புறமாக உள்ள தியசென்புர வீதிக்கு திரும்பவும். இந்த வீதியில் தியசென்புர நகரம் வரை சென்று, நகரின் நான்கு வழிச் சந்தியில் பொலன்னறுவை - கிரிமட்டியான வீதிக்கு வலப்புறம் திரும்பி கஹம்பிலியாவ சந்தி வரை சுமார் 03 கிலோமீற்றர் சென்றதும், குறித்த ஆதனம் வீதியின் வலது புறத்தில் அமைந்துள்ளதை அவதானிக்க முடியும்,

**கொடுப்பனவு செய்யும் முறை:**

ஏல விற்பனையில் வெற்றி பெற்ற கொள்வனவாளர், உடனடியாக பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 25% (இருபத்தைந்து சதவீதம்)
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய 1% விற்பனை வரி - (ஒரு சத வீதம்)
(3) ஏலதாரர் தரகு 2 ½ % (இரண்டரை சதவீதம்) மற்றும் அதற்கு பொருத்தமான சகல வரிகளும்
(4) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ. 1,500/-
(5) விற்பனைக்கான கட்டணங்கள் மற்றும் வேறு ஏதேனும் கொடுப்பனவுகள் இருப்பின் அவையும்
(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரை வரி

கொள்முதல் விலையின் மீதி 75% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள், பிராந்திய பொது முகாமையாளர், பிரதேச அபிவிருத்தி வங்கி, வட மத்திய மாகாண அலுவலகம், இல. 65/D, 4வது ஒழுங்கை, அபய பிளேஸ், அநுராதபுரம் என்ற முகவரியில் செலுத்தப்பட வேண்டும்.

தொலைபேசி இலக்கம்: 025-2223080, 025-2225214

மேலே கூறப்பட்டவாறு கொள்முதல் விலையில் மிகுதி, 30 நாட்களுக்குள் செலுத்தப்படாத சந்தர்ப்பத்தில் ஏற்கனவே செலுத்தப்பட்டுள்ள தொகையை (25%) பறிமுதல் செய்து குறித்த சொத்தை மீண்டும் ஏலவிற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

உரிய சொத்து தொடர்பான காணி உறுதி மற்றும் ஏனைய விபரங்களை மேற்கூறப்பட்டுள்ள முகவரியில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

**'முன்னறிவித்தலின்றி ஏல விற்பனையை நிறுத்தும்/ இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது'**

## ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம

**ஒரே தேசம், ஒரே ஏல விற்பனையாளர்**
**130 வருடகால மகோன்னத சேவை**

இணையதளம்: **www.sandslanka.com**

**தலைமை அலுவலகமும் காட்சியறையும்**
**24, டொரிங்டன் வீதி, கண்டி.**
**தொலைபேசி: 081-2227593**
**தொலை/பக்ஸ்: 081-2224371**
**மின்னஞ்சல்: schokmankandy@sltnet.lk**

125

**நகர அலுவலகம்**
**6A, பெயார் பீல்ட் கார்டன்,**
**கொழும்பு-8**
**தொலைபேசி:**
**011-2671467, 011-2671468**
**தொலை/பக்ஸ்: 011-2671469**

**மின்னஞ்சல்: schokman@samera1892.com**

# சம்பத் வங்கியின்

## வாடிக்கையாளர்களுக்கான அறிவித்தல்

31-12-2021 ம் திகதி வரை கைவிடப்பட்ட சொத்துக்கள்
சம்பந்தமான சட்டபூர்வமான அறிக்கை

- வங்கிச் சட்டத்தின் 72ஆம் பிரிவின் பிரகாரம் கீழ் குறிப்பிடப்பட்ட கணக்குகளும் சொத்துக்களும் கைவிடப்பட்ட சொத்துக்களாக கருதப்படும்.
- பத்து வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலமாக செயற்படுத்தப்படாமல் இருக்கும் கணக்கில் இடப்பட்ட பணம் மற்றும் வேறு வைப்புப் பணங்கள்
- தவணைக்காலம் பூர்த்தியாகிய பின்னர் வங்கியினால் அறிவித்தல் அனுப்பப்பட்டு 3 வருடங்களுக்குள் தொடர்பு கொள்ள தவறிய வாடிக்கையாளர்களின் பாதுகாப்பு பெட்டகங்களில் வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள்
- மேற்கூறப்படட் காரணங்களுகக் மைய மற்றும் வங்கிச் சட்டத்தின் 73(ை) பிரிவின் பிரகாரம் எமது வங்கியால் மத்திய வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்ட கைவிடப்பட்ட சொத்துக்கள் என கருதப்படட் வங்கிக் கிளைகளின் கணக்குகள் மற்றும் சொத்துக்கள் அடங்கிய அறிக்கையின் சாரம்சம் கீழே தரப்பட்டுள்ளது.
- அவ்வாறாயின் வாடிக்கையாளர்கள் க ீழ் வரும் கிளைகளில் தங்களது கணக்கு அல்லது பாதுகாப்பு பெட்டகம் கைவிடப்பட்ட சொத்துப் பிரிவுக்குள் அடங்குவதாக அனுமானித்தால், எங்களது பின்வரும் மாவட்டங்களிலுள்ள எந்தவொரு வங்கிக்கிளையிலும் இது சம்பந்தமான விடயங்களை பரிச ீலித்து பார்ப்பதற்கு வாய்ப்பு உள்ளது என்பதை தயவுடன் அறிவித்துக் கொள்கிறோம்.
- மேலும் 31.07.2022 ஆம் திகதிக்கு முன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள எந்த வகையிலான கொடுக்கல் வாங்கல்களையாவது மேற் கொண்டு வங்கியில் உள்ள உங்களது கைவிடப்பட்ட சொத்துக்களை மீள செயற்படுத்துவதற்கான நிலையை ஏற்படுத்திக் கொள்ளலாம்.
  - உங்களது கணக்கை செயற்படுத்துவதற்காக வங்கிகக் கடிதம் அனுப்புதல்
  - கணக்கின் கொடுக்கல் வாங்கல்களை உங்களது சேமிப்பு புத்தகத்தில் பதிவு செய்து கொள்ளல்
  - பணம் வைப்பிலிடல் அல்லது மீளப்பெறுதல்
  - உங்களது தேவைக்கு ஏற்ப கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியை மாற்றிக் கொள்ளல்
  - பாதுகாப்பு பெட்டகம் தொடர்பில் காலாவதியாகியுள்ள தவணைப் பணத்தை 31-07-2022 ஆம் திகதிக்கு முன் மீளச் செலுத்தல்
- இலங்கை மத்திய வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள கைவிடப்பட்ட சொத்து தொடரப் ான கணக்கறிக்கை அதன் இரகசியத் தன்மை மற்றும் உரிமையின் பாதுகாப்பை பேணுவதற்காகவும்இ மூன்றாம் நபர்களின் உரிமைக் கோரலை தவிர்கக் வேண்டியும் பிரசுரிக்கப்பட மாடட் ாது.
  - எவ்வாறாயினும் வாடிகன் கயாளர்களுக்கு அவர்களது கைவிடப்பட்ட சொத்து தொடரப் ான விபர அறிக்கையை ளஅள மூலமாக உரிய காலத்தில் பெற்றுக் கொளவ் ர் என்பதை தயவுடன் அறிவித்துக் கொள்கிறோம்.

| District | No of Accounts |
|---|---|
| அம்பாறை - 8 கிளைகள் | 452 |
| அனுராதபுரம் - 6 கிளைகள் | 390 |
| பதுளை - 5 கிளைகள் | 589 |
| மட்டக்களப்பு - 6 கிளைகள் | 446 |
| கொழும்பு - 59 கிளைகள் | 4235 |
| காலி - 7 கிளைகள் | 475 |
| கம்பஹா - 21 கிளைகள் | 2257 |
| அம்பாந்தோட்டை - 6 கிளைகள் | 203 |
| யாழ்ப்பாணம் - 8 கிளைகள் | 462 |
| களுத்துறை - 10 கிளைகள் | 934 |
| கணடி - 13 கிளைகள் | 734 |
| கேகாலை - 5 கிளைகள் | 326 |
| கிளிநொச்சி - 1 கிளைகள் | 69 |

| District | No of Accounts |
|---|---|
| குருநாகல் - 10 கிளைகள் | 1173 |
| மன்னார் - 1 கிளைகள் | 65 |
| மாத்தளை - 4 கிளைகள் | 232 |
| மாத்தறை - 7 கிளைகள் | 543 |
| மொனராகலை - 4 கிளைகள் | 174 |
| முல்லைத்தீவு - 1 கிளைகள் | 70 |
| நுவரெலியா - 3 கிளைகள் | 152 |
| பொலன்னறுவை - 3 கிளைகள் | 169 |
| புத்தளம் - 8 கிளைகள் | 280 |
| இரத்தினபுரி - 6 கிளைகள் | 776 |
| திருகோணமலை - 2 கிளைகள் | 161 |
| வன்னி - 2 கிளைகள் | 162 |

மேலதிக விபரங்களுக்கு எமது வாடிக்கையாளர் சேவை நிலையத்தை 011 2 30 30 50 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்பு கொள்ளவும் அல்லது அருகில் உள்ள சம்பத் வங்கிக் கிளையை நாடவும்.
**(e-mail "mgr.oper@sampath.lk")**

**www.sampath.lk** சம்பத் வங்கி

**கொழும்பு மாவட்ட நீதிமன்ற வழக்கு இல - DTS 47/11**
**சிலாபம் நீதிமன்ற வழக்கு இல 10/2022 (எஸ்னீசி இல)**

## பகிரங்க ஏல விற்பனை

"2021 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 14 ஆம் திகதி கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் மேலதிக மாவட்ட நீதவானின் கட்டளையின் பிரகாரம் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை செயற்படுத்தி,

(1) வயம்ப மாகாணத்தின் புத்தளம் மாவட்டத்தில் முன்னேஸ்வரம் பத்துவையில் பிட்டிகல் கோரளையின் சிலாபம் வடக்கு பதிவுப் பிரிவிற்குட்பட்ட மைக்குளத்தில் அமைந்துள்ள பொன்னவரன்பிட்டிய பன்கரன் தோட்டம் அனகிதங்கு இந்திப்பிட்டியவத்த மற்றும் அலம்பவத்த மற்றும் தற்போது கிறிஸ்டிதோட்டம் எனும் காணிக்கு வீ. பெரேரா, நில அளவையாளர் என்பவரினால் 1955 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16 ஆம் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட இல. 833 எனும் வரைபடத்தில் காணிக்குரிய எல்லைகள் : வடக்கிற்கு : மருத்துவமனையும், கிழக்கிற்கு: சிலாபம் தொடக்கம் "கொழும்பு வரையிலான நெடுஞ்சாலை, தெற்கிற்கு : ரீ.ஏ. டக்ளஸ் பெரேராக்கு உரித்தான இந்த காணியின் பிரித்து வேறாக்கப்பட்ட பகுதி மற்றும் மேற்கிற்கு : வீ. பெரேரா, நில அளவையாளரினால் 1956 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 18 ஆம் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட இல. 1004 எனும் அளவைபடத்தில் பிரித்து வேறாக்கப்பட்ட இந்த காணியின் பகுதி எனும் இந்த எல்லைக்குள் அமைந்துள்ள பர்ச்சர்ஸ் இருபது (ஏ:0:ரூ:0,பர்:20.0) விசாலங் கொண்ட தரைப்பகுதியில் அமைந்துள்ள கட்டிடம் மற்றும் அனைத்து சகலதும் உட்படவாகும்.

(2) வயம்ப மாகாணத்தின் புத்தளம் மாவட்டத்தில் முன்னேஸ்வரம் பத்துவையில் பிட்டிகல் கோரளையின் சிலாபம் பதிவுப் பிரிவிற்குட்பட்ட மைக்குளத்தில் அமைந்துள்ள பொன்னவரன்பிட்டிய பன்கரன் தோட்டம் அனகிதங்கு இந்திப்பிட்டியவத்த மற்றும் அலம்பவத்த மற்றும் தற்போது கிறிஸ்டிதோட்டம் எனும் காணிக்கு வீ. பெரேரா, நில அளவையாளர் என்பவரினால் 1956 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 18 ஆம் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட இல. 1004 எனும் வரைபடத்தில் காணிக்குரிய எல்லைகள் : வடக்கிற்கு: மருத்துவமனையும், கிழக்கிற்கு : வீ.பெரேரா, நில அளவையாளரினால் 1955 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16 ஆம் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட இல. 833 எனும் அளவைபடத்தில் பிரித்து வேறாக்கப்பட்ட இந்த காணியின் பகுதி, தெற்கிற்கு : ரீ.ஏ. டக்ளஸ் பெரேராக்கு உரித்தான இந்த காணியின் பிரித்து வேறாக்கப்பட்ட பகுதி மற்றும் மேற்கிற்கு : பரிமளத்தினுடைய இதன் மிகுதி காணி, எனும் இந்த எல்லைக்குள் அமைந்துள்ள பர்ச்சர்ஸ் இருபது (ஏ:0:ரூ:0,பர்:20.0) விசாலங் கொண்ட தரைப்பகுதியில் அமைந்துள்ள கட்டிடம் மற்றும் அனைத்து சகலதும் உட்படவாகும்.

2022 ஆம் ஆண்டு 08 மாதம் 18 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு குறித்த் இடத்தில் பகிரங்க ஏல விற்பனையில் கிரயம் செய்யப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றோம்.

விற்பனை தொடர்பான அறிவித்தலுக்காக **2022.07.15**ஆம் திகதி தினமின, தினகரன் மற்றும் டெய்லி நியுஸ் பத்திரிகைகளிலும், 2022.07.15ஆம் திகதி கொண்ட அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகையிலும் பார்க்கவும்.

**காணிக்கு பிரவேசிக்கும் மார்க்கம்**

கொழும்பு சிலாபம் பிரதான பாதையில் சிலாபம் - ஆனந்த வித்தியாலயம் முன்னிலையில் மற்றும் சிலாபம் மருத்துவமனைக்கு அருகாமையில் அமைந்துள்ள காணி.

**செலுத்தும் முறை**

கொள்வனவாளரினால் கொள்வனவு விலையின் நூற்றுக்கு இருபத்தைந்து சதவீதம் (25%) ஆதனத்தை கொள்வனவு செய்த பின்னர் உடனடியாக செலுத்தப்பட வேண்டியதுடன், கொள்வனவு விலையின் மிகுதி நூற்றுக்கு எழுபத்தைத்து சதவீதம் 75% விற்பனை செய்யப்பட்ட திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் பதிவாளரிடம் கையளிக்கப்படல் வேண்டும்.

ஏலதாரரின் கமிஷன் பணம், ஏலத்திற்காக செலவிடப்படும் அனைத்து போக்குவரத்து செலவுகள் மற்றும் ஏனைய செலவுகள் கொள்வனவாளரினால் செலுத்தப்பட வேண்டும்.

உரித்து உறுதியை சோதனையிடுவதற்காக மற்றும் மேலதிக விபரங்களை அறிந்துகொள்வதற்காக கீழ்க்காணும் நபரை தொடர்பு கொள்ளவும்.

**பதிவாளர் - மாவட்ட நீதிமன்றம் - சிலாபம்**

## மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை
## மேல் மாகாணம்

# கேள்விக்கான அழைப்பு

## மேல் மாகாண மருத்துவ நிறுவனங்களுக்கான மருத்துவ உபகரணங்களை வழங்குதல்

01. கொழும்பு-10, மாளிகாவத்த, செயலகக்கட்டிடத்தில் மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையின் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரால் கீழ்க்காணும் உருப்படிக்காக பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுவதுடன், கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் 2022.08.05ம் திகதி மு.ப. 10.30 இற்கு முடிவடையும்.

| கேள்வித் தொடர் இல. | கேள்வியின் பெயர் | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் (ரூ) | கேள்விக்கு முன்னரான கூட்டம் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|
| WD/PD/PRO/02/4/2022 | மேல் மாகாணத்திற்கான கூடிய அமுக்கமுடைய உயிர் காப்பு இயந்திரம் பெறுகை 2022 | 4,000.00 | 2022.07.29 மு.ப. 10.00 மு.ப. 10.30 |

02. கொழும்பு-10, மாளிகாவத்த, த.பெ. 876, மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையிலிருந்து 2022.07.15 முதல் - 2022.08.05 வரை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 மற்றும் பி.ப. 3.00 இற்கிடையில் பெற்றுக்கொள்ளக்கூடிய மாதிரிகளில் கேள்விகளை சமாப்பித்தல் வேண்டும்.
03. 2022.08.05ம் திகதி கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நேரம் முடிவடைந்தவுடன் கொழும்பு-10, மாளிகாவத்த, த.பெ. 876, மாகாண சுகதார சேவை பணிப்பாளர் (மே.மா) பணிமனையில் கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளுக்கு வருகை தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.
04. உபகரண உற்பத்தியாளரின் ஒரே பெயர் குறிப்பிடும் பிரதிநிதி/ அங்கீகாரம் பெற்ற முகவரிடம் மற்றும் கேள்வி ஆவணங்கள் விநியோகிக்கப்படும். கேள்வி ஆவணங்களை கோரும் வேளையில் இதனை உறுதி செய்வதற்காக எழுத்துமூல சான்றுகளை சமர்ப்பித்தல் வேண்டும்.
05. மேலதிக விபரங்களுக்கு மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் (மே.மா) பணிமனையை அழையுங்கள்.
    தொ.பே. இலக்கம் : 011-2437154/ 011-2434852
06. மேலதிக தகவல்களுக்கு தயவு செய்து http://www.healthdept.wp.gov.lk இணைய தளத்திற்கு பிரவேசிக்கவும்.
07. முழுமையான பெறுகை செயற்பாடு அல்லது பெறுகை விடயங்களின் ஒரு பகுதியை இரத்துச் செய்யும் அதிகாரம் பெறுகைக் குழுவிற்கு உரியது.

**மருத்துவர் - தம்மிகா ஜயலத்,**
**மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர்,**
**மேல் மாகாணம்.**

## அற்றோர்ணி அதிகாரத்தை இரத்துச் செய்தல்

இல. 534பீ, சீலரத்ன மாவத்த, ஹொரணவில் வசிக்கும், சமத் தேமி பிரசாத் அபயவிக்ரம (தே.அ.அ.இல- 197710500050) ஆகிய நான். இலங்கை சனநாயக சோஷலிச குடியரசிற்கு மற்றும் அதன் பொது மக்களுக்கு தெரிவிப்பதாவது, தெல்கந்த, நுகேகொட, பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட ஹொரண பகிரங்க நொத்தாரிசு எஸ். நிரோஷா வரந்தராகமவினால் எழுதி உறுதி செய்யப்பட்ட இல. 4ஏ, வல்விட்ட, ஹொரண என்ற இடத்தில் வசிக்கும் கம்புறுபிட்டிய ஆரச்சிகே சுரங்கி இரேஷிகா (தே.அ.அ.இல. 788210140V) இற்கு வழங்கப்பட்டுள்ளது. 1223 மற்றும் 2018.08.09ம் திகதிய அற்றோர்ணி தத்துவத்தை இத்தால் இரத்துச் செய்து இல்லாதொழிக்கப்படுவதாகவும் இதன் பின்னர் மேற்படி அட்டோர்ணி அதிகாரத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் எந்த கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமாகவும் என்னால் பொறுப்புக்கூறப்படமாட்டாது என்பதாகும்.

**சமத் தேமி பிரசாத் அபயவிக்ரம** 2018.08.09

மதீசன் இன்ஸ்டிடியூட் (பீவீடீ) எல்டீடி எனும் நிறுவனம் 2007 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனமாக 2022-06-24ஆம் திகதி PV 00259687 எனும் இலக்கம் சகிதம் கூட்டிணைக்கப் பட்டுள்ளதாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் சகல பொது மக்களுக்கும் அறிவிக்கப்படு கின்றது.
அந்த நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட முகவரி 200/2C, 1ஆம் ஒழுங்கை, சப்புமல் உயன, கொட்டகெதர வீதி, பட்டகெந்தர, பிலியந்தலை, கெஸ்பேவ.
**மஞ்சுளா செனெவிரத்ன,**
**முகாமைத்துவப் பணிப்பாளர்.**

### பெயர் மாற்றம்

சம்மாந்துறை இல. 49/D/1 பொலிஸ் வீதியில் வதியும் இமாமுடீன் முஹம்மட் றுஷான் (தே.அ.இல. 970090657 கொண்ட) நான் எனது பெயரை இமாமுடீன் மொஹமட் றுஷான் என. எனது சுய விருப்பத்தின் படி மாற்றி இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.
**இமாமுடீன் மொஹமட் றுஷான்**

### பெயர் மாற்றம்

சம்மாந்துறை இல. 12, தமிழ் பிரிவு 02 வைத்தியசாலை 5ம் வீதியில் வதியும் றாஹுல்லா முகம்மது பஸ்லான் (தே.அடையாள அட்டை இல. 94-3400644V) கொண்ட நான் எனது பெயரை றாஹுல்லா மொஹமட் பஸ்லான் என, எனது சுயவிருப்பத்தின் படி மாற்றிக்கொண்டேன் என, இலங்கை ஜனநாயக சோஷலிச குடி அரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.
**றாஹுல்லா மொஹமட் பஸ்லான்**

### அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 07ஆம் எண் கம்பனிகள் சட்டம் 9(1) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்:
**பிளெநட்.ஃ.பிக்ஸ் குளோபல் (பிவீடி) எல்டிடீ**

பதிவிலக்கம் : PV 00259975

பதிவு முகவரி :
இல. 10, வான் வீதி, புத்தளம்.

**கம்பனி செயலாளர்**
**அப்தா அலி ஸப்ரி**

**Repeat Your ad For Better Offers**

## கண்டி கடவத் சதர மற்றும் கங்கவட்ட கோரளை பிரதேச செயலகப் பிரிவு

கண்டி கடவத் சதர மற்றும் கங்கவட்ட கோரளை பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விற்றல் தொடர்பான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. கண்டி வட்டபுளுவ இல. 01 கள்ளு தவறணைகளை சில்லறைக்கு விற்கும் சிறப்புரிமைகளை வாங்குவதற்கு 2022/2023 குத்தகைக்கு விற்றல் தொடர்பான கேள்விப்பத்திரங்கள் 2022.08.24ம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.
2. கண்டி கொழும்பு வீதியில் இல. 01 பிறநாட்டு குடிவகை தவறணைகளின் சிறப்புரிமைகளை வாங்குவதற்கு 2022/2023 குத்தகைக்கு விற்றல் தொடர்பான கேள்விப் பத்திரங்கள் 2022.08.24ம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

மேலதிக விபரங்களுக்காக 2022.07.08ஆம் திகதி இலக்கம் 2,288 கொண்ட இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் கெசட் பத்திரத்தை பார்க்கவும்.

**யூ.ஜே.எம்.எஸ்.எஸ்.பீ. ஜயசிங்க**
**பிரதேச செயலாளர்**
**கண்டி.**

## சிறு விளம்பரம்

**வேலைவாய்ப்பு**



320

**வெற்றிடங்கள்**
**ஹோட்டல்கள், பேக்கரிகள்**

பேக்கரிக்கு மாலுப்பாண் கறி செய்ய ஆள் தேவை. சம்பளம் 60,000/=, சாப்பாட்டிற்கு 12,000/= கொடுக்கப்படும். வயது 25/40 வரை. தங்குமிடம் உண்டு. தொடர்பு 07 22151125. 041717

**For classified advertisements and for replies**
received in response to advertisements published under Lake House box numbers
Manager front office
**+94 112429341**
**Hotline 1949**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### காலநிலை மாற்றத்தினை தாக்குப்பிடிக்கும் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவ செயற்றிட்டம்

நீர்ப்பாசன அமைச்சு

CRIWMP

### (தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல்)

**IFB No.: CRIWMP/PMU/PROC/2022/GOODS/05**
திகதி: 2022.07.15

**அநுராதபுரம், திருகோணமலை, குருநாகல் மற்றும் புத்தளம் மாவட்டங்களிலுள்ள சம்பந்தப்பட்ட 14 (பதின்நான்கு) கமநல சேவை நிலையங்களுக்கு கிராமிய நீர்ப்பாசன முறைமை (VIS) பராமரிப்பு உபகரணங்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்**

01. இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது UNDP இன் தர அங்கீகாரம் பெற்ற முகவர் நிலையத்துடன் பசுமை காலநிலை நிதியத்திலிருந்து (GCF) காலநிலை மாற்றத்தினைத் தாக்குப்பிடிக்கும் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவ செயற்றிட்ட கிரயச் செலவிற்காக நிதியொன்றை பெற்றுள்ளதுடன் இந்நிதியத்தின் பகுதியொன்று மேலேயுள்ள வழங்கலுக்கு உரிய பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிட உத்தேசித்துள்ளது.
02. பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள அநுராதபுரம், திருகோணமலை, குருநாகல் மற்றும் புத்தளம் மாவட்டங்களிலுள்ள சம்பந்தப்பட்ட 14 (பதின்நான்கு) கமநல சேவை நிலையங்களுக்கு கிராமிய நீர்ப்பாசன முறைமை (VIS) பராமரிப்பு உபகரணங்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தலுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து காலநிலை மாற்றத்தினைத் தாக்குப்பிடிக்கும் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவ செயற்றிட்டத்தின் (CRIWMP) செயற்றிட்ட பெறுகைக் குழுத் தலைவரின் சார்பாக செயற்றிட்ட பணிப்பாளர், முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| தொ. இல. | மாவட்டம் | அடுக்கின் பெயர் | BRUSH CUTTERS | GUM BOOTS | SAFETY GOGGLES | GLOVES | WHEEL BARROWS | SHOVELS | SAND PANS |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | அநுராதபுரம் | அலுத்ஹலம்மில்லாவ | 19 | 19 | 19 | 19 | 19 | 76 | 57 |
| | | ரத்மலே | 10 | 10 | 10 | 10 | 10 | 40 | 30 |
| | | அடுக்கைகளுக்குப் புறம்பாக | 29 | 29 | 29 | 29 | 29 | 116 | 87 |
| 2 | திருகோணமலை | கும்புக் வெவ | 27 | 27 | 27 | 27 | 17 | 68 | 51 |
| | | எதாபெந்திவெவ | 28 | 28 | 28 | 28 | 16 | 64 | 48 |
| | | அடுக்கைகளுக்குப் புறம்பாக | 6 | 6 | 6 | 6 | 6 | 24 | 18 |
| 3 | குருநாகல் | கடவல | 16 | 16 | 16 | 16 | 16 | 64 | 48 |
| | | அடுக்கைகளுக்குப் புறம்பாக | 25 | 25 | 25 | 25 | 25 | 100 | 75 |
| 4 | புத்தளம் | கடவல | 12 | 12 | 12 | 12 | 9 | 36 | 27 |
| | | அடுக்கைகளுக்குப் புறம்பாக | 22 | 22 | 22 | 22 | 22 | 88 | 66 |
| **மொத்தம்** | | | **194** | **194** | **194** | **194** | **169** | **676** | **507** |

03. கேள்விகள் கையளிக்கப்பட்டு மூன்று (03) மாதங்களுக்குள் அநுராதபுரம், திருகோணமலை, குருநாகல் மற்றும் புத்தளம் மாவட்டங்களிலுள்ள சம்பந்தப்பட்ட 14 (பதின்நான்கு) கமநல சேவை நிலையங்களுக்கு கிராமிய நீர்ப்பாசன முறைமை (VIS) பராமரிப்பு உபகரணங்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல் என்பன பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.
04. விலைமனுக்கோரல் ஆவணத்தில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளவாறு தகவுத்திறன் மற்றும் செயல்முறைத் திறனுக்கு அமைவாக கண்டிப்பாக முதலில் விலைமனுக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு அவ்வாறு மதிப்பீடு செய்யப்பட்ட விலைமனுவானது போதுமானளவு பதிலிறுக்கக்கூடிய ஆகக்குறைந்த மதிப்பீடு செய்யப்பட்ட விலைமனுவை நிர்ணயிப்பதற்காக ஒப்பீடு செய்யப்படும்.
05. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
06. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை 0112672223 என்ற தொலைபேசி இலக்கத்தின் மூலமாகவும் tendercriwmp@gmail.com என்ற மின்னஞ்சலூடாகவும் நீர்ப்பாசன அமைச்சின் CRIWMP செயற்றிட்ட பணிப்பாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.
07. 2022-07-15ஆம் திகதி முதல் 2022-08-08ஆம் திகதி வரையான அலுவலக நேரங்களில் (மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரை) ஒவ்வொரு பொதிக்கும் 2,000.00 இலங்கை ரூபாவை மீளளிக்கப்படாத கட்டணமொன்றாக செலுத்திய பின்னர் CRIWMP செயற்றிட்ட பணிப்பாளருக்கு வழங்குநரின் வியாபார தலைப்புக் கடிதத்தில் (மூலப்பிரதி) எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம் கொழும்பு-10, T.B. ஜாயா மாவத்தை, 500ஆம் இலக்கத்திலுள்ள 12ஆம் மாடியின் நீர்ப்பாசன அமைச்சின் CRIWMP அலுவலகத்திலிருந்து ஆங்கில மொழியிலான விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
08. விலைமனுக்கள் திறக்கப்பட்ட நாள் முதல் 60 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும் என்பதுடன் (விலைமனுப்பிணையின் செல்லுபடியாகும் காலப்பகுதியானது 88 நாட்கள்) 100,000.00 ரூபா பெறுமதிக்கானதும் நீர்ப்பாசன அமைச்சின் CRIWMP, செயற்றிட்ட பணிப்பாளரின் பெயரில் வழங்கப்பட்டுள்ளதுமான விலைமனுப் பிணையொன்று விலைமனுக்களுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
09. விலைமனுதாரர் விலைமனுவின் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என்பவற்றை இரு தனித்தனியான உள்ளக தபாலுறைகளில் உள்ளிட்டு அவைகளின் மேல் 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதி' எனக் குறிப்பிட்டு அதன் பின்னர் அவ்விரு உறைகளையும் ஒரு வெளியக தபாலுறையில் உள்ளிட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் விலைமனு இலக்கத்தை தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.
10. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை 2022-08-09ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் செயற்றிட்ட பணிப்பாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம் அல்லது செயற்றிட்ட பணிப்பாளரின் அலுவலகத்தை வந்தடையும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பப்பலாம். தாமதமான சமர்ப்பித்தல்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் கிடைக்கப்பெற்ற விலைமனுக்கள் மூடும் நேரத்தின் பின்னர் ஒப்பந்தக்காரர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் 7ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள முகவரியில் உடன் திறக்கப்படும்.
11. கொள்வனவாளர் விலைமனுதாரர்களின் விலைமனுக்களைத் தயாரித்தல் அல்லது விநியோகித்தல் என்பவற்றுக்கான எந்தவொரு கிரயச் செலவுகள் அல்லது செலவினங்களுக்கும் பொறுப்பாகவிருக்கமாட்டார்.

**தலைவரின் சார்பாக,**
**செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**செயற்றிட்ட பணிப்பாளர்,**
**காலநிலை மாற்றத்தினை தாக்குப்பிடிக்கும் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவ செயற்றிட்டம்,**
**நீர்ப்பாசன அமைச்சு**
**12ஆம் மாடி, இல. 500, T.B. ஜயா மாவத்தை, கொழும்பு-10**

**இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு அரசாங்கம்**

## தபால் திணைக்களம் - இலங்கை

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### தகவல் தொழில்நுட்பவியல் உபகரணங்களை வழங்கல், ஒப்படைத்தல், நிறுவுதல் மற்றும் பராமரிப்பு.

**பெறுகை இல.: POST/PMD/05-02/IPS(QSF-01-A) /2022**

1. இலங்கை தபாற்சேவையின் தகவல் தொழில்நுட்பவியல் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காக சர்வதேச தபால் சங்கத்திடமிருந்து மானியமொன்றை இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது பெற்றுள்ளது.
2. பின்வரும் தகவல் தொழில்நுட்பவியல் உபகரணங்களின் வழங்கல், ஒப்படைத்தல், நிறுவுதல் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றிற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து இலங்கை தபால் திணைக்களத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

| தொகுதி இல. | விளக்கம் | எண்ணிக்கை | விலைமனுப்பிணை (இலங்கை ரூபாவில் அல்லது இலகுவாக மாற்றக்கூடிய நாணயத்தில் நிகரான தொகை) |
|---|---|---|---|
| 1. | Desktop Computers with UPS (un-interrupted power supply) | 1000 எண்ணிக்கைகள் | 1,672,000.00 ரூபா |
| 2. | Barcode Scanners | 1000 எண்ணிக்கைகள் | 400,000.00 ரூபா |
| 3. | Dot Matrix Printers | 1000 எண்ணிக்கைகள் | 450,000.00 ரூபா |
| 4. | Laptop Computers | 05 எண்ணிக்கைகள் | 18,500.00 ரூபா |

விலைமனுக்களின் ஆவண கோரிக்கையில் மேலும் வரையறுக்கப்பட்டுள்ளவாறு விலைமனுதாரர்கள் ஒரு தொகுதிக்கு அல்லது பல தொகுதிக்கு விலைமனுக்களை சமர்ப்பிக்கலாம்.

3. விலைமனுக்கோரலானது சர்வதேச போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் முறைமையின் மூலம் நடாத்தப்படும்.
4. விலைமனுக்கோரல் ஆவணத்தின் ITB 11.1(e) இல் தகைமைத் தேவைப்பாடுகள் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளன. மேலதிக விபரங்கள் விலைமனுக்கோரல் ஆவணத்தின் அட்டவணையில் (5 ஆம் பிரிவு) வழங்கப்பட்டுள்ளன.
5. தகுதியுள்ள விலைமனுதாரர்கள் பின்வருமாறு: வெளிநாட்டு உற்பத்தியாளர்கள்/ வழங்குநர்கள், அதிகாரம் பெற்ற உள்ளூர் வழங்குநர்கள் மற்றும் உள்ளூர் முகவர்கள்.
6. விலைமனுவின் செல்லுபடியாகும் காலஎல்லை: விலைமனுக்கள் அவைகளை திறக்கும் திகதியிலிருந்து 119 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
7. விலைமனுவின் உத்தரவாத கால எல்லை: விலைமனுப் பிணையின் செல்லுபடியாகும் கால எல்லையானது விலைமனுக்களை திறக்கும் திகதியிலிருந்து 147 நாட்கள் அல்லது மேற்பட்டது.
8. ஆர்வமும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை 011-4927249 / 0115-746194 ஆகிய தொலைபேசி இலக்கங்களினூடாக வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் பெறுகைக்கான கணக்காளரிடமிருந்து பெற்று கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

    **கணக்காளர் (பெறுகை),**
    **தபால் திணைக்களம்,**
    **தரை மாடி, தபால் தலைமையகம்,**
    **இல. 310, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை,**
    **கொழும்பு-01000,**
    **இலங்கை.**

    **தொலைபேசி:** 011-4927249/ 0115-746194
    **தொலைநகல் இலக்கம்:** 011-2428726
    **இலத்திரனியல் அஞ்சல் முகவரி:** acct.procurement@slpost.lk

9. மீளளிக்கப்படாத கட்டணமான 40,000 இலங்கை ரூபாவை அல்லது இலகுவில் மாற்றக்கூடிய நாணயத்தில் செலுத்திய பின்னர், கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.

    **கணக்காளர் (பெறுகை),**
    **தபால் திணைக்களம்,**
    **தரை மாடி, தபால் தலைமையகம்,**
    **இல. 310, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை,**
    **கொழும்பு-01000,**
    **இலங்கை.**

    பணக்கொடுப்பனவு முறைமையானது மேலே குறிப்பிட்டுள்ள அலுவலகத்திற்கு ரொக்கப் பணத்தில் அல்லது மக்கள் வங்கியின் 046-1001-49027330 என்ற தபால்மா அதிபரின் கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கப்படல் வேண்டும்.

10. 2022 ஒகஸ்ட் 30 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

    **தலைவர்,**
    **திணைக்கள பெறுகைக் குழு,**
    **தபால் திணைக்களம்,**
    **இல. 310, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை, கொழும்பு-01000,**
    **இலங்கை.**

    தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். மேலே காட்டப்பட்டவாறான செல்லுபடியாகும் தன்மையிலுள்ள 'விலைமனு பிணையொன்றுடன்' அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

11. இலங்கை, கொழும்பு-01000, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை, 310 ஆம் இலக்கத்திலுள்ள தபால் தலைமையகத்தில் 2022 ஒகஸ்ட் 02 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு இது தொடர்பான விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**தபால் திணைக்களம், இல. 310,**
**டி.ஆர். வியேஜவர்தன மாவத்தை,**
**கொழும்பு-01000,**
**இலங்கை.**
**15.07.2022.**

# கிழக்கின் குரல்

## அம்பாறை மாவட்டத்தில் வேளாண்மை அறுவடை இயந்திரங்களின் கூலி அதிகரிப்பு



**அக்கரைப்பற்று மத்திய நிருபர்**

அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப்பற்று, பொத்துவில் மற்றும் ஏனைய சில இடங்களிலும் வேளாண்மை அறுவடை ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இருந்த போதிலும் எரிபொருள் தட்டுப்பாட்டினால் அறுவடை இயந்திரங்களுக்கு தட்டுப்பாடு நிலவி வருவதுடன், மிகக் கூடுதலான கூலியும் அறவிடப்பட்டு வருகிறது.

உரத் தட்டுப்பாடு, எரிபொருள் தட்டுப்பாடு அதன் விலையேற்றத்தினை எதிர்கொண்டு விவசாயச் செய்கையை மேற்கொண்ட விவசாயிகள், பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். எதிர்பார்த்த விளைச்சல் கிடைக்கவில்லை. அதற்கான விலையேற்றமும் இல்லை. இவ்வாறிருக்க ஒரு ஏக்கருக்கு சுமார் 19,000 ரூபா அறுவடை இயந்திர கூலியாகவும், நெல் கட்டும் தொழிலாளர்களுக்கு ஏக்கருக்கு 3,000 ரூபாவும் அறவிடப்பட்டு வருகின்றது.

மிகக் கூடுதலான கூலி அறவிடப்பட்டு வருகின்ற போதிலும் வேளாண்மை அறுவடை செய்வதற்கு எரிபொருள் வழங்குபவர்களுக்கு மாத்திரமே அறுவடை என்ற அடிப்படையிலேயே அறுவடை இடம்பெற்று வருகிறது. எரிபொருள் வழங்க முடியாதவர்களின் வேளாண்மை அறுவடை செய்ய முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. கமநல சேவை நிலையங்களினால் விவசாயிகளுக்கு எரிபொருள் பெற்றுக் கொள்ள வழங்கப்பட்டுள்ள அனுமதிகளுக்கு இதுவரை எரிபொருள் வழங்கப்படவில்லை.



கிண்ணியாவில் தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களுக்கு வீட்டுத் தோட்டம் செய்வதற்கான மரக்கன்றுகள் கிண்ணியா பிரதேச செயலகத்தில் வியாழக்கிழமை (14) வழங்கி வைக்கப்பட்ட போது,... படம்: கிண்ணியா தினகரன் நிருபர்

## சர்வகட்சி அரசில் ஜனாதிபதியாக சஜித், பிரதமராக அனுரகுமாரவும் நியமிக்கப்பட வேண்டும்

### அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம்

**ஒலுவில் விசேட நிருபர்**

சர்வகட்சி அரசாங்கத்தில் புதிய ஜனாதிபதியாக சஜித் பிரேமதாசவும், பிரதமராக அனுரகுமார திஸாநாயக்கவும் நியமிக்கப்பட வேண்டுமென, அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம் மற்றும் இலங்கை மக்கள் ஜனநாயக கட்சிகளின் தலைவர் எஸ். லோகநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இன்று இலங்கை வரலாற்றில் மிக பொன்னான நாள். மக்கள் போராட்டம் வெற்றி பெற்ற மகத்தான தினம். இம்மகிழ்ச்சியில் நாமும் பங்கேற்கின்றோம். மக்கள் போராட்டத்தின் மூலம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விரட்டியடிக்கப்பட்டுள்ளார். புதிய ஜனாதிபதி, புதிய பிரதமர் ஆகியோர் நியமிக்கப்படுதல் வேண்டும். நாம் அடையாளம் கண்ட வகையில் சஜித் பிரேமதாச, அனுரகுமார திஸாநாயக்க ஆகியோரும் இந்நாட்டை தலைமை ஏற்று நடத்துவதற்கு மிக பொருத்தமானவர்கள்.



சஜித் ஜனாதிபதியாக, அனுர பிரதமராகவும் நியமிக்கப்பட வேண்டும் என்று நாம் முன்மொழிகின்றோம். ரணில் விக்கிரமசிங்க உடனடியாக பிரதமர் பதவியில் இருந்து விலகி வழி விட வேண்டும்.

இந்த அரசாங்கத்தை தீர்மானிக்கின்ற சக்திகளாக போராட்டக்காரர்கள் தொடர்ந்தும் இருந்து இயங்குதல் வேண்டும். அதேபோல் வடகிழக்கிலும் இவ்வாறான மக்கள் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

## வாழைச்சேனை மீனவர்கள் ஹம்பாந்தோட்டை ஆழ்கடலில் மீட்பு



ஹம்பாந்தோட்டை ஆழ்கடலில் தத்தளித்த வாழைச்சேனை பகுதியைச் சேர்ந்த மூன்று மீனவர்கள் மீட்கப்பட்டுள்ளதாக துறைமுக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வாழைச்சேனை துறைமுகத்திலிருந்து கடந்த 9 ஆம் திகதி ஆழ்கடலுக்கு மீன்பிடிக்க இயந்திரப் படகில் மூன்று மீனவர்கள் சென்றிருந்தனர்.

இவ்வாறு சென்ற இயந்திரப் படகின் என்ஜின் பழுதடைந்ததால் மூன்று மீனவர்களும் ஹம்பாந்தோட்டைகடற்பரப்பில்தத்தளித்துள்ளனர்.

தத்தளித்த மூன்று மீனவர்களும் கப்பல் ஒன்றில் நேற்று மீட்கப்பட்டு, காலி துறைமுகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில், மீனவர்கள் சென்ற 34 அடி நீளமான இயந்திரப் படகை கரைக்கு கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## அம்பாறை மாவட்டத்தில் எரிபொருள் விநியோகம் கணனிமயப்படுத்தல்

### அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவிப்பு

**ஒலுவில் விசேட நிருபர்**

அம்பாறை மாவட்டத்தில் எரிபொருள் விநியோக செயற்பாட்டினை வினைத்திறன்மிக்கதாக செயற்படுத்தும் நோக்கில் எரிபொருள் விநியோகம் கணனி மயப்படுத்தப்படவுள்ளதாக, அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ. டக்ளஸ் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலகங்களுக்கும் சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளார்.

இந்த கணனி முறைமையின் முதற்கட்ட செயற்பாடாக வாகனங்களின் தரவுகள் சேகரிக்கப்பட்டு பதிவேற்றம் செய்ய வேண்டும். ஒவ்வொரு வாகனத்திற்கும் ஒவ்வொரு விண்ணப்பப்படிவம் வெவ்வேறாக பூர்த்தி செய்யப்படல் வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பப்படிவங்களை கிராம உத்தியோகத்தரினூடாக பொது மக்களுக்கு வழங்கி, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை மீண்டும் கிராம உத்தியோகத்தர்கள் பிரதேச செயலகத்தில் ஒப்படைக்க வேண்டுமென கேட்கப்பட்டுள்ளது.

கிராம சேவகர்கள் ஊடாக விண்ணப்பங்கள் சேகரிக்கப்படும் போது பொது மக்கள் பிரதேச செயலகங்களுக்கு வருவதை தவிர்த்துக் கொள்ள முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இத்தரவுகள் சேகரிக்கும் செயற்பாடானது ஒரு வாரத்திற்குள் பூர்த்தி செய்ய வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## மட்டக்களப்பில் புதிய உள்ளக நகர போக்குவரத்து சேவை





**மட்டக்களப்பு விசேட நிருபர்**

தற்போதைய எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக போக்குவரத்துக்கள் மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் பொதுமக்கள் பலசிரமங்களை எதிநோக்குகின்றனர்.

அவர்களின் நலன் கருதி புதிய உள்ளக நகர போக்குவரத்து சேவை ஒன்று நேற்று (14) மட்டக்களப்பு மாமாங்கச் சந்தியில் ஆரம்பிக்கப்பட்டது. மட்டக்களப்பு மாநகரசபையின் மக்கள் நலன்கருதிய திட்டத்தின் கீழ் ஹப்பி ஹோம் லங்கா பிரைவேட் கம்பனியுடன் இணைந்து குறித்த சிற்றி ரைட் சேவையை மட்டக்களப்பு ஆயர் இல்லத்தின் முன்னாள் குருமுதல்வர் அருட்தந்தை ஏ.ஜேசுதாசனின் ஆசீர்வாதத்தைத் தொடர்ந்து மாநகர முதல்வர் தி.சரவணபவன், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் க.கருணாகரன், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சுகுணன் குணசிங்கம் ஆகியோர் நாடாவை வெட்டி புதிய பஸ் சேவையை ஆரம்பித்து வைத்தனர்.

மாமாங்கச் சந்தியிலிருந்து ஆரம்பித்து பார் வீதி வழியாக கிழக்கு பல்கலைக்கழக மருத்துவ பீடம், அரசடி மணிக்கூட்டுக்கோபுரம், நகர பொலிஸ் நிலையம், காந்திப் பூங்கா, பிரதேச செயலகம், வைத்தியசாலை வீதி, கோவிந்தன் வீதி, இ.போ.ச பஸ் நிலையம், தாண்டவன்வெளிச் சந்தி, ரயில் நிலையம், எல்லை வீதி வழியாக மீண்டும் மாமாங்கச் சந்தியை சென்றடைந்தது.

## மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி உத்தியோகத்தர்களின் பணி பகிஷ்கரிப்பு முடிவுக்கு



**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மேற்கொண்ட பணி பகிஷ்கரிப்பை நேற்று (14) வியாழக்கிழமை கைவிட்டு கடமைக்கு திரும்பினர்

சகல சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களையும் பணிப் பகிஷ்கரிப்பை கைவிட்டு கடமைக்கு திரும்புமாறு அகில இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர் சங்கம் வேண்டுகோள் விடுத்ததையடுத்து சகல சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் வியாழக்கிழமை கடமைக்கு சமுகமளித்தனர். எரிபொருள் பெற்றுத் தருமாறு கோரியும் சமுர்த்தி உத்தியோகத்தர்களை அத்தியாவசிய சேவைக்குள் உள்வாங்குமாறு கேட்டும் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் பணி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மேற் கொண்ட போராட்டம் வெற்றியளித்துள்ளதாக அகில இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட கிளையின் தலைவர் என்.ரவீந்திரகுமார் தெரிவித்தார்.

## நாட்டுக் கோழிகளை திருடியவர் 01 இலட்சம் ரூபா சரீரப்பிணையில் விடுதலை

**பாலமுனை தினகரன் நிருபர்**

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அக்கரைப்பற்று பதியில் நாட்டுக் கோழிகள் திருடிய ஒருவர் ஒரு இலட்சம் ரூபா சரீரப்பிணையில் அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அக்கரைப்பற்று பிரதேசத்தில் கோழிகளை திருடியதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டையடுத்து சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.எச்.எம்.ஹம்ஸா முன்னிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை(12)ஆஜர்படுத்திய போது குற்றத்தை ஒப்புக் கொண்ட நபருக்கு மேற்படிபிணை வழங்கப்பட்டது.

நாட்டுக் கோழிகளை வளர்த்து வந்த நபர் ஒருவரது வீட்டில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு(08) கோழிக்கூட்டை உடைத்து அவர் வளர்த்து வந்த 89 நாட்டுக் கோழிகளில் 45,000 ரூபா பெருமதியான 25 நாட்டுக் கோழிகள் களவாடப்பட்டிருந்தன.

சம்பவம் தொடர்பாக அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தில் கோழி உரிமையாளர் செய்திருந்த முறைப்பாட்டையடுத்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் சந்தேகத்தின் பெயரில் ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றில் குறித்த நபரை ஆஜர் செய்த போது சந்தேக நபர் கறுப்பு,வெள்ளை, செவலை ஆகிய நிறங்களிலான 12 கோழிகளை களவாடியதாக ஒப்புக் கொண்டதையடுத்தே சந்தேக நபர் ஒரு இலட்சம் ரூபா பிணையில் விடுவிக்கப்பட்டார்.

## மட்டு.மாவட்டத்தில் 4,000 சமையல் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகம்

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

கடந்த ஒன்றரை மாதத்துக்கு பின்னர் மட்டக்களப்பு மாவட்டத்தில் மீண்டும் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் நேற்று விநியோகிக்கப்பட்டது.

மட்டக்களப்பு, காத்தான்குடி மற்றும் கல்லடி போன்ற பிரதேசங்களுக்கு சமையல் எரிவாயு சிலிண்டர்கள் வழங்கப்பட்டன. மட்டக்களப்பு மாவட்டத்துக்கு 4,000 சமையல் எரிவாயு சிலிண்டர்கள் கொண்டு வரப்பட்டு, ஒரு குடும்ப அட்டைக்கு ஒன்று வீதம் பிரித்து வழங்கப்பட்டன.



காத்தான்குடி, ஹிஸ்புல்லாஹ் விளையாட்டு மைதானத்தில் வைத்து காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள குடும்பங்களுக்கு காத்தான்குடி பிரதேச செயலாளர் உதய ஸ்ரீதர் முன்னிலையில் சமையல் எரிவாயுகள் விநியோகிக்கப்பட்டன. இதன்போது பொலிஸார் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

# பாகிஸ்தான் தொடருக்கான இலங்கை அணி அறிவிப்பு




பாகிஸ்தான் அணிக்கு எதிராக நடைபெறவுள்ள இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடருக்கான 18 பேர்கொண்ட இலங்கை அணி உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐசிசி டெஸ்ட் சம்பியன்ஷிப்புக்கான முக்கியமான இந்த தொடர் நாளை 16ம் திகதி காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

அறிவிக்கப்பட்டுள்ள இலங்கை குழாத்தில், அவுஸ்திரேலிய தொடரிலிருந்து பாரிய மாற்றங்கள் ஏற்படுத்தப்படவில்லை. சகலதுறை வீரர் சாமிக்க கருணாரத்ன, சுழல் பந்துவீச்சாளர்களான லசித் எம்புல்தெனிய, லக்ஷித மானசிங்க மற்றும் பிரவீன் ஜயவிக்ரம ஆகியோர் அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு பதிலாக புதிய வீரர்கள் இணைக்கப்படாத போதும், அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டிக்கான அணியில் இணைக்கப்பட்டிருந்த துனித் வெல்லாலகே, மஹீஷ் தீக்ஷன மற்றும் பிரபாத் ஜயசூரிய ஆகியோர் தங்களுடைய இடங்களை தக்கவைத்துள்ளனர். பாகிஸ்தான் அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டி கொழும்பு ஆர்.பிரேமதாஸ சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் எதிர்வரும் 24ம் திகதி ஆரம்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### இலங்கை அணி

திமுத் கருணாரத்ன (தலைவர்), பெதும் நிஸ்ஸங்க, ஓசத பெர்னாண்டோ, அஞ்சலோ மெத்திவ்ஸ், குசல் மெண்டிஸ், தனஞ்சய டி சில்வா, கமிந்து மெண்டிஸ், நிரோஷன் டிக்வெல்ல, தினேஷ் சந்திமால், ரமேஷ் மெண்டிஸ், மஹீஷ் தீக்ஷன, கசுன் ராஜித, விஷ்வ பெர்னாண்டோ, அசித பெர்னாண்டோ, டில்ஷான் மதுசங்க, பிரபாத் ஜயசூரிய, துனித் வெல்லாலகே, ஜெப்ரி வெண்டர்சே.



# முதல் முறையாக பட்டம் வென்றார் எலினா ரிபாகினா

விம்பிள்டன் டென்னிஸ் தொடரின் இறுதி ஆட்டத்தில் துனிசியா வீராங்கனை ஒன்ஸ் ஜபீரை எதிர்கொண்டார். முதல் செட்டை இழந்த எலினா அடுத்த இரு செட்களை கைப்பற்றி சம்பியன் பட்டம் வென்றார். கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற விம்பிள்டன் டென்னிஸ் தொடர் லண்டனில் நடந்து வருகிறது. இதில், பெண்கள் ஒற்றையர் பிரிவில் இன்று நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் துனீசியாவின் ஒன்ஸ் ஜபீர், கஜகஸ்தான் வீராங்கனை எலினா ரிபாகினாவுடன் மோதினார். ஆரம்பம் முதலே விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் 6-3 என முதல் செட்டை ஒன்ஸ் ஜபீர் கைப்பற்றினார். அடுத்து சுதாகரித்துக் கொண்ட எலினா ரிபாகினா 6-2, 6-2 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று சாம்பியன் பட்டம் வென்றார். இது எலினா ரிபாகினா வென்ற முதல் சம்பியன் பட்டம் என்பது குறிப்பிடத்தக்கது.

OBSERVER SLT-MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2022
44th
SLTMOBITEL The Connection

44th OBSERVER SLT- MOBITEL
மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2022

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் OBSERVER SLT- MOBITEL மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2022
இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2022
தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ..........
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை : ..........
(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)
பாடசாலை : ..........
வாக்களித்தவர் பெயர் : ..........
முகவரி : ..........
மொபைல் இல. : ..........

SUNDAY OBSERVER

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:
1வது பரிசு : ரூ. 2,500 2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

44வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10 எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

நிபந்தனைகள்:
SLT- MOBITEL நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்குபெற முடியாது.

ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 16-07-2022 இல. 16




## ஆர்ப்பாட்டக்காரர்களால் கையளிக்கப்பட்ட ஜனாதிபதி மாளிகை






















ஆர்ப்பாட்டக்காரர்களால் கைப்பற்றப்பட்டு மக்கள் பார்வைக்காக வழங்கப்பட்டிருந்த கொழுப்பு ஜனாதிபதி மாளிகை ஆர்ப்பாட்டக்காரர்களால் நேற்று கையளிக்கப்பட்ட பின்னர் எடுக்கப்பட்ட படங்கள்.
(படங்கள்: சுலோச்சன கமகே,ருக்மல் கமகே)

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஜுலை மாதம் 15ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.